# உதயன்




www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 004 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 15 வெள்ளிக்கிழமை (30/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# பல்கலைக்கழகத்துக்குள் படைகளுக்கு என்ன வேலை?

## உயர்கல்வி அமைச்சரிடம் மாவை எம்.பி. சூடான கேள்வி
## சம்பவத்துக்கு அரசே முழுப்பொறுப்பு என்றும் முழக்கம்

கொழும்பு, நவம்பர்30

யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் படையினரை அனுப்பியது யார்? அவர்களுக்கு அங்கு என்ன வேலை? எனக் கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இதற்கு உயர்கல்வி அமைச்சர் உரிய பதில ளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாவை இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஈ.சரவணபவன் உண்மை நிலைமையை நேரில் கண்டறியச் சென்றபோது அவருடைய வாகனம் இராணுவத்தினரின் முன்னிலையிலேயே தாக்கப்பட்டுள்ளது.



இதன் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார்? உயர்கல்வி அமைச்சர் இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் இருக்கின்றார். உங்களுடைய உயர் கல்வி அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் யாழ். பல்கலைக்கழகத்தினுள் இராணுவம் சென்றது எப்படி? இராணுவத்தை அங்கே அனு

பார்க்க பக்கம் 4




யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீதான இராணுவத் தாக்குதலை கண்டித்து போரதனை பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### பல்கலைக்கழக சுற்றாடலில் தொடர்ந்தும் படையினர்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் நேற்று வியாழக்கிழமையும் இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழக விடுதிகளைச் சூழப் பொலிஸார் குழுமியுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தை படையினரும், பொலிஸாரும் இணைந்து அடிதடி நடத்திக் கலைத்திருந்தனர். படையினரதும் பொலிஸாரதும் மூர்க்கத்தனமான தாக்குதலால் பல மாணவ, மாணவியர் காயமடைந்தனர்.

இதனை அடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி

பார்க்க பக்கம் 4

## சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மிரட்டல்

### வைத்தியசாலை விடுதியை விட்டு மறைந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 30.

இராணுவத்தினராலும், பொலிஸாரினாலும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களை, புலனாய்வாளர்கள் மிரட்டி வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றியுள்ளதாக 'உதயனுக்கு' தகவல்கள் கிடைத்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதியான போராட்டத்தை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து அடிதடி நடத்திக் கலைத்தனர். இதன்

பார்க்க பக்கம் 4

### முறையிட்டால்தான் நடவடிக்கை

#### டி.ஐ.ஜி. சொல்கிறார்

யாழ்ப்பாணம், நவ. 30

பல்கலைக்கழக விடுதிக்குள் இராணுத்தினர் அத்துமீறி நுழைந்தது தொடர்பாகவோ அல்லது பொலிஸாரால் மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலோ எதுவித முறைப்பாடும் செய்யப்படவில்லை. முறைப்பாடு செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி) எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போதே எரிக்பெரேரா

பார்க்க பக்கம் 4

### பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கடந்த 27ஆம், 28 ஆம் திகதிகளில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின்

பார்க்க பக்கம் 4

## இரண்டு வாரங்களுக்குள் முடிவு இல்லையேல் கடலில் போராட்டம்

### இந்திய மீனவர்களுக்கு எதிராக பேரணி

யாழ்ப்பாணம்,நவ.30

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பாக இரு வாரங்களுக்குள் முடிவு எடுக்கப்படாவிட்டால் கடலில் இறங்கி மாபெரும் போராட்டம் நடத்தப்படும். என யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

# யாழ். தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா கடும் அதிருப்தி!

## கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்ய அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, நவ.30

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நடத்திய கொடூர-கண்மூடித்தனமான தாக்குதல் தொடர்பில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள அமெரிக்கா, கருத்துச் சுதந்திரம் இலங்கையில் உறுதிப் படுத்தப்படவேண்டுமென நேற்று திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறை மற்றும் பல்கலைக் கழகச் சமூகத்துக்குக் கடந்த சில தினங்களாகப் புடைத்

பார்க்க பக்கம் 4

# ஊடக சுதந்திரம் கேள்விக்குறி

## தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் கண்டனம்

கொழும்பு, நவ.30

'உதயன்' ஆசிரியர் மற்றும் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளேடுகளின் நிர்வாக இயக் குநர் ஈ.சரவணபவன் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் ஊடக ஜனநாயகத்தைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். தாக்குதல் நடத்தியவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. அந்த ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் 'உதயன்' நாளேடு 1990ஆம் ஆண்டில் இருந்து பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற தாக்குதலையும் நோக்க வேண்டியுள்ளது. தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஒருபோதும் கைது செய்யப்படுவதில்லை.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் தாக்குதலுக்கு உள்ளான உதயன் ஆசிரியரின் முகத்தில் காயம் ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளரின் மிலேச்சத்தனம் அரசியல் தீர்வு கேள்விக்குறி

## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆணைக்குழு கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 30

அண்மைக்காலமாக ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளையும் மக்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல்களால் அரசியல் தீர்வு கேள்விக்குறியாக உள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கார்த்திகைத் தீபமேற்றுவதற்குத் தடையெதுவுமில்லையென்றும் இந்துக்கள் தமது சமயக் கடமைகளை எதுவித அச்சமுமின்றி நிறைவேற்றலாம் என்றும் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவித்திருந்ததை அடுத்து, பல்வேறு இடங்களில் பொதுமக்கள் சிட்டி விளக்குகளை ஏற்றி கார்த்திகைத் தீபத்திருநாளைக் கொண்டாடினர். அப்போது பல இடங்களில் இராணுவத்தினர் வந்து விளக்குகளைக் கொளுத்தக்கூடாதென எச்சரித்து, விளக்குகளை அணைத்துள்ளனர். சில இடங்களில் உந்துருளிகளில் வந்த 'மர்ம நபர்கள்' சிட்டி விளக்குகளைத் தட்டி வீழ்த்தி அச்சுறுத்தும் பாணியில் செயல்பட்டும் உள்ளனர்.

அத்துடன் 27.11.2012 அன்று பல்கலைக்கழக வளாகத்தினுள் இராணுவத்தினர் மாணவர், மாணவியரின் விடுதிகளுள் புகுந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளமையையும் பின்னர் 28.11.2012 அன்று காலை அமைதியாகச் சென்ற மாணவர் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் மேற்கொண்டமையையும் அங்கு வந்த பத்திரிகையாளர்கள் மீதும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் மீதும் தாக்குதல் மேற்கொண்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதுபோன்ற தொடர் செயற்பாடுகள் மக்களின் நல் எண்ணத்தைப் பெற எவ்விதத்திலும் உதவப்போவதில்லை. ஏற்கனவே அரசு தாம் முன்னெடுப்பதாகச் சொல்லும் இனப்பிரச்சினைக்கான தீர்வின் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள சந்தேகங்கள் இதுபோன்ற செயற்பாடுகளால் மேலும் உறுதி அடைகின்றன.

தமிழ் மக்களின் நல்லெண்ணத்தை வென்றெடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடும்படி ஆட்சியாளரையும் இராணுவத்தையும் பொலிஸாரையும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (த)

# மர்மப் பொதியால் ஓமந்தையில் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்குச் சென்ற தனியார் பஸ்ஸில் சந்தேகத்துக்கு இடமாக இருந்த பயணப் பொதியால் பரபரப்பு ஏற்பட்டது. ஓமந்தை சோதனைச் சாவடியில் இதனை எவரும் உரிமை கோராததால் பயணிகள் மறித்து வைக்கப்பட்டு ஓமந்தை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு பதிவுகளின் பின்னர் மாலை 6 மணிக்கு தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டனர்.

நீண்ட நேரம் இடைநடுவில் பயணிகள் தடுத்து வைக்கப்பட்டதால் குழந்தைகள், பெண்கள் அவதியுற்றதுடன் இரவு ஆனதால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

**குழந்தைகள், பெண்கள் அவதியுற்றதுடன் இரவு ஆனதால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.**

கிளிநொச்சி தனியார் பஸ்நிலையத்தில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு பயணித்த பஸ்ஸிலேயே மர்மப் பொதி காணப்பட்டுள்ளது.

பஸ் ஓமந்தை சோதனை நிலையத்தில் மறிக்கப்பட்ட போது அதனை எவரும் உரிமை கோரவில்லை.

இதனால் இராணுவத்தினர் பஸ்ஸைத் தொடர்ந்து பயணிக்க விடாது பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். அங்கு பொலிஸார் பயணிகளின் முழு விவரங்களையும் பதிவு செய்தபின் மாலை 6.15 மணியளவில் பஸ்ஸை பயணிக்க அனுமதித்தனர்.

இதனால் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். (ஐ)

# இறுதிப் போரில் காணாமற்போனோர்; ஒன்றரை மாதத்தில் 70 முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 30

இறுதிக் கட்டப் போரில் காணாமல் போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி கடந்த ஒன்றரை மாதங்களுக்குள் 70 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளதாக பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையினால், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் நடமாடும் சேவை நடத்தப்பட்டுவருகிறது.

கடந்த ஒன்றரை மாத காலமாக இந்த நடமாடும் சேவை, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடத்தப்பட்டுவருகின்றது.

இதன்போதே, இறுதிக் கட்டப் போரில் காணாமல் போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறும், படையினரிடம் சரணடைந்தவர்கள் குறித்துத் தகவல் இல்லை எனவும் தமது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

இவர்களில் சிலர் ஏற்கனவே யாழ். பிராந்தியக் கிளையிலும், வவுனியாக் கிளையிலும் முறைப்பாடு செய்துள்ளனர். மொத்தமாக இதுவரையில் 70 பேர் இவ்வாறு காணாமல் போனமை தொடர்பாக முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

இதனைவிட 18 முறைப்பாடுகள் அரச திணைக்களங்களுக்கு எதிராகக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (த-5)

# 'உதயன்' ஆசிரியர், சரவணபவன் எம்.பி. தாக்குதலுக்கு நாடாளுமன்றில் கண்டனம்

## தாக்கியோரை உடன் கைதுசெய்ய கோரியது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 30

யாழ். 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் தே.பிரேமானந்த் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மீதும் யாழ்ப்பாணத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுவாமிநாதன் தாக்கியவர்களை அரசு கைது செய்து உடன் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் கோரினார்.

வரவு-செலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக விடுதியில் நடைபெற்ற சம்பவத்தைப் பதிவுசெய்வதற்காகச் சென்ற 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலையும், மக்கள் பிரதிநிதி என்ற அடிப்படையில் விடுதிச் சம்பவத்தைப் பார்க்கச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், சகோதரர் ஈ.சரவணபவன் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது மக்களின் கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமைகளைக் கொண்டுள்ள ஊடகங்களுக்கோ, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மீதோ கை வைப்பதற்கு இராணுவத்தினருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

யாழ்ப்பாணத்தில் தமது பணியைச் சுதந்திரமாக மேற்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன், ஊடக நிலையங்களும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.

ஊடகச் சுதந்திரத்தை உறுதிசெய்வதாக அரசு கூறிவந்தாலும் குறிப்பாக, யாழில் இன்னும் ஊடகச் சுதந்திரத்தைக் காணக்கூடியதாக இல்லை. இந்த நிலைக்கு அரசே பதில் கூற வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் மீதும், ஊடகவியலாளர் மீதும் தாக்குதலை மேற்கொள்ள எவர் இவர்களுக்கு அதிகாரத்தை வழங்கினர் என்பதையும் வெளிப்படுத்தவேண்டும்.

பத்திரிகை ஆசிரியர் மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் மேற்கொள்ளப்பட்ட இந்த மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கப்படவேண்டும்.

இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின், எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு அரசு முகம் கொடுக்க வேண்டி வரும் - என்றார். (த-சி)

# இராணுவத்தின் அடாவடிக்கு மாநகர சபையில் கண்டனம்

## கூட்டம் முடிந்துவிட்டதாக அறிவித்து வெளியேறினார் முதல்வர்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மீதும், இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தினர். இதனை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என யாழ். மாநகர சபையில் எதிர்க்கட்சி பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தது.

பிரேரணை தொடர்பில் வாக்கெடுக்க முடியாது, கூட்டம் முடிந்து விட்டது என்று இடைநடுவில் எழுந்து சென்றார் மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

நேற்று யாழ். மாநகர சபையின் நவம்பர் மாதத்துக்கான கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மு.றெமீடியஸ் தவிர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாக பல்கலைக்கழக சூழலில் இடம்பெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

எதிரணியினரான விந்தன் கனகரத்தினம், ஆ.பரஞ்சோதி, என்.இராஜதேவன் ஆகியோர் தமிழ் மாணவர்களும் தமிழ் மக்களும் பல தடவைகளாக இது போன்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர். மாணவர்களும் ஏனைய மக்களும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறமுடியாமல் உள்ளது. கல்வியைத் தொடர முடியாத சூழல் நிலவுகிறது. இந்த நிலையிலும் கூட ஆளும் கட்சி உறுப்பினர்கள் இது போன்ற விடயங்களைச் சரியான முறையில் கையாளாது அடாவடித்தனத்துக்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே உள்ளனர்.

முதல்வர் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விட மறுத்தது சர்வாதிகாரத்தனமானது. இத்தகைய சர்வாதிகாரப் போக்கை கூட்டமைப்பைச் சேர்ந்த எதிரணி உறுப்பினர்கள் நாங்கள் அனைவரும் வன்மையாகக் கண்டிப்பதுடன் மாணவர்கள் எதிர்காலத்தில் தங்களது உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுக்க முடியாமல் ஆக்கப்படுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட முடியாத நிலை உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கொழும்பில் நிற்பதும் பல்கலைக்கழக செனட் இதனைக் கண்டிக்காதது குறித்தும் நாங்கள் எமது பலத்த கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் தெரிவிக்கின்றோம்.

எதிரணியின் தலைவர் தவிர்ந்த அனைத்து உறுப்பினர்களும் இந்தக் கருத்தைத் தெரிவித்தனர். (ஐ-7)

### மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து கலந்துரையாடல்

மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

முற்பகல் 10:30 மணிக்கு கலைப்பீட சிரேஷ்ட ஆசிரியர் பொது [illegible] இந்தக் கலந்துரையாடலில் சகல [illegible] ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் அறிவித்துள்ளார். (த-16)

# போராட்டத்தை கலைப்பதற்கு படையினரை அழைத்தது ஏன்?

## பல்கலை ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம்,நவ.30

பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியான போராட்டத்தைக் கலைக்க இராணுவம் அழைக்கப்பட்டமை ஏன் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் அது வன்மையாகக் கண்டித்துள்ளது. இது குறித்து ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

28.11.2012 அன்று எமது பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த அமைதியான போராட்டத்தை கலைப்பதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும், ஆண்கள், பெண்கள் என்று பேதம் பாராது மிலேச்சத் தனமான முறையில் இரும்புக் கம்பிகளாலும், துப்பாக்கி அடிப்பாகங்களாலும், பொல்லுகளாலும் தாக்கியுள்ளனர்.

அமைதியான போராட்டத்தை அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத போது கலைக்கவேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. அதைவிட போராட்டத்தைக் கலைப்பதற்கு கண்ணீர்ப்புகை போன்ற வலுக்குறைந்த ஆயுதங்கள் இருக்கையில் இரும்புக் கம்பிகளாலும், துப்பாக்கி அடிப்பாகங்களாலும், பொல்லுகளாலும் தாக்கியமையானது இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இராணுவத்தினர் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிக்குள் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி அத்துமீறி பிரவேசித்தும் உள்ளனர்.

எனவே பல்கலைக்கழக ஆசிரியர் சமூகத்தவராகிய நாம் மிலேச்சத்தனமான தாக்குதல்களை மிக வன்மையாகக் கண்டிப்பதோடுசமூகமான கற்றல் செயற்பாடுகள் நடைபெற உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறோம்.- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலுக்கு உடனடித் தீர்வை எட்டுங்கள்

## இந்தியத் துணைத் தூதுவருக்கு யாழ்.மீனவர்கள் மனு

யாழ்ப்பாணம், நவ.30

*குடாநாட்டு மீனவர்களுக்கு மீண்டும் மீண்டும் துன்பியல் நிகழ்வுகளை ஏற்படுத்தாமல் இந்திய மீனவர்களின் எல்லைமீறல் விடயத்தில் உடன் தீர்வு ஒன்றை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இவ்வாறு யாழ்.மாவட்டக் கடற்றொழில் சமாசம் இந்தியத் துணைத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான மனு ஒன்று நேற்று இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:*

இதுவரை காலமும் வடபகுதி கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு அளவேயில்லை. இந்த மீனவர்கள் கடற்றொழில் செய்யும் வேளைகளில் பல துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றமை சகலரும் அறிந்த விடயம். குறிப்பாக, இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லையைத் தாண்டிவந்து, எமது கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட இழுவை விசைப்படகுகள் மூலமும் நாட்டுப் படகுகள் மூலமும் தங்குதடையின்றிப் பெரும் எண்ணிக்கையில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவதன் காரணமாக எமது பகுதி மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகளும் கடல் உயிரினங்களும் வளங்களும் அழிக்கப்படுகின்றன. இவை நாளாந்தம் நிகழ்வுகளாக நடைபெற்று வருவதனால் எமது பகுதி கடற்றொழிலாளர்கள் வாழ்வியல் துன்பங்களைத்தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். இதன் காரணமாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் வங்கிகளில் பெறப்பட்ட வங்கிக் கடன்களையும் அதற்கான வட்டியையும் மீளச்செலுத்த முடியாத நிலையில் வறுமை நிலைக்குட்பட்டு விரக்தியுற்ற முறுகல் நிலைதோற்றுவிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுவதனை தவிர்ப்பது அனைவருடைய பெறுப்புமாகும்.

நாங்கள் இதுவரை காலமும் பல தடவை பல தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்தும் பல் சுற்றுப், பேச்சுக்களை நடத்திய போதிலும் கூட இவ் விசைப்படகுகள் எமது கடற்பகுதியில் வருவதை நிறுத்துவதாக இல்லை. இதனால் விரக்தியுற்ற எமது பகுதி மீனவர்கள் கடற்பகுதியில் கைகலப்பு ஏற்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு இருந்தபோதிலும் கூட ஈன இரக்கமின்றி இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்ற நிகழ்வாக வேதனை தரும் செயலாக அமைந்து வருவதனை இன்னும் நீங்கள் உணரவில்லையா? இனிமேலும் இதனை உடன் தடுத்து நிறுத்தாதுவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போகலாம் என்பதனை தங்களுக்கு மிகுந்த மனவேதனையுடன் அறியத் தருகின்றோம்.

இந்திய - இலங்கை நாடுகளின் நல்லுறவுகள் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ள உடன் தீர்வொன்றை ஏற்படுத்தி அதனை விரைவாகவும் நடைமுறைப் படுத்த வேண்டிய பொறுப்பு இருநாட்டு அரசுகளுக்கும் உரியதல்லவா? இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எம்மால் வழங்கப்பட்ட கால அவகாசம் இன்னும் உங்களுக்குப் போதவில்லையா?

எது எப்படி இருந்த போதிலும் எமது பகுதி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தையும், எமது பகுதி கடல் வளங்களையும் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு. இதனை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு வடபகுதிக் கடற்றொழிலாளர்களை ஒன்றிணைத்து இந்த வேண்டுகோளை தங்களின் உடனடி கவனத்துக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (த-17)

## திருநெல்வேலி ஶ்ரீரெலோ அலுவலகம் மீது தாக்குதல்

வலி.வடக்கு, நவ.30

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஶ்ரீரெலோ அலுவலகம் மீது நேற்று அதிகாலை 3.35 மணியளவில் இனம் தெரியாதவர்களால் பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

அதிகாலையில் ஶ்ரீரெலோ உறுப்பினர்கள் அலுவலகத்தில் படுத்துறங்கிய வேளையில் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. யாரும் காயங்களுக்கு உள்ளாகாத போதிலும் வீட்டின் முன்புறம் எரிந்து பாதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து உடனடியாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது திருநெல்வேலி வளாக வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட அமைப்பாளர் செந்தூரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவப் புலனாய்வாளர்களும் பொலிஸ் புலனாய்வாளர்களும் இந்தச் சம்பவம் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட அலுவலகம் கடந்த வாரம் மிகவும் அமைதியான முறையில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## தீர்வை செலுத்தப்படாத பெரும் தொகை வெளிநாட்டு சிகரெட்டுக்கள் சிக்கின



யாழ்ப்பாணம், நவ.30

யாழ்ப்பாணம் மதுவரி நிலையத்தினர் கடந்த 22 ஆம் திகதி மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது பெருந்தொகையான தீர்வை செலுத்தப்படாத வெளிநாட்டு சிகரெட்டுக்களை யாழ்.நகரப் பகுதியில் வைத்து மீட்டுள்ளனர். அது தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த 26 ஆம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது ஒவ்வொருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. விசேட நடவடிக்கையின்போது குறித்த சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-12)



*யாழ்.வை.எம்.சீ.ஏ நிறுவனத்தின் வறுமையிலும் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு காலணிகளை அண்மையில் வழங்கினர். யாழ்.வை.எம்.சீ.ஏ.நிறுவன செயலாளர் எஸ்.ஜெயராஜசிங்கம் மாணவருக்கு காலணிகளை வழங்குகிறார். (ம-9)*

## நயினாதீவு - குறிகாட்டுவான் கடற்பாதைச் சேவை ஜனவரியில்

யாழ்ப்பாணம், நவ.30

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான கடற்பாதைச் சேவையை எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இரு இறங்குதுறைகளிலும் கடற்பாதை தரித்து நிற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் கடற்பாதை தரிப்பதற்கான பகுதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் கடற்பாதை தரிப்பதற்கான பகுதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து நயினாதீவு இறங்குதுறையில் புனரமைப்புப் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் புனரமைப்புப் பணிகள் நிறைவுற்றதும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கடற்பாதைச் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-17)

## சட்டவிரோதமான வெளிநாட்டு பயணம் குறித்து விளக்கமளிப்பு

தென்மராட்சி, நவ.30

வெளிநாடுகளில் உள்ளவர்களின் உறவினர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுத் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக வடக்கு பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.புருஷோத்தமன் இதில் கலந்து கொண்டு சட்டவிரோத குடியேற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் விஸாபெற்று வெளிநாடுகளுக்குச் செல்வதன் பயன்கள் பற்றிவிரிவாக உரையாற்றினார்.

இவர் தெரிவித்த கருத்துக்களை ஒவ்வொரு மக்களும் தெரிவிப்பதற்காக பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. கலந்துரையாடலில் வெளிநாடுகளில் உள்ளவர்களின் உறவினர்கள் 300 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ம-9)

## வயோதிபரை கடித்தது முதலை

வலி.வடக்கு,நவ.30

கூலி வேலைக்குச் சென்று கொண்டிருந்த வயோதிபரைத் திடீரென எதிர்ப்பட்ட முதலை கடித்தது. காயங்களுடன் அவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த பொன்னையா பாஸ்கரன் (வயது 60) என்பவராவர்.

தொழிலுக்காக உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்த இவர் சம்பவ தினத்தன்று வழமைபோல முகட்டன் குளம் வழியாகச் சென்று கொண்டிருந்தபோது குளத்தில் இருந்து வெளிப்பட்ட முதலை அவரின் தொடையில் கடித்தது.

அவர் தான் வைத்திருந்த கத்தியால் முதலையைக் குத்தியபோது முதலை அவ்விடத்தை விட்டுக் குளத்துக்குள் சென்று விட்டது. முதலைக்கடியால் காயமடைந்தவர் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ம-8)

## சங்கானையில் நவீன சந்தை அமைப்பதற்கு அனுமதியில்லை

யாழ்ப்பாணம், நவ.30

'புறநெகும' திட்டத்தின் கீழ் சங்கானையில் நவீன சந்தை மாதிரி கட்டடம் அமைப்பதற்கு இதுவரையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி கிடைக்கவில்லை. இதனால் 60 மில்லியன் ரூபா நிதி அபிவிருத்தி இன்றி உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், சபை உறுப்பினர்களும் சங்கானைச் சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதில் உறுதியாக உள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், சபை உறுப்பினர்களும் சங்கானைச் சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதில் உறுதியாக உள்ளனர்.

அத்துடன் இந்த அபிவிருத்தி தொடர்பாக வடக்கு ஆளுநரின் கவனத்துக்கும் 'புறநெகும' தேசிய திட்ட இணைப்பாளருக்கும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இரண்டு தடவைகள் கூறப்பட்ட போதும் இதற்கான அனுமதி குறித்து ஆராயப்படவில்லை.

இதனால் மேற்படி அபிவிருத்தித் திட்டம் உட்பட பல அபிவிருத்திகள் அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை எதிர்பார்த்த வண்ணம் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-41)

## நிகழ்வுகள் இன்று

**கலை நிகழ்வு**

திருமறைக்கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து வழங்கும் வண்ணக்கோலங்கள் கலை நிகழ்வு மாலை 4 மணிக்கு யாழ். கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. உடுவில் ஆர்க் மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரன் கலந்து கொள்வார். ( ம- 14)

**கூட்டம்**

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-86)

**எயிட்ஸ் தின நடைப்பயணம்**

உலக எய்ட்ஸ் தின நடைப்பயணமும் கூட்டமும் காலை 9 மணிக்கு யாழ்.தாதிய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றமா? நீதிமன்றமா? விவாதப் போர்க்களமானது சபை

கொழும்பு, நவ.30

நாடாளுமன்றமா, உயர்நீதிமன்றமா என்ற வாதம் நேற்று நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையையும், வாதப்பிரதிவாதங்களையும் ஏற்படுத்தின.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நீதிமன்ற அதிகாரம் வழங்கக்கூடாது என்றும் அதன் விசாரணைகள் இடைநிறுத்தி வைக்கப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது சபாநாயகரின் தத்துவங்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் மீறிய செயலாகும் எனச் சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை சபையில் முன்வைத்தார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

117 நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை் தொடர்பாகச் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது.

இந்த நிலையில், தெரிவுக்குழுவின் விசாரணைகளை இடைநிறுத்தும்படி உயர்நீதிமன்றத்தில் ஏழு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகச் சபாநாயகர் உட்பட விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் 11 பேரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அந்த மனுவின் நகல் ஒன்று எனக்கும் கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளை 360/2ஆம் பிரிவின்படி சபாநாயகருக்கு வழங்கப்பட்டுள்ள தன்னாதிக்கம் மற்றும் தத்துவங்களின் அடிப்படையிலேயே விசேட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரினதும், நாடாளுமன்றத்தினதும் தீர்மானங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியில் இன்று எவரும் சவால்விட முடியாது. அதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கும் கிடையாது.

நாடாளுமன்றத்தின் இறைமை, தனித்துவம் மற்றும் தத்துவம் பாதுகாக்கப்படவேண்டும். முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க முன்பு இந்தச் சபையில் அளித்த தீர்ப்பை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

''நாடாளுமன்றத்தின் தீர்வுகள், நடவடிக்கைகள் தொடர்பாக தடையுத்தரவைப் பிறப்பிக்கும் உரிமை உயர் நீதிமன்றத்திற்குக் கிடையாது'' என அநுர பண்டாரநாயக்க தெளிவாகக் கூறியுள்ளார்.

எனவே, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் சபாநாயகரினதும், நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் ஒரு செயலாகும் என நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

**தெரிவுக்குழுவுக்கு நீதிமன்ற அதிகாரம் இல்லை**

இவ்விடயம் தொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க தெரிவித்தவை வருமாறு:-

''சபை முதல்வரால் முன்வைக்கப்பட்ட விடயம் சிறப்புரிமை மீறப்பட்டதாகக் கூற முடியாது. பிரதம நீதியரசர் விவகாரம் இன்று நாடு முழுவதும் அவதானிக்கப்பட்டுவரும் ஒரு அதி முக்கியமான விடயம்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின் கீழ் சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நீதிமன்ற அதிகாரங்கள் கிடையா.

முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க மட்டுமே முடியும்.

சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை இவை மூன்றும் தனித்தனியான தத்துவங்களைக் கொண்டவை.

ஒன்றின் சுயாதீனத்தில் ஒன்று தலையிடவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. இதனை அரசமைப்பு ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

எனவே, நீதித்துறையின் அதிகாரத்தை ஒரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வழங்க முடியாது. பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் மனுக்களைப் பரிசீலனை செய்யும் உரிமையும், அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. இது ஒரு சிறப்புரிமைப் பிரச்சினையாகாது. இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் பரிசீலனை செய்து தீர்மானிக்க வேண்டும் - என்றார்.

## பல்கலை. சுற்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இரண்டு நாள் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

மாணவர்களின் பகிஷ்கரிப்பினால் யாழ். பல்கலைக்கழக விரிவுரை மண்டபங்கள் வெறிச்சோடிக் கிடந்ததுடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் ஒரு சில மாணவர்களே இருந்தனர்.

அத்துடன் பல்கலைக்கழக சுற்றாடல் முழுவதும் இராணுவத்தினரும் பொலிஸாரும் கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். பரமேஸ்வராச் சந்தியில் இராணுவ பஸ் ஒன்று நேற்றுக் காலையில் இருந்து நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதில் பெருமளவு இராணுவத்தினர் இருந்தனர்.

மேலும் பல்கலைக்கழகத்தைச் சூழவுள்ள ஒவ்வொரு சந்திகளிலும் நின்றிருந்த இராணுவத்தினர் முகத்தை கறுப்புத் துணியால் மூடிக் கட்டியிருந்தனர். பல்கலைக்கழக பிரதான வாயில், ஆண், பெண் விடுதிகளின் பிரதான வாயில்களில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். அத்துடன் பல்கலைக்கழகத்தின் முன்பாக கலகமடக்கும் பொலிஸாரின் ஜீப் ஒன்றும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ். நகரின் முக்கிய சந்திகளில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளிலும் நேற்றுக் காலை முதல் ஈடுபட்டிருந்தனர். ( த- 5)

## சிகிச்சைக்காக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போது மாணவர்கள், மாணவிகள் பலர் இராணுவத்தினரால் கலைத்துக்கலைத்து மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர்.

இதில் கடும் காயங்களுக்கு உள்ளான மாணவ, மாணவியர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். நேற்றுமுன்தினம் மாலையே இவர்கள் வைத்தியசாலையின் 24 ஆம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

மாணவர்கள் விடுதியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்திலேயே அங்கு வந்த மூன்று பேர் தம்மைப் புலனாய்வுப் பிரிவினர் என்று அறிமுகம் செய்து கொண்டு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட மாணவர்களை மிரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'நீங்கள் பொலிஸ் வந்து கேட்டால் எங்களுக்கு எதிராகத்தான் றிப்போர்ட் கொடுப்பீர்கள். அப்படிக் கொடுத்தால் நீங்கள் வெளியே நடமாட முடியாது; கவனம்.' என்று கூறி மிரட்டிய புலனாய்வாளர்கள் தொடர்ந்தும் மாணவர்களுடனேயே நின்றுள்ளனர்.

மாணவர்கள் வைத்திய பரிசோதனை முடிந்த பின்னர், பொலிஸாரிடம் வாக்கு மூலம் பதிவு செய்வதற்காகக் காத்திருந்தனர். பொலிஸாரும் இரவு 8 மணிக்கு வருவதாக முதலில் தெரிவித்துவிட்டு பின்னர் நீண்ட நேரமாகியும் அவர்கள் வரவில்லை. புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் மாணவர்களை மிரட்டியதால், மாணவர்கள் வைத்தியர்களுக்குத் தெரிவிக்காமல் இரவு 10:30 மணியளவில் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடன் பல முறை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. (த-5)

## முறையிட்டால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ஜெயநேசன்,

. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உணர்வுபூர்வமாகத் தமது கலாசார நிகழ்வுகளை 27ஆம் திகதி கடைப்பிடிக்க முயன்றனர். இதன்போது அத்துமீறி உள்ளே நுழைந்த இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். அத்துடன் பெண்கள் விடுதிக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த இராணுவத்தினர் அட்டகாசத்தில் ஈடுபட்டனர்.

சிவில் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் எதற்கு இராணுவத்தினர் சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்கின்றனர்.

பொலிஸார் ஏன் இராணுவத்தினரை ஆர்ப்பாட்டத்தை அடக்குவதற்கு கொண்டு வர வேண்டும்? மாணவர்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து தாக்கியுள்ளனர். சிவில் நிர்வாகத்தை ஒழுங்காக முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவத்தினர் விடுதிக்குள் புகுந்து தாக்கியதாகவோ, மாணவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டதாகவோ எந்தவொரு முறைப்பாடும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. முறைப்பாடு கிடைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (த)

## யாழ். தாக்குதல்கள்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தரப்பினால் தொல்லைகள் தரப்பட்டுவரும் சூழ்நிலையில் அமெரிக்காவின் இந்த அதிரடிக் கருத்து வெளிவந்திருக்கிறது. இது தொடர்பில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் சமீப காலமாக பேச்சுச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சறுத்தல்களைக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் கவனத்தில் கொண்டுள்ளது.

நவம்பர் 27ஆம் திகதி இலங்கை அரச அதிகாரிகளால் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். சுதந்திர ஊடக வெளியீடுகளுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டுள்ளன. எத்தகைய அனுமதியுமின்றி ஊடகவியலாளர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவை அனைத்தும் ஊடகச் சுதந்திரத்தை முடக்கும் செயல்களாகும். அதேவேளை, யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மீது தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன என வெளியான செய்திகள் குறித்தும் தூதரகம் பெரிதும் அக்கறைகொண்டுள்ளது.

அதேவேளை, இத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அமைதிப் போராட்டங்களை மதிக்குமாறும் அதிகாரிகளுக்கு நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-சி)

## ஊடக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஊடக சுதந்திரம், ஊடக ஜனநாயகம் பற்றிப் பேசும் அரசுக்கு இவ்வாறான தாக்குதல்களை ஏன் தடுத்து நிறுத்த முடியாமல் போனது? அல்லது தாக்குதலுடன் தொடர்புள்ளவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட்டால் அரசு கூறும் ஊடக சுதந்திரத்தை ஊடகவியலாளர்களால் ஓரளவேனும் நம்ப முடியும். ஆனால் ஊடகத்துறை மீதான தாக்குதல் பற்றிய விசாரணைகள் மந்த கதியில் அல்லது கைவிடப்பட்ட நிலைமையில் தான் செல்வதை தொடர்ச்சியாகக் காணமுடிகின்றது.

அரசைக் கவிழ்ப்பது ஊடகவியலாளர்களின் நோக்கம் அல்ல. சமூகப் பிரச்சினைகளை, சமூக மாற்றங்களை வேண்டி நிற்பவர்கள்தான் ஊடகவியலாளர்கள். தமிழ் ஊடகவியலாளர்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வெளிக்கொணர வேண்டிய கடப்பாடும் உணர்வும் உண்டு. அந்த உணர்வுகளில் படையினர் அல்லது அரசு தடைபோடுமாக இருந்தால் சகல சமூகங்களுக்கும் சமனான அரசு என்ற அந்தஸ்தை அவர்கள் இழந்துவிட்டதாகவே கருத முடியும்.

ஊடகத் துறையினர் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் நம்பிக்கை இழக்கும் செயற்பாடுகளை தவிர்த்து நேர்மையான அணுகுமுறைகளைக் கையாள வேண்டும் என ஊடகத்துறை அமைச்சிடம் ஒன்றியம் கோரிக்கை விடுக்கின்றது- என்றுள்ளது. (ம)

## இரண்டு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் மீனவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

வடக்குக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை இலங்கை மற்றும் இந்திய அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்தப் பேரணியில் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டனர். யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடைபெற்றுள்ளது.

'இலங்கை அரசே இராதே பாராமுகமாக', 'அழிக்காதே அழிக்காதே எமது தொழில் உரிமையை அழிக்காதே', 'இந்திய அரசே எமக்கு வயிற்றில் அடிக்காதே' போன்ற கோஷங்களை எழுப்பியும் பதாகைகளை ஏந்தியும் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி தடைசெய்யப்பட்ட விசைப்படகுகள் மூலம் எமது மீனவர்களின் மீன்பிடி வலைகளை நாசம் செய்தும், மீன் வளங்களைச் சூறையாடியும் செல்கின்றனர். எனவே இது தொடர்பில் இரு நாடுகளும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு எதிர்வரும் 15 தினங்களுக்குள் தீர்வு கிடைக்கவிட்டால் கடலிலிறங்கிப் போராடப் போவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்குச் சென்று அங்கு மனு கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் மீனவர்கள் பேரணியாக யாழ்.செயலகத்தை அடைந்தனர். அங்கு யாழ்.மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கத்திடமும் மனு கையளித்தனர். (த-7-13-17)

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போது பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டதைக் கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக ஊழியர்கள் அரைநாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இது குறித்து யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தது.

அதன் விவரம் வருமாறு,

27, 28 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக பிரதான வளாகம், மருத்துவபீடம், மாணவர் விடுதிகள் ஆகியவற்றில் இடம்பெற்ற சம்பவங்கள் மாணவர்களின் பாதுகாப்பைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது. இந்த இரு தினங்களிலும் முழு நேர அலுவலர்களான பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரும், பிரதிப் பதிவாளரும் குடாநாட்டில் இல்லாமை நிலைமையை மேலும் மோசமாக்கி இருக்கின்றது.

இந்த நிலையில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பை நிறைவேற்றுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தை வலியுறுத்தும் முகமாக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியிலிருந்து அரைநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு சகல ஊழியர்களையும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேண்டியிருக்கின்றது - என்றுள்ளது. (த)

## பல்கலைக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மதித்தது யார்? உயர் கல்வி அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் ஆண், பெண் மாணவர் விடுதிகளுக்குள் அத்துமீறிஉள் நுழைந்து படையினர் அட்டகாசம் புரிந்துள்ளனர். இராணுவத்தினரின் அடாவடித் தனங்களைக் கண்டித்து மாணவர்கள் வளாகத்துக்குள்ளேயே தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆனால் ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் அங்கு சென்று காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களை நடத்தி உள்ளனர். அங்கு பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பாக இங்கு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களில் உண்மை இல்லை. இன்றும் கூட மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக இருக்கின்றனர்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் எதுவிதமான அடிப்படை வசதிகளும் இன்றித் தட்டுக்குடில்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதைகளில் பிச்சைக்காரர்கள் போல் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

ஐ.நா. தீர்மானத்தின்படி இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்ற கடப்பாடு உண்டு.

ஆனால் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் உதாசீனப்படுத்தி அம்மக்கள் சொந்த இடங்களுக்குச் சென்று வாழத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இன்னும் 21 முகாம்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக இருக்கின்றனர். அவர்கள் மீண்டும் இங்கு வர விரும்புகிறார்கள். அவர்கள் மீண்டும் வந்தால் தமது சொந்த இடங்களில் வந்து குடியேற சகல உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்த வேண்டும்.

நாம் இந்த சபையில் தவறான தகவல்களை வெளியிடுவதாக அரச தரப்பில் குற்றஞ் சுமத்துகின்றனர்.நான் உங்களை, அழைக்கின்றேன். நீங்கள் என்னுடன் வாருங்கள் வந்து உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும் - என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கராயன் கிழக்குப் பகுதியையும் மத்திய பகுதியையும் இணைக்கும் அக்கராயன் ஆற்றுக்குக் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் சிறிய பாலம் கடந்த 30 வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் சேதமான தோற்றத்துடன் காணப்படுகின்றது. (க-18)

# கடன்களை பெற முடியாத நிலையில் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள்

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த காலங்களில் பயிர்ச் செய்கைகளுக்கென வங்கிகளில் கடன்களைப் பெற்று மீளச்செலுத்தாத விவசாயிகள் தற்போது கடன்களைப் பெற முடியாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் 2010 ஆம் ஆண்டுக்கான காலபோக சிறுபோகச் நெற் செய்கைகள், கடந்த ஆண்டுக்கான செய்கைகள், நடப்பு ஆண்டுக்கான காலபோக சிறுபோக செய்கைகள் எனத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக கிளிநொச்சியில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளில் கடன்களைப் பெற்றுள்ள போதிலும் குறிப்பிட்ட சில விவசாயிகள் அவற்றை மீளச் செலுத்தவில்லை.

இதனால் தற்போதைய காலபோகச் செய்கையின் போது இங்குள்ள சகல வங்கிகளும் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்றன. மேலும் குறிப்பிட்ட சில திட்டக் குழுக்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கும் மறுத்துள்ளன.

இந்தக் குழுக்கள் கடந்த காலங்களில் தவறான விவரங்களை வங்கிகளுக்கு வழங்கி விவசாயிகளுக்கு கடன்களைப் பெற்றுக் கொடுத்தமையால் இன்று அவற்றை அறவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதனால் விவசாயிகள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (க-6)

## கிளிநொச்சி லயன்ஸ் கழகம் வழங்கியது மூக்குக் கண்ணாடிகள்

அக்கராயன்,நவ.30

கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் கடந்த 18 ஆம் திகதி வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தினால் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் வைத்து இந்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

லயன்ஸ் கழகத்தின் செயலாளர் ச.மோகனபவன் 100 மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத் தலைவர் எஸ்.செல்வரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருத்துவர் எம்.ஜெயராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகள் இதனால் பயன் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# கடற்படையின் கெடுபிடியால் கடற்றொழிலாளர்கள் அவதி

### நாச்சிக்குடாவில் நிலைமை மோசம்

*பூநகரி,நவ.30*

***பூநகரி நாச்சிக்குடாப் பகுதியில் தொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் கடற்படையினரின் கெடுபிடிகளால் சிரமங்களையும், இழப்புகளையும் எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.***

கடற்படையினரின் பாஸ் நடைமுறை இந்தப் பகுதியில் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. தொழிலுக்குச் செல்லும் போதும், திரும்பி வரும் போதும் தொழிலாளர்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பதிவுகளை மேற்கொள்ளாது செல்பவர்களின் வீடுகளுக்குச் செல்லும் கடற்படையினர் அவர்களை அச்சுறுத்தி வருவதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் தொழில் முடிந்து கரைக்குக் கொண்டு வரப்படும் வலைகள் கூரான இரும்பினால் பல இடங்களிலும் குத்தப்பட்டு கடற்படையினரால் சோதனை மேற்கொள்ளப்படுவதால் அவை சேதமடைகின்றன என்று கூறப்படுகின்றது.

இதைப் போன்றே மீன்களும் கூரான கம்பியினால் குத்தப்பட்டு சோதனை மேற்கொள்ளப்படுவதால் அவை பழுதாகி விடுவதுடன் விற்க முடியாத நிலையும் ஏற்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கடற்படையினரால் தம்மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் யாவும் நீக்கப்பட்டு தாம் நிம்மதியான வகையில் தொழில் புரிவதற்கு அனுமதிக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-9)

## பொதுச்சபைக் கூட்டம்

அக்கராயன்,நவ.30

கிளிநொச்சி கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக சமாசத் தலைவர் அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புளியம்பொக்கணைச் சந்தியில் உள்ள தலைமை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி, பூநகரி, அக்கராயன் ப.நோ.கூ. சங்கங்களைத் தொடர்ந்து மேற்படி சங்கத்திலும் ஜனநாயக முறைப்படியான தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## இன்று ஒளிவிழா

அக்கராயன்,நவ.30

கோட்டைகட்டியகுளம் நல்ல நண்பன் முன்பள்ளியின் ஒளிவிழா நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

காலை 9 மணியளவில் முன்பள்ளி மண்டபத்தில் இந்த ஒளிவிழா நிகழ்வு இடம்பெறுமெனவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-18)

# வளங்கள், வசதிகள் இன்றி அவலத்துடன் இயங்கிவரும் மாத்தளன் பாடசாலை

### குடிதண்ணீர், மலசலகூடங்களும் இல்லாத நிலை

முல்லைத்தீவு,நவ.30

முல்லைத்தீவு மாவட்டம் மாத்தளன் றோ.க.த.க. பாடசாலையில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் போது மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்ட பகுதியாக மாத்தளன் விளங்குகின்றது.

இங்கு தற்போது இயங்கி வரும் றோ.க.த.க பாடசாலை கடந்த செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி இயங்க ஆரம்பித்தது.

முன்னர் அமைக்கப்பட்ட கட்டடங்கள் போரின்போது முற்றாக அழிவடைந்ததால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகையொன்றில் வகுப்புக்கள் இடம் பெற்று வருகின்றன.

இதுவொரு ஆரம்பப் பாடசாலையாக விளங்குவதால் தரம்-1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 70 மாணவர்கள் கல்வி கற்கும் இந்த ஆரம்ப பாடசாலையில் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் உள்ளனர்.

ஆங்கில ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு ஆசிரியர்களுக்கான தேவைகள் உள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் இதுவரை ஏற்படுத்தப்படாததால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதுவொரு ஆரம்பப் பாடசாலை என்பதால் வயது குறைந்த மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர். ஆனாலும் இவர்கள் சுமார் 200 மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள, வீடுகளிலுள்ள கிணறுகளிலிருந்து குடிதண்ணீரை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் எடுத்து வருகின்றனர்.

தற்போது மாரிகாலம் என்பதால் இந்தச் சிறார்கள் கிணற்றிலிருந்து நீரை அள்ளும் போது உயிராபத்தையும் எதிர்கொள்ளலாமென்ற அச்சமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மலசல கூட வசதிகள் இல்லாத காரணத்தால் அருகிலுள்ள காடுகளை நாடவேண்டிய நிலையிலும் ஆசிரியர்களும் மாணவர்களும் உள்ளனர்.

இரும்பு சேகரிப்பவர்கள் அங்கு நடமாடுவதால் இதற்கும் இடையூறுகள் தோன்றியுள்ளதாக பாடசாலை சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையிலும் மாணவர்களுக்கான மதிய உணவு ஒழுங்காக வழங்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தினர் எதிர்வரும் ஜனவரி மாதம் குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக உறுதிமொழி வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் ஏதாவது அரச சார்பற்ற நிறுவனமொன்று தற்போது குழாய்க்கிணறு ஒன்றை அமைத்து வழங்கினால் பேருதவியாக இருக்குமெனக் கூறப்படுகின்றது.

மாணவர்களின் பெற்றோர் மிகவும் வறிய நிலையிலுள்ளதால் அவர்களிடமிருந்து உதவிகளைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் பாடசாலைகளும் இதே போன்ற அவலங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள் குடியேற்ற கொடுப்பனவு

புதுக்குடியிருப்பு, நவ.30

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று முதல் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

யு.எஸ்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் வழங்கப்படுகின்ற இந்தக் கொடுப்பனவு இன்று மந்துவில், விசுவமடு, புதுக்குடியிருப்பு கிழக்கு, மன்னாங்கண்டல் பகுதிகளுக்கும் எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மேற்குக்கும், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் சிவநகர் பகுதிக்கும், 7 ஆம் திகதி புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதி மக்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

எனவே குறித்த தினங்களில் அந்தந்தப் பகுதி மக்கள் கொடுப்பனவைப் பெற்றுச் செல்லுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் எஸ். திலீபன் கேட்டுள்ளார்.

கொடுப்பனவு வழங்கப்படவுள்ள குடும்பங்களின் பெயர்விவரங்களை அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் பார்வையிடமுடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-16-4-400)

## ஆள்பதிவு திணைக்கள நடமாடும் சேவை

புதுக்குடியிருப்பு, நவ.30

ஆள்பதிவு திணைக்களத்தின் நடமாடும் சேவை இன்று முற்பகல் 8.30 மணிக்கு உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் உடையார் கட்டு தெற்கு, உடையார் கட்டு வடக்கு, சுதந்திரபுரம்ஆகிய கிராம அலுவலர் பிரிவு மக்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றிப் பயனடையுமாறு பிரதேச செயலகத்தினர் கேட்டுள்ளனர்.

(ஐ-16-408)

# துணுக்காய் வலய பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்

அக்கராயன், நவ.30

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் தாம் அதிக கவனம் செலுத்தி வருவதாக துணுக்காய் வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா.பத்மநாதன் தெரிவித்தார்.

ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், சிராட்டிக் குளம் ஆகிய பகுதிகளில் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மிகவும் பின் தங்கிய பகுதிகளான இந்தக் கிராமங்களின் பாடசாலைகளில் இருந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சித்தியடைந்து பாடசாலைகளுக்கு புகழ் தேடித் தந்துள்ளனர். இந்தப் பாடசாலைகளுக்கு பௌதிக ஆசிரிய வளங்களின் பற்றாக்குறை நீண்ட காலமாக காணப்படுகின்றன. இவை விரைவில் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எதிர்காலத்தில் இந்தப் பாடசாலைகளின் கல்வி நிலையை உயர்த்துவதே எமது நோக்கமாகும் - என்றார்.

(ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மருத்துவ சங்க மாநாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மருத்துவ சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான மாநாட்டின் இன்றைய நிகழ்வு பிற்பகல் 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ். மருத்துவ சங்கத் தலைவர் மருத்துவர் என்.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட வைத்திய நிபுணர் மருத்துவர் எம்.கணேசரத்தினமும் சிறப்பு விருந்தினராக மருத்துவர் ஜயந்த பாலவத்தனவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

'நோய் வரும் முன் காப்போம்' என்ற தொனிப் பொருளிலான இந்த மாநாட்டின் முதல் நாள் அமர்வு நாளை காலை 8 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (16)


## அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கான நிதி திரட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை

இலங்கை CARM அரசசார்பற்றநிறுவனமானது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 06 ஆம், 07ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கான நிதி திரட்டுதல் தொடர்பான 02 நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை ஒழுங்குபடுத்தியுள்ளது. மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் சமூக அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் உள்ளூர் அரச சார்பற்ற சமூக மட்ட அமைப்புக்கள் இந்தப் பயிற்சி பட்டறையில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுக்கப்படுகிறது.

**விண்ணப்பங்களுக்கும்,மேலதிக தகவல்களுக்கும் CARM இன் தொலைபேசி, ஈமெயில் மூலம் டிசெம்பர் 03 ஆம் திகதிக்கு முன்பதாகத் தொடர்பு கொள்ளவும்.**

Email : joycedavid8346@gmail.com

Tel 011 2594272 /011 2507115 (working days 9 am-4 pm)



## 84ஆவது அகவையில் பிறந்தநாள் வாழ்த்து



**30.11.2012**

வைத்திய கலாநிதி

**தி.கங்காதரன்**

இன்றும் நிலைத்து நின்று வைத்திய சேவைதனை வழங்கும் வைத்திய கலாநிதி தி.கங்காதரன் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

18, ஐயனார் கோயில் வீதி, தட்டாதெரு, வண்ணார்பண்ணை. 077 9789210, 0212221697.

வண். மேற்கு வைத்தியசாலை நிர்வாகம், ஊழியர்கள்,

(25898) (10.6)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம்

The Only Official Centre for French Language in Jaffna

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

Alliance Française de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் "Alliance Française de Jaffna" மட்டுமே.

சர்வதேச தரம் வாய்ந்த Alliance Française de Jaffna இல் France மற்றும் பிரெஞ் (French) பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.*

61, Kachcheri-Nallur Road, Jaffna TP.No: 021.2228093

E-mail: alliancejaffna@yahoo.com

(ருக்கா வீதியும் கச்சேரி–நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்)



## வாகன சாரதிக்கான வெற்றிடம்

கேன் நிறுவனம், யாழ்ப்பாணம்

இல. 5, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது நிறுவனத்தின் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்துக்கு சாரதி ஒருவரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 60 வயதுக்குட்பட்டவராகவும், நன்னடத்தை உடையவராகவும், நோயாளிகளுடன் சுமூகமாக பழகுபவராகவும், சேவைமனப்பான்மை உடையவராகவும், நிர்வாகத்தினரால் பணிக்கப்படும் ஏனைய கடமைகளையும் செயற்படுத்தும் ஆற்றல் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 15-12-2012 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக எதிர்பார்க்கும் வேதனத்துடன் தமது விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைக்கவும். விண்ணப்பப் படிவங்களை இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு இல-021 2240258 தொலைபேசி மூலமாக நிர்வாகப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

(25934) விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

**தலைவர், கேன் நிறுவனம், யாழ்ப்பாணம், இல. 5, சபாபதிப்பிள்ளை வீதி ,உடுவில், சுன்னாகம்**



## விற்பனைக்கு

**யேமன் சப்பேட் ஆண் நாய் -11 மாதம், யேமன் சப்பேட் பெண் நாய் - 9 மாதம் (தொடர்புகளுக்கு நேரில் வரவும்)**

077 878 1646 பொ.துரைசிங்கம் அம்பத்தை வீதி, மல்லாகம்.

(25944)(5-6)



## வீடு வாடகைக்கு

**யாழ். போதனா வைத்திய சாலைக்கு பின் இல.19, விக்ரோறியா வீதியில் சகல வசதிகளுடன் 3 பெரிய அறைகள் கொண்ட விசாலமான புதிய வீடு வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிடமும் உண்டு. நிறுவனத்துக்கு ஏற்றது.**

(25942)(5-6) தொடர்பு: 077 332 5878


## கண்ணீர் அஞ்சலி

திருமதி அன்னம்மா யோசேப்பின் அந்தோனிப்பிள்ளை



எமது பாடசாலை ஆசிரியை திருமதி அ.அன்ரனற் வேணியின் அன்புத் தயாரின் மரணச் செய்தி கேட்டு மிகவும் துயரடைகிறோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலை சமூகம்,
யா/ மாதகல் சென். யோசெப் மகாவித்தியாலயம்,
யா/ மாதகல் நுணசை வித்தியாலயம்.

(சி/3121)(5-6)

## மரண அறிவித்தல்

### கனகசபை ஞானசேகரம்

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம்)

பெருமாக்கடவை, அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை ஞானசேகரம் நேற்று (29.11.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நன்னிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பர்வததேவியின் (குஞ்சக்கா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பரராஜசேகரம் ஆகியோரின் சகோதரரும், மயில்வாகனத்தின் (R.M.P) மைத்துனரும், திருமதி பிருந்தா சிவகரன், திருமதி சுமேதா சிவகரன் ஆகியோரின் மாமனும், சக்திவேலின் (லண்டன்) சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைக்காக அளவெட்டி தம்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. மயில்வாகனம் (மைத்துனர்)
மலைவேம்படி, அளவெட்டி தெற்கு.

(25940) (45.6.7)


## முன்பள்ளி ஆசிரியர் தேவை

குப்பிளான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்துக்கு ஆங்கில அறிவுடைய முன்பள்ளி ஆசிரியத்துவப் பயிற்சி பெற்ற அனுபவமுடைய ஆசிரியர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 7243 356, 075 0716 813

(23929) (45.6.7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திருமதி ஆனந்த ஈஸ்வரி இராசரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்



திருமதி

**பொன்னையா செல்லமுத்து**

அவர்கள் 27.11.2012 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்,
கொடிகாமம்.

(சி/2831)(10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா யோசேப்பின் அந்தோனிப்பிள்ளை



பொந்திலேன்,பண்டத்தரிப்பு.

இளவாலையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா யோசேப்பின் அந்தோனிப்பிள்ளை நேற்று(29.11.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை-மரியப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகளும் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயந்திரன் (லண்டன்), திருமதி வேணி அல்போன்சஸ் (ஆசிரியர், யா /மாதகல் சென். யோசப் ம.வி.) கமில்ரன், மரிய நிமலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யூலியற்(லண்டன்),றோகான்,மருதா ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்ரன், றெஜீனா(ராணி) தேவராஜா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோண்பிள்ளை,தேவசகாயம் மற்றும் திருமதி மேரி திரேசா அல் போன்சஸ், பிரான்சிஸ் சேவியர், வின்சனற் இராசதுரை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.11.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பண்டத்தரிப்பில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.றோகான் (மருமகன்)

(25935)(5-6)

## மரண அறிவித்தல்

### அருளப்பு அன்ரன் ரவீந்திரபாபு



நாரந்தனை மத்தியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அருளப்பு அன்ரன் ரவீந்திரபாபு நேற்று முன்தினம் (28.11.2012) புதன் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோணி அருளப்பு - செல்லம்மா மக்ரலின் தம்பதியரின் அருமை மகனும் சந்திரபாபு (விவசாய ஆராய்ச்சி நிலையம், நுவரெலியா), ராசேந்திரபாபு, கசில்டா றஞ்சனி (கஸ்தூரி), சுரேந்திரபாபு ஆகியோரின் சகோதரனும், சிவறதி (ஆசிரியை - நுவரெலியா), எலிசபேத், தனபாலன் ஆகியோரின் மைத்துனரும், கந்தையா - வசந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் பெறமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தையா (மாமா)
077 4319 950, 077 7840 405
நுவரெலியா.

(25940) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மனிதாபிமானம் அடியோடு குன்றுவதும் பெரும் மனித உரிமை மீறலே...!

ஜனநாயகத்தின் முக்கியமான, அதன் நான்கு தூண்களில் ஒன்றான நீதியாண்மை, தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்த வரையில் எப்போது கைக்கு எட்டப் போகிறது என்பது விடையில்லா வினாவாகவே தொடர்கிறது. உண்மையை கூறப்புகின், இது விடயத்தில், அவர்கள் மீதான விசாரணை மற்றும் அது தொடர்பான அலுவல்கள் அடிப்படையிலேயே வேண்டும் என்றே தட்டிக்கழிக்கப்படுகிறது என்று கொள்ளவேண்டிய நிலையை அரசு கால எல்லையின்றி நீட்டிச் செல்கிறது.

நாட்டில் உள்ள அனேக சிறைச்சாலைகளில் இடநெருக்கடி நிலவுகிறது. கைதிகள் பலர் விலங்குகள் போன்று ஒரே அறையில் அடைத்து வைக்கும் நிலை இந்நாட்டில் காணப்படுவதாக, அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டி இருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது.

எப்போது தமக்கு விடுதலை என்ற விடிவு பிறக்கும் எனும் ஏக்கத்துடனேயே அவர்கள் அரைகுறை நித்திரையுடன், துயில் எழுகின்றனர்.

பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சந்தேகம் என்ற அடைமொழியுடன் கைது செய்யப்பட்ட பல நூற்றுக்கணக்கானோர் வழக்குத் தொடரப்படாமையாலும் விசாரணை எதுவும் நடத்தப் படாமலும் சிறைக் கூடங்களில் ஒடுங்கி, ஒதுங்கிக் கிடக்கும் நிலை தொடர்கிறது.

நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதும், திரும்பவும் மீள சிறைச்சாலைக்கே கூட்டிச் செல்லப்படுவதுமாக அவர்களது வாழ் நாள்கள் அல்லாடுகின்றன.

தமது விடுதலை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளக் கோரி தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதி உட்பட அரசியல் துறைப் பிரமுகர்களுக்கும், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் சர்வதேச அமைப்புகளுக்கும் உருக்கமான வேண்டுகோள்கள் காலத்துக்குக்காலம் விடுத்துவருகின்றனர். செவிடன் காதில் ஊதிய சங்கொலி போன்று அவை எல்லாமே பயனற்றுப்போயுள்ளன. நியாயம் வேண்டி அவர்கள் சாத்வீக வழியில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டங்கள் கூட அந்தந்த வேளைகளில் ஒப்புக்காக வழங்கப்பட்ட வாக்குறுதிகளாகி, காலப்போக்கில் காற்றுடன் கலக்கும் நிலையே தொடர்கிறது.

போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் முடிவடையவுள்ள போதிலும், பல ஆண்டுகள் காலமாக, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான எத்தகைய நடவடிக்கையும் அரசினால் முன்னெடுக்கப்பட வில்லை என்பதே யதார்த்தம்.

குற்றச்சாட்டுகள் சுமத்துப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாதவர்களும் விளக்கமறியல் கைதிகளும் மிக நீண்ட காலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலரும் தமது கையறு நிலையால் விரக்தி அடைந்து தமது எதிர்ப்பை சாத்வீக வழியில் வெளிப்படுத்தும் விதத்தில் உண்ணாவிரதப் போராட்டங்களை பல தடவைகள் மேற்கொண்டனர்.

விசாரணைகள் எதுவும் இன்றி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலே தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் மீது 'உள்ளக வன்முறை' பிரயோகிக்கப்படுவதும் அடிக்கடி அரங்கேறுகின்றன. இதனால் எந்த வேளையிலும் ஓர் அச்ச உணர்வுடனேயே அவர்கள் காலத்தை ஓட்ட நேர்கிறது.

இத்தகைய களநிலையில், நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 810 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய இயலாவிட்டாலும், அவர்களை பிணையில் விடுவிப்பதற்காகவாவது நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

குற்றம் இழைத்தார்கள் என்று கண்டறியப்படாதவர்களும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாதவர்களும் வேண்டும் என்றே சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் எனக் கொள்ளப்பட வேண்டும்.

'சந்தேகநபர்' என்ற இரு வார்த்தைகளோடு அவர்களது இளமைக் காலம் கருகிய மொட்டாக்கப்பட்டுள்ளது. இதனைப் பெரும் மனித உரிமை மீறல் என்ற வகைக்குள் வைக்கலாம். அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் இதற்கு எப்போது அந்த முத்திரையைக் குத்தப்போகின்றன?

# கூட்டமைப்பு ஒரு போதும் '13'ஐ நிராகரிக்கவில்லை

## அரச ஊடகங்கள் பொய்ப்பிரசாரம்-சுமந்திரன்

கொழும்பு,நவ.30

தமிழர்களுக்கு முழுமையான அதிகாரப்பகிர்வை வழங்க அத்திபாரமாக அமையும் 13ஆவது திருத்தச் சட்டத்தை தாம் ஒருபோதும் நிராகரித்ததில்லை என உறுதிபடத் தெரிவித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்த பின்னரும் அரச ஊடகங்கள் தொடர்ச்சியாகப் பொய்ப் பிரசாரங்களைச் செய்வது விஷமத்தனமானது என்றும் குறிப்பிட்டது.

''13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு, அதிலிருந்து அர்த்தமற்றதை நீக்கி அர்த்தமானதை உள்வாங்க வேண்டும். சகல மக்களுக்கும் சரியான முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டால் மாத்திரமே இலங்கை ஐக்கிய ஒற்றுமையுடைய நாடாக மாறும்'' என்று தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு அஸாத் சாலி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற இயக்கத்தின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கிறது என நான் கருத்துத் தெரிவித்தேன் என்று அரச பத்திரிகைகள் பலவாறாக செய்தி வெளியிட்டிருந்தன.

இதனை மறுத்துக் கருத்துத் தெரிவித்த நான், நாடாளுமன்றத்திலும் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தேன். 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாம் நிராகரிக்கவில்லை எனத் தெரிவித்த பின்னரும் அரச அச்சு ஊடகங்கள் தொடர்ச்சியாகச் செய்தி வெளியிட்டு வருகின்றன. இதனால் மீண்டுமொரு முறை 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எமது நிலைப்பாட்டை நான் தெரிவிக்கின்றேன்.

13ஆவது திருத்தச் சட்டமானது தமிழர்களுக்கான முழுமையான அதிகாரப் பகிர்வை நிர்ணயிக்கும் காரணி அல்ல. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாததே இப்போது பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அரசு அதனை உடனடியாக முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதிலிருந்து அர்த்தமற்றதை நீக்கி அர்த்தமுள்ளதை உள்வாங்கவேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கின்றது என்று அரச ஊடகங்கள் இனிமேலும் பொய்ச் செய்திகளை வெளியிடுமாயின் அது விஷமத்தனமான செயலாகும்.

**வடக்குத் தேர்தல்**

வட மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என அரசு கூறியுள்ளது. ஏன் அதனை உடனடியாக நடத்த முடியாது?

நாளை நாளை என்பது இல்லை என்றே பொருள்படும். அரசின் கடந்தகால நகர்வுகள் இதனையே எடுத்தியம்புகின்றன. 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் வடக்கில் நடத்தப்பட்டன. கடந்த வருடம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டன. ஏன் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு மட்டும் அரசு காலத்தை இழுத்தடிக்கிறது?

வட மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் தாம் நிச்சயமாகத் தோற்றுவிடுவோம் என்பதை நன்றாக அறிந்துள்ளதாலேயே அரசு அங்கு தேர்தலை நடத்தப் பின்னடிக்கின்றது.

இலங்கை ஐக்கிய ஒற்றுமையுடன் கூடிய நாடாக மாறவேண்டும் எனில், அனைத்து மக்களுக்கும் சரியான முறையில் அதிகாரம் பகிரப்படவேண்டும் - என்று சுமந்திரன் மேலும் கூறினார்.

## 'காப்பெற்' வீதியாகிறது வல்லை - அராலி வீதி

யாழ்ப்பாணம்,நவ.30

வல்லை-அராலி வீதி அகலிப்பு செய்து 'காப்பெற்' வீதியாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சித்தன் கேணி சந்தியில் இருந்து வடலியடைப்பு சந்தி வரை வீதி அகலிப்பு செய்யப்படாத நிலை குறித்து அந்தப் பிரதேச மக்கள் விசனமடைந்துள்ளனர்.

இதேநேரம், வீதி அகலிப்பு செய்யப்படாது இருக்கும் இடத்தைப் பார்வையிட்டு உடன் வீதி அகலிப்புக்கு உத்தரவிடுமாறு கோரி வலி.மேற்கு பிரதேச செயலருக்கும், யாழ்.அரச அதிபருக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளருக்கும் 500 பேர் கையொப்பம் இட்ட மனு ஒன்று வழங்கப்படவுள்ளது.

(ம-41)

## 'ஞானச்சுடர்' இன்று வெளியீடு

வடமராட்சி,நவ.30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை, மாதந்தோறும் வெளியிட்டு வரும் 'ஞானச்சுடர்'' ஆன்மிக சஞ்சிகையின் கார்த்திகை மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் கே.அருணகிரிராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் எஸ்.நவரத்தினராசவேலும், மதிப்பீட்டுரையை அதிபர் எஸ்.பரமேஸ்வரனும் நிகழ்த்துவார்கள்.

(3-8)

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவர் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

அம்பாறை,நவ.30

பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையிலும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் தகைமை பெற்ற இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்க அங்கத்தவர் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

1992 ஆம் ஆண்டு முன்னாள் நீதி மற்றும் உயர் கல்வி அமைச்சர் மர்ஹூம் ஏ.சி.எஸ்.ஹமீதினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட தகைமை பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் முன்மாதிரித் திட்டத்தை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் நடைமுறைப் படுத்தி வருகிறது.

இந்த வருடமும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சங்கத் தலைவர் எம்.அனஸ் தெரிவித்துள்ளார்.

இந்த புலமைப் பரிசில் வழங்கும் திட்டம், இந்த வருடமும் நடைமுறைப்படுத்தப்பட இருப்பது தொடர்பாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தேசியத் தலைவர் அனஸ் ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழக கல்வி பயிலும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு மாத்திரம் புலமைப் பரிசில் வழங்கவென அதன் மூலகர்த்தாவான முன்னாள் அமைச்சர் ஹமீதினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் புலமைப் பரிசில் திட்டம் நிதி நிலைமை காரணமாக சிலகாலம் தடைப்பட்டிருந்தது.

ஆனாலும் 2011 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்று, பாடசாலைக் கல்வி பயிலும் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமாக விரிவாக்கம் பெற்று மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இதன்படி இந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சை மற்றும் 2011 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்ற மாணவர்களில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு, தற்போது வெளியாகியுள்ள புலமைப் பரிசில் பரீட்சையில் தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தரம் 6 முதல் பாடசாலைக் கல்வி பயில்வதற்கு வழங்கப் படவுள்ள இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க, தொடர்ச்சியாகச் சந்தா செலுத்தும் அங்கத்தவர்களின் பிள்ளைகள் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன், பொதுச் செயலாளர், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், 128, அன்பு வீதி, அக்கரைப்பற்று-01 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்-என்றுள்ளது.

(ம-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேப்பாப்பிலவு மக்களுக்கு இராணுவம் அச்சுறுத்தல்

## வழக்குத் தொடரக்கூடாது எனவும் மிரட்டல்

முல்லைத்தீவு, நவ. 29

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் சட்டத்தரணிகளின் உதவியுடன் தமது காணிகளை மீட்டுத்தரக் கோரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர் என வெளியான தகவலை அடுத்து இராணுவத்தினர் அவர்களை மிரட்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாகத் தமது சொந்தக் காணிகளைப் பெற முடியாத நிலையில், பல்வேறு போராட்டங்களை நடத்திவந்த மக்கள் எந்தவித பயனும் கிடைக்காத நிலையில் நீதிமன்றத்தை நாடவுள்ளதாகத் தகவல்கள் பரவிய நிலையில், வழக்கு தாக்கல் செய்ய முற்பட்ட பெண்கள் மூவரை இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர்.

சூரியபுரம் காட்டுப் பகுதியில் வசித்துவரும் குடும்பங்கள் மீதே இராணுவத்தினர் இந்தக் கெடுபிடியை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தாங்கள் அச்சத்துடன் இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கேப்பாபுலவு மக்கள் தமது காணிகளைத் தமக்கு வழங்கக் கோரி அண்மையில் (6 பெண்கள்) வழக்கு தாக்கல் செய்வதற்கு முதற்கட்டமாக பாதுகாப்பு செயலாளர், இலங்கை இராணுவத் தளபதி, சட்டமா அதிபர், முல்லைத்தீவு இராணுவத் தளபதி, கேப்பாப்பிலவு இராணுவ அதிகாரி ஆகியோருக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் 59 ஆவது படைப் பிரிவினர், கிராம சேவகர் அலுவலகத்துக்குக் குறித்த பெண்களை அழைத்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இதன்போது அவர்களை மிரட்டும் தொனியில் கடும் வார்த்தைகளைப் பிரயோகித்ததாக அங்கு கூடிநின்ற மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் வழக்குத் தொடரும் முயற்சி அச்சுறுத்தல் காரணமாக மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சட்டத்தரணிகள் புறக்கணிப்பால் நீதிமன்றில் வழக்குகள் பாதிப்பு

**கைதிகளுக்கு தொடர்ந்து 14 நாள் விளக்கமறியல் உத்தரவும் வழங்கப்பட்டது.**

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை கண்டித்து நேற்று முன்தினம் மன்னார் சட்டத்தரணிகள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டன.

சட்டத்தரணிகள் நீதிமன்றுக்குச் சென்றிருந்தபோதும் அவர்கள் நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபடாமல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால் வழக்கு விசாரணைகளுக் காக வந்த பலர் திரும்பிச் சென்றனர்.

இதனால் புதன்கிழமை இடம்பெறவிருந்த அனைத்து வழக்கு விசாரணைகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இதே சமயம் நேற்றுமுன்னதினம் மன்றுக்கு அழைத்துவரப்பட்ட கைதிகளுக்கு தொடர்ந்து 14 நாள் விளக்கமறியல் உத்தரவும் வழங்கப்பட்டது. (ஐ-12)

# வவுனியா நகரில் கலை இலக்கிய விழா

வவுனியா, நவ. 30

வவுனியா மாவட்ட கலை இலக்கிய விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை நிகழ்வு கவிஞர் கயல்வண்ணன் அரங்கில் நா.தர்மராசா தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் கலந்துகொள்வார்.

நிகழ்வில் இலக்கிய சொற்பொழிவும், ''மனிதன் வாழ சிந்திப்போம்'' என்ற தலைப்பில் கவியரங்கும் நடைபெறும்.

மாலை நிகழ்வு வவுனியா அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிஸ்சந்திர தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வணிக கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்துகொள்ளவுள்ளார்.

மாலை கலை நிகழ்வுகளாக நடனம், சத்தியவான் சாவித்திரி - இசைநாடகம், ''அழைப்பு'' என்ற நவீன நாடகம் என்பன இடம்பெறும். (ஐ-402)

## வசதிகள் இன்றி பஸ் நிலையம்

முல்லைத்தீவு பிரதான பஸ் நிலையத்தில் அடிப்படை வசதிகள் இன்மையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு பிரதான பஸ் நிலையத்தில் பயணிகள் ஒதுங்கி நிற்பதற்குச் சிறிய கட்டட வசதி கூட இல்லை. அத்துடன் அவசரக் கடமைகளை நிறைவு செய்வதற்கும் வசதிகள் இல்லை. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. (ஐ-426)

## மன்னாரில் வாகன நெரிசல்; மாணவர் சிரமம்

மன்னாரில் தற்போது வாகன நெரிசல் அதிகரித்துள்ளதன் காரணத்தினால் காலையிலும், மதிய நேரத்திலும் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் வீதியைக் கடப்பதிலும், போக்குவரத்துச் செய்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகப் பிரதான வீதிகளில் உள்ள பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் காலையில் பாடசாலைக்குச் செல்லவும் பாடசாலை முடிந்தவுடன் வீடு செல்வதிலும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக ஒவ்வொரு பாடசாலைகளுக்கு முன்னாலும் காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் மன்னார் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் விபத்துக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ-12)

# அடிப்படை வசதி எதுவுமின்றி சிறுநாவற்குளம் மக்கள்

## கண்டும் காணாமல் அதிகாரிகள்



மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் அமைந்துள்ள சிறுநாவற்குளம் கிராமத்தில் குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

போர்க் காலத்தில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்த இந்த மக்கள் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி அல்லற்படுகின்றனர். பெரும்பாலான குடும்பங்கள் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியுள்ளன.

தற்போது சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியமர்ந்து மூன்று வருடங்கள் ஆகும் நிலையில் குடிதண்ணீர், கழிப்பறை, மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது அவர்கள் தவிக்கின்றனர்.

இந்த நெருக்கடி நிலைகள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-12)



அண்மையில் பெய்த மழை காரணமாக வன்னேரிக்குளம் ஜெயபுரம் வீதியில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதன்போது அந்த வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டன. (ஐ-18)

# திருப்பழனி முருகன் ஆலயம் அருகில் புத்தர் சிலை அமைக்கத் திட்டம்

வவுனியா, நவ. 30

வவுனியா திருப்பழனி முருகன் ஆலயத்துக்கு அருகில் புத்தர் சிலை வைத்து விகாரை ஒன்றை நிறுவ இராணுவத்தினர் திட்டமிட்டு வருவதாகத் திருப்பழனி முருகன் ஆலயப் பக்தர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகவும், சுற்றுலாப் பயணிகளின் உல்லாச இடமாகவும் திகழும் இயற்கை எழில்மிக்க மலை உச்சியில் புத்தர் சிலை ஒன்றை வைத்து அதற்குப் பாதுகாப்பு என்ற பெயரில் முகாம் ஒன்றை நிறுவுவதற்கும் இராணுவத்தினர் திட்டமிட்டு வருவதுடன் அதனைச் சுற்றி சிங்களக் குடியேற்றத்துக்கு திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கடந்த வருடம் அமைச்சர் ஒருவர் ஆலயத்துக்கு வருகை தந்து நிர்வாகத்தினரிடம் ஆலோசனை ஒன்றை முன்வைத்ததாகவும் நிர்வாகத்தினர்களது எதிர்ப்பால் அந்த நடவடிக்கை அப்படியே கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது இந்த முயற்சி மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-402)

# வெள்ளநீரை அகற்றுவதில் கிளிநொச்சி இராணுவத்தினர்

கிளிநொச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தருமபுரம், குமாரசாமிபுரம், முரசுமோட்டை, ஊரியான் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவத்தினர் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரந்தன், சிவபுரம், காஞ்சிபுரம், கோரக்கன்கட்டு ஆகிய இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் மழை நீரை அகற்றும் முயற்சியிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினருடன் இணைந்து இராணுவத்தினர் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## பண்ணையாளர்களுக்கான கூட்டம்

ஒருங்கிணைந்த பண்ணையாளர்களுக்கான கூட்டமொன்று கடந்த 23 ஆம் திகதி ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட ஒருங்கிணைந்த பண்ணையாளர்களுக்கு இங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் 30 ஆயிரம் பெறுமதியான உள்ளீடுகளும் வழங்கப்பட்டன. பண்ணையாளர்களின் விதை பொருள்களை விவசாய இலாகா பெற்றுக் கொடுக்குமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் நல்லின விதைகள் இந்த மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-500)

# வீடு திரும்பின பாதிக்கப்பட்ட குடும்பங்கள்

அக்கராயன், நவ.30

வெள்ளப்பாதிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்டம் பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த 42 குடும்பங்களும் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளன.

கடந்த சனிக்கிழமை முதல் வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் பெய்து வந்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பூநகரிப் பகுதியைச் சேர்ந்த சுமார் 42 குடும்பங்களைச் சேர்ந்த 145 பேர் நல்லூர் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கு சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டன. இந்தக் குடும்பங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த சில நாள்களாகப் பாதிக்கப்பட்டிருந்த தட்டுவன்கொட்டி கிராமத்துக்கான போக்குவரத்துக் [illegible] யம் தெரிவித்துள்ளது. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழை மரக் கழிவுகளை மண்ணுக்குள் புதைக்க அறிவுறுத்து

வலி.வடக்கு,நவ.30

வாழைமரக் கழிவுகளை மண்ணுக்குள் புதைக்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்தில் மழையை அடுத்து டெங்கு பரவும் நிலைமை அதிகரித்து காணப்படுகின்றது. இந்தநிலையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது.

உடுவில் சுகாதாரப் பிரிவில் வீடுகளில் வாழை வளர்ப்போர் மற்றும் தோட் டங்கள் வைத்திருப்போர் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## குப்பைகளால் அசௌகரியம்

உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்குவேலி, அந்திரான், பகுதிகளில் தேங்கும் குப்பைகளால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு கூட்டத்தில் இந்தவிடயம் தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டது. எனினும் இதுவரை எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, பொது மக்கள் குப்பைகளைக் கட்டி வீதியோரங்களில் வைத்துள்ளமையால் துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது. (ம-86)

# பிரதேச சபைச் செயலாளரின் விவகாரம் அமைச்சர் கவனத்துக்கு

## வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.30

வலி.கிழக்கு பிரதேச சபையில் செயலாளரை இடமாற்றக் கோரும் தீர்மானத்தை உள்ளூராட்சி அமைச்சுக்குஅனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் அ.உதயகுமார் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளரை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்ற கோரிக்கை தற்போது வானுயர்ந்து வருகிறது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் செயலாளரை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்ற தீர்மானம் ஆளுந்தரப்பு உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற சபையின் பொதுக்கூட்டத்திலும் செயலாளரை உடனடியாக இடமாற்றுமாறு ஆளுந்தரப்பு உறுப்பினர்களால் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இன்று வரை இதற்கான நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை. செயலாளரை இடமாற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தொடர்ந்தும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் செயலாளர் முட்டுக்கட்டையாக உள்ளார்.

இவரை உடனடியாக இடமாற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆளுந்தரப்பு ஒன்றுகூடி மாற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது என்று கூறினார். (ம-17)



கொழும்புத்துறை எழிலூர் வேளாங்கண்ணி மாதா ஆலயத்துக்கு முன்பாக விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்காக அந்த நிலம் கனரக வாகனம் மூலம் சீர்செய்யப்பட்டு வருகின்றது. (த-17)

## வலி. கிழக்கில் உடனடியாக 65 வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம்,நவ.30

வலி. கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் தற்போது உடனடியாக 65 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் அ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் நடமாட்டம் கூடிய பிரதான வீதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

சில இடங்களில் மக்களின் உதவியுடன் வீதி விளக்குகளைப் பொருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகச் சந்நிதி வீதி வாதரவத்தை, உரும்பிராய், நீர்வேலி மற்றும் பருத்தித்துறை வீதி ஆகியவற்றுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

இதேவேளை வலி. கிழக்குப் பிரதேசத்தில் பிரதான வீதிகள் பல வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

குறிப்பாக இராச வீதி மற்றும் பருத்தித்துறை வீதி ஆகிய இரண்டுமே வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கியுள்ளன. (த-17)

# உடுவில் சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்பு மும்முரம்

வலி.வடக்கு,நவ.30

உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், சுகாதாரத் தொண்டர்கள், பொலிஸார் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் மூவர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு ஆளாகியிருந்தமை இனங்காணப்பட்டது.

இதனை அடுத்து இந்தப் பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்கள் புகையூட்டல் மற்றும் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, சுன்னாகம் பொலிஸார் டெங்கு பரவக் கூடிய அபாயம் நிறைந்த சூழலை இனங்கண்டு அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வகையில் நான்கு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## பனாட்டு உற்பத்தியில் இம்முறை அதிக கவனம்

பனை அபிவிருத்திச் சபை இந்த முறை போகத்தில் கூடுதலாகப் பனாட்டு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தும் என்று சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த போகத்தில் சபை பனாட்டு உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டவில்லை. இதன் காரணமாகப் பனாட்டுக்குப் பெரும் கிராக்கி நிலவியது. அத்துடன் அதன் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்தப் பனாட்டு கிலோ ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

ஆகையால் இந்தமுறை பனம் பானம் உற்பத்தியில் கூடுதலாகப் பனாட்டையே சபை உற்பத்தி செய்ய இருப்பதனால் இதற்கான கிராக்கி மற்றும் விலை உயர்வு போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியும்- என்று கூறினார். (ம-17)



கரணவாய் வேதாரணிஸ்வரா வித்தியாலயத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிழற்படப் பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த வித்தியாலயத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், வித்தியாலயத்தின் அதிபர் த.இரவீந்திரனிடம் குறைகள், தேவைகள் பற்றி விபரமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டார். பின்னர் வித்தியாலயத்தின் பாவனைக்கென தனது சொந்த நிதியில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்படப் பிரதி இயந்திரத்தைக் கையளித்தார். (ம-8 253)

# கரவெட்டி பிரதேச சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.30

கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாவீரர்களுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபைத் தலைவர்பொ.வியாகேசு தலைமையில் அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடல் ஆரம்பமாவதற்கு முன்னர் சபை உறுப்பினர் ஆ.மதியரசன்எழுந்து "கடந்தசெவ்வாய்க் கிழமை மாவீரர் தினமாகும். எமது பெற்றோர்களை நினைவு கூர சித்திரைப் பூரணை, ஆடி அமாவாசை தினங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அதேபோல எமது உற்றார், உறவுகளை இழந்த நாளில் நாமும் அஞ்சலி செலுத்த வேண்டும்'' எனச் சபையில் கோரிக்கை விடுத்தார்.

அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

தொடர்ந்து உறுப்பினர் க.பரஞ்சோதி, காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் ஆனைமுகனின் வீடு தாக்கப்பட்டதற்கும் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். அந்தக் கண்டனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (த)

## இருவருக்கு டெங்கு

தென்மராட்சி,நவ.30

மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் டெங்கு ஒழிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் சாவகச்சேரி பிரதேச சபையின் பங்களிப்புடன் புகையூட்டல் பணிகள் இடம்பெற்று வருவதுடன் வீடுகள் தோறும் பரிசோதனைகளும் விழிப்புணர்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-9)

# 35 வருடங்களின் பின்னர் வேலணையில் ஆதனப் பதிவு

யாழ்ப்பாணம்,நவ.30

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட ஆதனங்கள் 35 வருடங்களின் பின்னர் மீள் பதிவு செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மண்டைதீவு முதல் நான்கு வட்டாரங்களிலும் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை 5 ஆம், 6 ஆம், 7ஆம், 8 ஆம் வட்டாரங்களிலும் பதிவுகள் இடம் பெறும்.

மண்டைதீவு உப அலுவலகங்களைச் சேர்ந்த மக்கள் தவறாது தங்கள் ஆத னங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

மண்டைதீவு உப அலுவலகங்களைச் சேர்ந்த மக்கள் தவறாது தங்கள் ஆத னங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

பதிவின் போது ஆதனத்துக்கு உரிய காணி உறுதியின் போட்டோப் பிரதி, காணி நில அளவைப் படத்தின் போட்டோப் பிரதி மற்றும் விவரங்களின் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா கேட்டுள்ளார்.

இதேவேளை, மண்டைதீவில் மேற்கொள்ளப்படும் பதிவு விடயமாகத் தென் பகுதியிலும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள உறவுகளிடமும் விவரங்களைத் தெரிவிக்குமாறு சபைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வேலணை பிரதேச சபை இதுவரை நயினாதீவு- வேலணை- புங்குடுதீவு- அல்லைப் பிட்டி ஆகிய உப அலுவலகங்களுக்கு உட்பட்ட ஆதனங்களைப் பதிவு செய்துள்ளது.

இறுதியாக அடுத்த மாதம் முழுவதும் வட்டார ரீதியாகவும், மண்டைதீவு உப அலுவலக ரீதியாகவும் முழுமையான பதிவுகள் நடத்தப்படவுள்ளன. (ம-50)

# தொழில் திணைக்களம் திங்கள் புதிய இடத்துக்கு

யாழ்ப்பாணம்,நவ.30


வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகம், மாவட்ட தொழில் திணைக்களம் என்பன எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் யாழ். பண்ணை வீதியில் புதிதாக அமைந்துள்ள தொழில் திணைக்களத்துக்குச் செல்லவுள்ளன என்று பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு அலுவலகங்களையும் இடமாற்றும் முன்னேற்பாட்டு வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இலக்கம் 103, நாவலர் வீதியில் இயங்கி வந்த வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் அலுவலகமும் யாழ். வீரசிங்கம் மண்டபம் 4 ஆம் மாடியில் இயங்கி வந்த யாழ்.மாவட்டத் தொழில் திணைக்கள அலுவலக முமே இடம்மாறவுள்ளன.

இந்த அலுவலகங்களை இடம்மாற்றுவதற்கான வேலைகள் நேற்றும் இன்றும் இடம்பெற்று வருகின்றன. இதனால் அவசர பணிகள் தவிர்ந்த ஏனைய பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சென்னைக்குச் சென்றிருந்த மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா, தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார்.

## உளவுப்பிரிவு தொலைபேசியை ஒட்டுக் கேட்பது குறைந்தது

### ஈ–மெயில் கண்காணிப்பு அதிகரிப்பு

டில்லி, நவ.30

உளவுப் பிரிவினரின் வேண்டுகோளின்படி, மேற்கொள்ளப்படும், ஈ-மெயில் கண்காணிப்பு, கடந்த செப்ரெம்பரில், 36 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேநேரம், தொலைபேசி ஒட்டுகேட்பது குறைந்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு போன்ற காரணங்களால், உளவுப் பிரிவினர் கேட்டுக் கொள்வதன் அடிப்படையில், சந்தேகத்துக்கு இடமானவர்களின், ஈ-மெயில் கண்காணிக்கப்படுகின்றன.

யாருடைய ஈ-மெயில் கண்காணிக்கப்பட வேண்டும், யாருடைய தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட வேண்டும் என்பதற்கான பட்டியலை, இதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர் மட்ட குழுவிடம் உளவு அமைப்புகள் வழங்கும். கண்காணிப்பு மற்றும் ஒட்டுக் கேட்பதற்கான உத்தரவு வழங்கும், உயர் மட்ட குழுவில், அமைச்சரவைச் செயலர், அஜித்சேத், தொலைத்தொடர்புச் செயலர், சந்திரசேகர் மற்றும் சட்டத்துறை செயலர் பி.ஏ.அகர்வால் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, தங்களுக்கு கிடைக்கும் வேண்டுகோள் கடிதங்களை ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மையை அறிந்து, கண்காணிக்க உத்தரவிடும். சில சமயங் களில், உளவுப் பிரிவினரின் வேண்டுகோள் நிராகரிக்கப்படலாம்.

## நாடாளுமன்றில் தீ; இரு அவைகளுக்கும் விடுமுறை

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நண்பகல் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து இரு அவைகளுக்கும் விடு முறை அளிக்கப்பட்டது. அறை எண் 7 மற்றும் 8 இல் இந்த தீ விபத்து ஏற் பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தீ விபத்தைத் தொடர்ந்து 5 வாகனங்களில் விரைந்து வந்த வீரர்கள், தீயை அணைத்தனர். நாடாளுமன்றக் கட்டடத்தில் ஏற்பட்ட இந்த விபத்தில் எவருக்கும் எந்தக் காயமுமில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும் முக்கிய ஆவணங்கள் எரிந்து சேதமடைந்திருக்கலாம் என்று தெரிகிறது. தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)

### மேட்டூர் அணைப்பகுதியில் நிலநடுக்கம்

## தூக்கத்தில் இருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓட்டம்

சேலம், நவ.30

மேட்டூர் அணைப்பகுதியில் நேற்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மக்கள் அலறியடித்தபடி வீட்டை விட்டு வெளியேறினர்.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 47 அடியாக உள்ளது. இதன் காரணமாக சேலம் மாவட்ட பகுதியைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த மக்கள் அணையின் கரையில் உள்ள வறண்ட பகுதிகளில் சிறிய வீடுகள் கட்டி விவசாயம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் வழக்கம் போல் விவசாயப் பணிகளை முடித்து விட்டு இரவில் தூங்கச் சென்ற விவசாயிகள் நேற்று அதிகாலை 3.49 மணியளவில் வீடுகள் அதிர்வதைக் கண்டு பீதியடைந்து வீட்டை விட்டு குழந்தைகளுடன் வெளியே வந்த னர்.

பெரும்பாலானோர் விவசாயிகளாக இருப்பதாலும் தங்குவதற்கு கூரை வீடுகள் மற்றும் சிமெந்து ஓடுகள் கொண்ட வீடுகளை அமைத்திருந்ததாலும் நில அதிர்வை அதிகளவில் உணர்ந்துள்ளதாகத் தெரிவித்தனர். எனினும் நிலநடுக்கத் தால் அணைப் பகுதியில் எந்த பாதிப்பும் இல்லை எனதகவல்கள் வெளியாகி உள்ளன. (வ)

## நாலடியார் பாடல்களை மனப்பாடமாக ஒப்புவிக்கும் 5 ஆம் வகுப்பு மாணவன்

புதுச்சேரியில், அரச பாடசாலையைச் சேர்ந்த 5 ஆம் வகுப்பு மாணவன் மு.பிரகதீஸ்வரன் நாலடியாரில் உள்ள 400 பாடல்களையும் பொருளுடன் மனப்பாடமாக ஒப்புவிக்கிறார்.

பெத்துசெட்டிப்பேட்டை என்ற ஊரைச் சேர்ந்த சு.முருகன்- மு.கீர்த்திகா தம்பதியின் மகன் மு.பிரகதீஸ்வரன். அவர் அதே பகுதியில் உள்ள அரசு பெண்கள் பாடசாலையில் 5 ஆம் வகுப்பில் கல்வி பயில்கின்றார்.

அவரது தந்தை முருகன், வியாபார நிலையம் ஒன்றில் தினக் கூலித் தொழிலாளராக வேலை செய்கிறார்.

பிரகதீஸ்வரன் ஏற்கனவே திருக்குறளில் உள்ள 1330 பாடல்களையும் மனப்பாடமாக பொருளுடன் சொல்லி சாதனை படைத் துள்ளார். எந்தக் குறளைக் கேட்டாலும் அதற்கு உரிய விளக்கத்தையும் தயங்காமல் சொல்வார். இந்தநிலையில் அவர் நாலடியாரில் உள்ள 400 பாடல்களையும் பொருள் விளக்கத்துடன், மனப்பாடமாகக் கூறுகிறார். அவரிடம், பாடலின் எண்ணைக் கூறினாலே போதும், அந்தப்பாடலுடன் விளக்கமும் சொல்கிறார். கடந்த 6 மாதங்களில் நாலடியார் பாடல் மற்றும் அதன் விளக்கங்களைப் படித்து முடித்துள்ளதாகக் கூறுகிறார்.

## இந்தியா– ரஷ்யா இடையே ஞாயிறன்று 'இந்திரா' இராணுவக் கூட்டுப் பயிற்சி

இந்தியா, ரஷ்ய கப்பல் படையினர் நாளை மறுதினம் ஞாயிறு தொடக்கம் இரண்டு நாள்கள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட உள் ளனர். 'இந்திரா' என பெயரிடப் பட்டுள்ள இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியாவின் போர்க் கப்பல்களான ஐ.என்.எஸ்.மைசூர் உள்ளிட் டவை பங்கேற்க உள்ளன.

ரஷ்யா சார்பில் மூன்று போர்க்கப்பல்கள் கலந்து கொள்கின்றன. அமெரிக்கா- ரஷ்யா இடையே பனிப்போர் நிலவினாலும் இந்தியா இந்த இரண்டு நாடுகளுக்கும் நட்புறவாகவே செயற்படுகிறது.

இந்தியாவின் அணுமின் திட்டங்களில் பெரும் பங்கீட்டில் ரஷ்யா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்தியாவுடனான ஒப்பந்தம் ரத்துச் செய்தது மாலைதீவு

### இந்த அதிரடியால் அதிர்ச்சி, அதிருப்தி

மாலேயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனத்தின் ஒப்பந்தத்தை மாலைதீவு ரத்து செய்தது.

இந்திய பெருங்கடலில், இந்தியாவுக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள நாடு மாலைதீவுகள். பூகோள ரீதியாக இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமான நாடாகவும் ஒரு காலத்தில் இருந்தது மாலைதீவுகள்.

1988 ஆம் ஆண்டு மாலைதீவுகளில் நடந்த புரட்சியை இந்திய கடற்படை வெற்றிகரமாகத் தடுத்து, ஜனாதிபதி முகமது அப்துல் கயூம் அரசைக் காப்பாற்றியது குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டு மாலைதீவுகளின் தலைநகர் மாலேயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக கோரப்பட்ட 511 மில்லியன் அமெரிக்க டொலர் ரெண்டரை, இந்திய நிறுவனமான ஜி.எம்.ஆர்., நிறுவனம் எடுத்திருந்தது.

**2010 ஆம் ஆண்டு மாலைதீவுகளின் தலைநகர் மாலேயில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக கோரப்பட்ட 511 மில்லியன் அமெரிக்க டொலர் ரெண்டரை, இந்திய நிறுவனமான ஜி.எம்.ஆர். நிறுவனம் எடுத்திருந்தது.**

அப்போது மாலைதீவுகள் ஜனாதிபதி நசீத் இருந்தார். அங்கு தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தற்போது முகமது வகீத் தலைமையிலான அரசு செயற்பட்டு வருகிறது.

இந்தநிலையில், முந்தைய நசீத் ஆட்சியில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்யும் பணியில் வகீத் தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஜி.எம்.ஆர்., நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட மாலே சர்வதேச விமான நிலைய மேம்பாட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்துள்ளன மாலைதீவுகள். இதுகுறித்து ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் இமாத் மசூத் கூறுகையில்:-

ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதாகவும், இது முறையான ஒப்பந்தம் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுகளின் இந்த நடவடிக்கை இந்தியாவை அதிருப்தியிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள இந்தியா,

மாலை தீவுகளில் உள்ள இந்தியர்கள், இந்திய நிறுவனங்கள் மற்றும் அதன் சொத்துக்களை பாதுகாப்பதில் இந்தியா உறுதியாக உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், மாலைதீவுகளின் இந்த நடவடிக்கை அந்தநாட்டுக்கு வரும் வெளிநாட்டு முதலீடு மற்றும் சர்வதேச சமூகத் துக்கு விடுக்கப்பட்டுள்ள தவறான சமிக்ஞை என்று கூறியுள்ளது. (வ)

## ஹரியானாவுக்குள் நுழையும் வெளியாரின் கைரேகைகள் பதிவு

சண்டிகர், நவ.30

ஹரியானா மாநிலத்துக்குள் நுழையும் வெளி மாநிலத்தவர்களின் கைரேகைகள் மற்றும் வாகனங்களைப் பதிவு செய்ய மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து மாநிலத்தின் எல்லைப் பகுதிகளான புதுடில்லி, உத்தரப் பிரதேசம், இமாச்சல பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், ஆகிய 30 இற்கும் மேற்பட்ட எல்லைப் பகுதிகளில் இதற்கான கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளன. இது குறித்து மாநில குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலி ஸார் தெரிவித்ததாவது:-

மாநிலத்துக்குள் நுழையும் அனைத்து மக்களிடையே கைரேகை பதிவு செய்யப்பட்டுள்ளது இதன்மூலம் மாநிலத்துக்குள் ஏனைய மாநிலங்களில் குற்றச்செயல்கள் புரிந்தவர்கள் நுழைவது தடுக்க முடியும். கைரேகைகள் மற்றும் எல்லைக்குள் நுழையும் வாகனங்களை சோதனைக்குள்ளாக்குவதன் மூலம் குற்றவாளிகள் வாகனங்களில் தப்புவதற்கும் குற்றச் செயல்களுக்கு துணைபுரியும் வாகனங்களையும் அவ்வப்போது கண்டறிய முடியும்.

தேசிய குற்றச்செயல் தடுப்பு பிரிவின் ஆலோசனையின் பேரில் பரிதாபாத், கூர்கான், மேவாட் ஆகிய சோதனைச் சாவடிகள் அடங்கிய பகுதிகள் தீவிர கண்காணிப்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஏனைய சோதனைச் சாவடிகள் பொலிஸ் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப் பட்டு தீவிரமாக கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது-என்றனர். (வ)

### பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்க

## ரூ.17 லட்சம் செலவில் மைதானம் அமைத்துக் கொடுத்த தந்தை

### இது சன்மானமா, லஞ்சமா?

தனது பிள்ளையைப் பாடசாலையில் இணைப்பதற்காக ரூ.17 இலட்சம் செலவில் கூடைப்பந்து மைதானம் ஒன்றை இலவசமாக தந்தை ஒருவர் அமைத்துக் கொடுத்துள் ளார்.

சென்னை, மயிலாப் பூரில் அமைந்துள்ள பிரபலமான பாடசாலை ஒன்றில் சிவசங்கரன் தனது சிறு வயதுக் குழந்தையைச் சேர்க்க விண்ணப்பித் துள்ளார்.

பாடசாலையில் குழந்தை கல்வி கற்பதற் கான இடம் கிடைத்தும் அந்தப் பாடசாலைக்கு ரூ.17 இலட்சம் மதிப்பிலான கூடைப்பந்து மைதானம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார். இந்த விடயம், தங்களது குழந்தைகளைப் பாடசாலையில் சேர்க்க எதை வேண்டுமானாலும் செய்வோம் என்பதைக் காட்டுகிறதா? அல்லது பாடசாலைகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்காக எதை வேண்டுமானாலும் கேட்டுப்பெறலாம் என்ற மனோபாவத்துடன் பாடசாலைகள் நடக்கின்றனவா என்று அங்குள்ள மக்களைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் தீர்மானம்

### வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

வடகொரியாவுக்கு எதிரான தீர்மானம் முதன் முறையாக வாக்கெடுப்பின்றி ஒருமனதாக ஐ.நாவில் நிறைவேறி உள்ளது.

ஆள் கடத்தல் மற்றும் இதர விதிமீறல்கள் தொடர்பான பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என வடகொரியாவை வலியுறுத்தும் வகையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையின் மூன்றாவது குழுவிடம் வருவதற்கு




8 ஆண்டுகள் ஆன போதிலும், வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேறியது இதுதான் முதன் முறையாகும்.

எனினும் சீனா, கியூபா மற்றும் வெனிசூலா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கவில்லை.

### 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்'

## 7 பேருக்கு மரண தண்டனை எகிப்து நீதிமன்றம் விதிப்பு

முகமது நபியை மோசமாக சித்திரித்து திரைப்படம் தயாரித்த ஏழு பேருக்கு எகிப்து நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

அமெரிக்காவில் முஸ்லிம்களை இழிவுப்படுத்தும் வகையில் 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' (Innocence Of Muslim) என்ற திரைப்படம் வெளியானது.

இந்தத் திரைப்படத்துக்கு எகிப்து, லிபியா, ஆப்கன் மற்றும் பாகிஸ்தான் நாடுகள் உட்பட உலகம் முழுவதும் எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன.

இந்த நிலையில் இந்தத் திரைப்படத்தை தயாரித்த எகிப்து நாட்டைச் சேர்ந்த நகோலா பாஸ்லி உள்ளிட்ட ஏழு கிறிஸ்தவர்களுக்கு மரண தண்டனை விதித்து கெய்ரோ குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவர்கள் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கார்க் குண்டுகள் இரண்டு சிதறின சிரியாவில்

### 54 பேர் சாவு; 120இக்கு மேற்பட்டோர் படுகாயம்



டமாஸ்கஸ், நவ. 30

சிரியத் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஜரமானா நகரில் நேற்றுமுன்தினம் இரண்டு கார் குண்டுகள் வெடித்தன. இதில் பொதுமக்கள் 54 பேர் கொல்லப்பட்டனர். 120 இக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

குண்டுவெடிப்பில் அருகிலிருந்த கட்டடங்களும் பெரும் சேதமடைந்துள்ளன.

குறுகலான வீதியில் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததால் கட்டடங்களின் சுவர்கள் இடிந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல கார்களின் மீது விழுந்தன. எங்கு பார்த்தாலும் மனித உடல்கள் இடிபாடுகளுக்கு இடையே சிதறி கிடப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக புரட்சியாளர்கள் கடுமையாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் காலை போராளிகளுக்கும் சிரிய ஜனாதிபதி அசாத் ஆதரவுப் படைக்கும் இடையே தீவிர மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலை அடுத்து இந்தக் குண்டுவெடிப்பை தீவிரவாதிகள் நடத்தியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பில் 20 பேர் இறந்ததாக முதலில் தெரிவித்த சிரிய மனித உரிமைகள் அமைப்பு பின்னர் 54 பேர் உயிரிழந்ததை உறுதி செய்தது.

ஜராமனாவில் மட்டும் கடந்த 3 மாதங்களில் 4 முறை குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

## மதுசாலையில் துப்பாக்கிச் சூடு – 10 பேர் சாவு

லாகோஸ், நவ. 30

நைஜீரியாவில் மதுபான சாலை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் உயிரிழந்தனர்.

இராணுவ உடையில் வந்த தீவிரவாதிகளே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் மது அருந்திக்கொண்டிருந்த 10 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் இஸ்லாமியர்களும் தெற்கில் கிறிஸ்தவர்களும் அதிகம் உள்ளனர். இங்கு இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கோரி போகோ ஹரம் என்ற இஸ்லாமிய போராளிக் குழு அரசுக்கு எதிராகப் போராடி வருகிறது.

இந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் இந்த பழங்குடியின போராளிக் குழுக்களுக்கும் அரசுப் படையினருக்கும் இடையே சில வருடங்களாக நடந்து வரும் சண்டையில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

## சவூதி தூதரக அதிகாரி ஏமனில் சுட்டுக்கொலை

ஏமன் தலைநகரில் சவூதி தூதரக அதிகாரியும் அவரது பாதுகாவலரும் மர்ம நபர்களால் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்புப் படை சீருடை அணிந்த நபர்கள் சவூதி தூதரக அதிகாரி வந்த கார் மீது துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டதில் கார் கவிழ்ந்தது. தூதரக அதிகாரி காலித் ஷோபெய்கானல் அன்ஸி மற்றும் ஏமனைச் சேர்ந்த அவரது பாதுகாவலரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்தத் தகவலை ஏமன் மற்றும் சவூதி அரசுகள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்தச் சம்பவம் குறித்து ஏமன் புலனாய்வுத்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

## நடுங்கியது இந்தோனேஷியா

### கட்டடங்கள் குலுங்கின; மக்கள் பதற்றம்

இந்தோனேஷியாவின் கிழக்கு கடற்கரையோரப் பகுதியில் நேற்றுமுன்தினம் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடலுக்கடியில் 56 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.5 ஆக பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் கடலோரப் பகுதிகளில் உள்ள கட்டடங்கள் குலுங்கின. மக்கள் பதற்றம், பீதி அடைந்தனர். ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாக தெரியவில்லை.

டுவால் நகரில் இருந்து 157 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கடியில் 12 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் 6.3 ரிச்டர் அளவில் ஏற்பட்டது என்று இந்தோனேஷிய ஆய்வு மையம் முதற்கட்ட தகவலை வெளியிட்டிருந்தது.

இருப்பினும் சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என்று இந்தோனேஷியா அறிவித்ததால் பொதுமக்கள் அதிர்ச்சியில் இருந்து மீண்டனர்.


## சீனாவில் வேகமாகப் பரவும் எயிட்ஸ்

சீனாவில் எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளாதாக உத்தியோகபூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டில் புதிதாக இந்த நோய் வந்தவர்கள் எண்ணிக்கை முந்தைய ஆண்டுகளிலிருந்து பதிமூன்று சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சீனாவில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 5 இலட்சம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தநிலையில் எயிட்ஸ் கட்டுப்பாடு தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூடுதல் பங்களிப்பு ஆற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்று சீன அரசு அறிவித்துள்ளது.

### பாகிஸ்தானின் 'ஹத்ப்-5'

## கண்டம் விட்டு சீறிப் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி



அணு ஆயுதங்களை சுமந்து சென்று 1,300 கிலோ மீற்றர் தூரம் தாண்டித் தாக்ககூடிய 'கோரி' என்றழைக்கப்படும் அதிநவீன 'ஹத்ப்-5' ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

இந்த ஏவுகணை திரவ எரிபொருள் மூலம் இயங்கக்கூடியது. சாதாரண மற்றும் அணு குண்டைத் தாங்கிச் சென்று 1300 கி.மீ. தூரத்தில் உள்ள இலக்கையும் துல்லியமாக தாக்கும் திறன் படைத்தது என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் தடுப்புத்திறன் மற்றும் தேசியப் பாதுகாப்பை இச்சோதனை வலுப்படுத்தி உள்ளதாகவும் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் இந்த ஆண்டில் மட்டும் 60 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் திறன் படைத்த 'ஹத்ப்-1' முதல் 'ஹத்ப்-4' வரை பல்வேறு அதிநவீன ஏவுகணைகளைச் சோதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




எகிப்தில் கலகமடக்கும் பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தும் இளைஞர்கள்..

## ஜேர்மனில் தீ விபத்துக்கு எரிவாயு கசிவே காரணம்

ஜேர்மனில் ஊனமுற்றோர் பணிபுரிந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக்கு எரிவாயுக் கசிவே காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக் குறித்து ஜேர்மன் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வந்தனர். இந்த விசாரணைகளின் முடிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேபாள இளவரசர் போதைப் பொருளுடன் கைது

போதை பொருள் வைத்திருந்தமைக்காக நேபாள முன்னாள் இளவரசர் பராஸ் ஷா கைது செய்யப்பட்டுள்ளார்.

நேபாளத்தில் 2008ஆம் ஆண்டுவரை மன்னராட்சி நடந்தது. இங்கு கடைசி மன்னராக இருந்த ஞானேந்திராவின் மகனே பராஸ் ஷா (வயது 40).

நேபாளத்தில் மன்னர் குடும்பத்துக்கான சலுகைகள் இரத்து செய்யப்பட்டுவிட்டதால் மன்னர் குடும்பத்தினர் வெளிநாடுகளில் தங்கி உள்ளனர்.

இந்த நிலையில் தாய்லாந்தின் புக்கட் தீவில் உள்ள விடுதி ஒன்றில் இருவருக்கிடையே மோதல் ஏற்பட்டது. உடனே விடுதி நிர்வாகத்தினர் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

பொலிஸ் விசாரணையில், போதை பொருள் தொடர்பாக இருவருக்கும் சண்டை ஏற்பட்டதும், இதில் ஒருவர் நேபாளத்தின் முன்னாள் இளவரசர் பராஸ் ஷா என்பதும் தெரியவந்தது.

இருவரையும் கைது செய்த பொலிஸார் பராஸ் ஷாவை 18 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏவுகணைத் தளத்தை விஸ்தரிக்கும் வடகொரியா



வட கொரியாவின் ஏவுகணைத் தள செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளமை செய்மதி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

அமெரிக்க மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு வர்த்தக ரீதியில் செய்மதி புகைப்படங்களை வழங்கும் நிறுவனம் ஒன்றே இந்த புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இதன்மூலம் அடுத்த மூன்று வாரங்களுக்குள் நீண்ட தூர ஏவுகணை பரிசோதனையை வட கொரியா மேற்கொள்ள கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த புகைப்படங்கள் மூலம் அதிகளவு பணியாளர்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் குறித்த ஏவுதளத்தில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பிராந்தியமான கோமா பகுதியிலிருந்து தாம் வெளியேறுவதாக எம் - 23 போராளிகள் குழு அறிவித்துள்ளது. இந்தப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு பிராந்திய நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# மனித உரிமை மீறல்கள் மூன்று நாடுகளில் மோசம்

### ஐக்கிய நாடுகள் சபை குற்றச்சாட்டு

வட கொரியா, ஈரான், சிரியா ஆகிய நாடுகளில் மிக மோசமான முறையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பில் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளதுடன் இது தொடர்பான தகவல்களையும் முன்வைத்துள்ளது.

சிரியாவில் அடிப்படை உரிமைகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் பொது மக்கள் படுகொலை செய்யப்படுவதும் அதிகரித்துள்ளது.

மோதல்களை கைவிட்டு சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் சிரிய அரசாங்கம் செயற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈரானில் நிறைவேற்றப்பட்டுவரும் மரண தண்டனைகள், சித்திரவதைகள், பெண்கள் தொடர்பான அடக்குமுறைகள் என்பன தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

## தப்பினார் தாய்லாந்துப் பிரதமர்

தாய்லாந்து பிரதமர் யெங்லக் ஷினவத்ராவுக்கு எதிராக தாய்லாந்து நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றது.

தாய்லாந்தில் கடந்த ஆண்டு நடந்த தேர்தலில், வர்த்தகப் பிரமுகர் யெங்லக் ஷினவத்ரா பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார். இவர் முன் னாள் பிரதமர் தக்ஷின் ஷின வத்ராவின் சகோதரியாவார்.

ஷினவத்ரா பொம்மைப் பிரதமர் போல் செயற்படுகிறார் என்றும், நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் 3 நாள்களாக விவாதம் நடந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் இந்தப் பிரேரணை தோல் வியுற்றது.

### அமெரிக்க இராணுவத்தில்

## பெண்களுக்குள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

அமெரிக்க இராணுவத்தில் பெண்களுக்கு உள்ள கட்டுப்பாடுகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சான் பிரான்சிஸ்கோவில் உள்ள நீதிமன்றத்திலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க சிவில் சாசனம் என்ற அமைப்பினால் நான்கு பெண் இராணுவத்தினர் சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தற்போது பெண் இராணுவ வீராங்கனைகள் காவலரண்களில் பணியாற்றுவதுடன் பாரதூரமான மோதல் சம்பவங்களில் ஈடுபடுவதற்குத் தடை உள்ளது.

யுத்த களங்களில் நேரடியாகப் போராடுவதற்கு அமெரிக்காவின் பெண் இராணுவத்தினருக்கு தடை உள்ளமை ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்லவென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## விமான நிலையத்தில் திருட்டு; 13 பேர் கைது

பிரான்ஸ் தலைநகர், பரிஸ் விமான நிலையத்தில் பயணிகளின் பொருள்களை திருடியதாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தில் பயணிகளின்பெட்டிகள் ஒரு கிடங்கில் அடுக்கி வைக்கப்படும்.

இந்தக் கிடங்கில் கண்காணிப்பு கமரா பொருத்தப்பட்டுள்ளது. இருப்பினும் கமரா இல்லாத பகுதிகளில் உள்ள பெட்டிகளிலிருந்து நகைகள், துணிகள், தோல் பொருள்கள் போன்றவை திருட்டுப் போனமை தெரிய வந்தது.

இந்தத் திருட்டு தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டனர். சந்தேகம் எழுந்த மற்ற 9 பேரின் வீடுகளில் சோதனையிட்ட பொலிஸார் அவர்களையும் கைது செய்தனர்.


31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
09.08.1943

உதிர்வு
31.10.2012



அமரர் த.நீலாம்பிகை

வாழ்க்கை எனும் பாதையிலே நீ காட்டிய பாசமெல்லாம்
எமைவிட்டுப் பிரிந்து முப்பத்து ஒரு நாள்கள் ஆனதே?
உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட உங்கள் நினைவலைகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்.

கடந்த 31.10.2012 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.11.2012) வெள்ளிக் கிழமை மு.ப.11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(25926)(6-9)

விளம்பரத் தொடர்புகளுக்கு: advt@uthayan.com

பாராட்டி வாழ்த்துகின்றோம்





சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் தற்போது
கொழும்பில் வசிப்பவருமான
மார்க்கண்டு திருவாதவூரன்
- சாந்தினி
தம்பதியரின் ஏக புதல்வி
கனிஸ்கா
கௌரிகரன் திருவாதவூரன்
(KANISHKA GOWRIHARAN
THIRUVATHAVOORAN)
அவர்கள் இன்று (30.11.2012)
வெள்ளிகிழமை
Universithy of Sunderland, England,
UK இல்
Bachelor of Business
Administration (BBA) (Hons)
Special Degree பட்டம் பெற்றுக்
கௌரவிக்கப்படுகின்றார்.
இவர் மேலும் பற்பல பட்டங்கள்
பதவிகள் பெற்று
பாரினில் பலரும் போற்றும்
வண்ணம் வாழ வேண்டும் என
மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பிகள், பெரியப்பா-பெரியம்மா,
சித்தப்பா- சின்னம்மா, அத்தை - மாமா,
சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனிகள்.

விண்ணக வாழ்வில் முதலாம் வருட நிறைவு

அமரர்
நீக்கிலஸ் அல்பேட் ஜெறோம்



மண்ணில்
14.11.1944

விண்ணில்
30.11.2011

"சீவியத்திலும் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"
இவரது ஆன்ம இளைப்பாறுதலுக்காக இன்று (30.11.2012)
வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் அடைக்கல
அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது

மனைவி, மகள்,
மகன்மார், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

38, ஐந்தாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(25837)(2.6)

தசாக கிரஹயக்ஞ அழைப்பு

நிகழும் நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 08 ஆம் நாள்
(23-11-2012) வெள்ளிக்கிழமை சிவபதமெய்திய
எமது தந்தையார்
அமரர்
இரத்தினக்குருக்கள் நாகேஸ்வரசர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்
கார்த்திகை 17 ஆம் நாள்(02-12-2012) ஞாயிறு முற்பகல் 10 மணி தசாகம்
கார்த்திகை 18 ஆம் நாள் (03-12-2012) திங்கள் ஏகோதிஷ்டம். மாசிகம்
கார்த்திகை 19 ஆம் நாள்(04-12-2012) செவ்வாய் சபிண்டீகரணம்
கார்த்திகை 20 ஆம் நாள்(05-12-2012) புதன் கிரஹயக்ஞம்

சமாராதனை

மேற்படி கிரியைகளிலும் 05.12.2012 புதனன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி,
தாவடி, மானிப்பாய் வீதி, சுதுமலை.

(25916)(6)

குடும்பத்தினர்.
0776143359


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(41)

''இந்த சட்டையின் விலை தெரியாது சேர். என் தம்பி சிங்கப்பூரிலிருந்து வாங்கி வந்தவன். இது மாதிரி எல்லாம் இங்கே எங்கே கிடைக்கிறது?'' என்றார்.

டிக்கெட் வாங்க வந்தவர்களில் ஒருவர் தன் சட்டையைப் பாராட்டி விட்டாரே என்பதில் ஒரே மகிழ்ச்சி.



''யன்னல் பக்கம் இல்லாமல் இருக்கையைத் தருகிறேன் சேர். வசதியாகப் பயணம் செய்யலாம்'' என்று சொல்லி கோபு விரும்பியபடியே வசதியான இருக்கையைக் கொடுத்தார்.

மற்றவர்களை நாம் சிறிய விடயங்களில் கூடப் பாராட்டி விட்டால் போதும். உடனே அவர்களுக்கு நம்மை மிகமிகப் பிடித்துவிடும்.

''என்ன சேர் இது? ஒரு மணி நேரமாகக் கியூவில் நிற்கிறேன். ஆடி அசைந்து கொண்டு மெல்ல டிக்கெட் கொடுக்கிறீர்களே! உங்களைத் தட்டிக் கேட்பார் யாருமில்லையா?'' என்று யாராவது கேட்டால், ரிக்கெட் வழங்குபவர் என்ன சொல்வார்?

'நான் என்ன சும்மாவா இருக்கிறேன். ஒருவருக்கு டிக்கெட் கொடுக்க சுமார் மூன்று நிமிடங்கள் பிடிக்கின்றன. நீங்கள் பத்தாவது ஆள் என்றால் அரைமணி நேரம் பிடிக்கும். இருபதாவது ஆள் என்றால் ஒரு மணி நேரம் பிடிக்கும். நீங்கள் வந்து இந்த இடத்தில் உட்கார்ந்து வேலை செய்தால் தெரியும்' என்பார்.

வாக்கு வாதங்கள் முற்றும். மேலும் நேரம் ஆகும். பிரச்சினை தீராது. மாறாக, ரிக்கெட் வழங்குபவர் படும் துன்பத்தையும் நாம் உணர வேண்டும். அவர் உட்கார்ந்திருக்கும் இடத்தில் மின்விசிறி கிடையாது. சரியான வெளிச்சம்கூட இல்லை. உடம்பெல்லாம் வியர்வையால் நனைந்து வேலை செய்யும் நேரத்தில்கூட, அவரை நாம் கவர்ந்திழுக்க, ஆறுதலாக இல்லாவிட்டாலும், கொஞ்சம் பாராட்டிப் பேசினால் போதுமே. அவர் சுறுசுறுப்பாகி விடுவார். மீண்டும் நாம் எப்போதாவது போனாலும் நம்மைச் சிரித்துக்கொண்டே வரவேற்பார்.

இந்த உலகத்தில் நாம் புரிந்துகொள்ளாத ஓர் உண்மை இருக்கிறது. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் என்ன நினைக்கிறான்? அவன் நம்மைவிட மேலானவன் என்று எண்ணுகிறான். இதனால்தான் கோளாறு. நாமும் அவர்களைப் போல், மற்றவர்களைவிட நாம் மேலானவர்கள் என்று எண்ணினால் என்ன ஆகும்? நம்மை யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே, நாம் முதலில் மற்றவர்களிடம் உள்ள சிறப்பை உணர்ந்து அவர்களைப் பாராட்டுவோம். அப்படிப் பாராட்டும் போது, அவர்கள் தம்மைப் பற்றித் தாமாகவே உயர்வாக எண்ணத் தொடங்கி விடுவார்கள். உண்மையில் நாம் அவர்களைவிட உயர்ந்து விடுவோம்.

''நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் என்னைவிட ஏதாவது ஒரு வழியில் சிறந்தவன். ஆகையால் நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் எதையாவது தெரிந்து கொள்கிறேன்'' என்கிறார் எமர்ஸன், என்கிற மாபெரும் தத்துவஞானி.

ரவி ஒரு டாக்டர். அவன் ஜானகியைத் திருமணம் செய்து கொண்டதும் யாழ்ப்பாணத்திலிருந்து ஹனிமூனுக்கு கொழும்பு சென்றான். அவனும் ஜானகியும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கினார்கள். ஆடம்பரமான அறை. சினிமா பார்த்தார்கள். இயற்கைக் காட்சிகளையும் பார்த்து அலுத்துவிட்டது.

''நுவரேலியாவில் என் பாட்டி ஒருத்தி இருக்கிறாள். தூரத்து உறவினர். போய் பார்த்து விட்டு வரலாமே''. ''ஆகட்டும். நமக்கும் ஒரு மாறுதலாக இருக்கும்'' என்று இருவரும் பாட்டியைத் தேடிச் சென்றார்கள். ஓர் ஓட்டோவில் போய் இறங்கினார்கள்.

பாட்டி பார்வதிக்கு அறுபது வயதாகிறது. ஆனாலும் ஆரோக்கியமாக இருந்தாள். கச்சிதமாக இருந்தாள். அவள் கணவர் ஒரு பெரிய கம்பனியில் அதிகாரியாக இருந்தவர். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இறந்து விட்டார். பார்வதி தனியாகவே வாழ்ந்து வந்தாள். அவளுக்குக் குழந்தை குட்டிகள் கிடையாது.

எதிர்பாராமல், தெரிவிக்காமல் திடீரென்று ரவி தன் மனைவியுடன் வந்து இறங்கியதைப் பார்த்ததும் பார்வதிக்கு ஏகப்பட்ட சந்தோஷம்.

''பாட்டி! உங்கள் வீட்டை நான் பார்த்ததேயில்லை. முகவரியைக்கூட எப்போதோ தெரிந்து வைத்திருந்தேன். இப்போது நினைவுக்கு வந்தது. உண்மையில் நாங்கள் உங்களைப் பார்க்க வரவில்லை. ஹனிமூனுக்கு வந்தோம். ஐந்து நட்சத்திர ஹோட்டலும், சினிமாக்களும், பூங்காக்களும் அலுத்துவிட்டன. உங்களைப் பார்த்தால் என்னவென்று நினைத்தோம். உடனே புறப்பட்டு வந்து விட்டோம்'' என்றான் ரவி.

-தமிழ்வாணன்-

(தொடரும்)

# தமிழர் அரசியல் உரிமை பெறலாம் என்ற எதிர்பார்ப்பு பழங்கதையாகிப் போய்விட்டது

## இருந்தது பறிபோகும் நிலை என்கிறார் தமிழ்நேசன் அடிகளார்

மன்னார்,நவ.30

தமிழர்கள் இன்று இக்கட்டான ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். தமது அரசியல் உரிமைகளையும் ஏனைய வாழ்வாதார உரிமைகளையும் படிப்படியாக பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் பொய்யாகி பழங்கதையாகிப் போய்விட்டது.

இழந்த உரிமைகளுக்காகப் போராடும்போது இருக்கின்ற உரிமைகளும் பறிக்கப்படுகின்ற ஒரு நிலையில் இன்று தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மைய இயக்குநரும், மன்னா என்ற மாதாந்த கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் நகரமண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகக் கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் விழாவுக்கு தலைமைதாங்கி உரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் தமது உரிமைகளை வென்றெடுக்க அகிம்சை வழியில் போராட நினைத்த தமிழ் மக்கள் இன்று நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளனர். இழந்த உரிமைகளுக்காக போராடும்போது இருக்கின்ற உரிமைகளும் பறிக்கப்படுகின்ற ஓர் இக்கட்டான வரலாற்றுச் சூழ்நிலையே இன்று நிலவுகின்றது.

''பட்டு வேட்டி பற்றிய கனவில் இருந்தபோது, கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது'' என்ற நிலைதான் இன்று எமக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இன்றைய இளம் தலைமுறையினர் ஊடகக் கல்வியைக் கற்றுக்கொள்வதும், ஊடகங்கள் ஊடாக தொடர்ந்து தமது உரிமைகளுக்காக குரல் கொடுப்பதும் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்த யுகம் 'ஊடக யுகம்' என்று அழைக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று ஊடகங்களே உலகை ஆட்சிசெய்கின்றன. 'கப்பல் வைத்திருந்தவன் 19ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான். விமானம் வைத்திருந்தவன் 20ஆம் நூற்றாண்டை வெற்றிகொண்டான். ஊடக வளமுள்ளவன் இந்த 21ஆம் நூற்றாண்டை வெற்றிகொள்கிறான்'' என்று சொல்லப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு ஊடகக் கல்வி அவசியமாகும்- என்றார்.

பெரிய குஞ்சுக்குளம் பங்குத் தந்தை அருட்திரு. லக்ஸ்ரன் டி சில்வாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார், கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் 'விழுதுகள்' என்ற அமைப்பின் பணிப்பாளர் திருமதி சாந்தி சச்சிதானந்தம், விழுதுகள் அமைப்பின் ஊடக இணைப்பாளர் நிக்சன், அருட்திரு. அருள்ராஜ் மற்றும் அருட்திரு. நெவின்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பெரிய குஞ்சுக்குளம் இளைஞர் ஒன்றியத்தின் முயற்சியில் உருவான 'இளவல்' என்ற நூல் வெளியீடும் இடம்பெற்றது.

(எ-12)



சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(ம)

# விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நூல்களை சிறுவருக்கு நூலகங்கள் வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம்,நவ.30

இளையோர் மற்றும் சிறுவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நூல்கள் மற்றும் நிகழ்வுகளை நூலகங்கள் வழங்க வேண்டும். இதன் மூலம் சமுதாயத்தில் இடம்பெறக்கூடிய கலாசார சீரழிவுகளைக் கட்டுப்படுத்துவதுடன், அறிவாற்றல் உடைய சமூகத்தையும் எதிர்காலத்தில் உருவாக்க முடியும் என்று பரஞ்சோதி வித்தியாலய அதிபர் திருமதி வி.கடம்பமலர் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் நூலகத்தின் புதிய வாசிப்புக் கூடத் திறப்பு விழாவும் நூல்களைக் காட்சிப்படுத்தும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உரையாற்றும் போதே கடம்பமலர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

[illegible] சென்றாலும் நூலகங்கள் அவற்றை அபிவிருத்தி செய்ய நினைக்கின்றன. இதற்கான செயற் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றன. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும். மனிதனின் குண இயல்புகளைக் கூட மாற்றியமைக்கக்கூடிய சக்தி உடையது.

எனவே நூலகங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நூல்கள் மற்றும் நிகழ்வை வழங்க வேண்டும். குறிப்பாக இளைஞர்கள், சிறுவர்கள் நன்மை பெறக்கூடிய வகையிலான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும். பாரதியார் கவிதைகள், திருக்குறள், சத்தியசோதனை போன்ற ஆரம்பகால நூல்களை வாசிக்கத் தூண்ட வேண்டும்.

பெரியோர்கள் கூறிய நல்ல கருத்துக்கள் வாசிப்பின் மூலம் மனதில் ஆழமாக உள்வாங்கப் படும். இதனால் கெட்ட சிந்தனைகளைத் தவிர்த்து நற்பண்புள்ளவர்களாக தாமே மாறிக்கொள்வார்கள். இது போன்ற செயற்றிட்டங்களை நூலகங்கள் கையாண்டால் நூலகம் தானாகவே அபிவிருத்தியடையும்- என்றார்.

(எ-14)

# வாணி விழா மனனப் போட்டி முடிவுகள்

வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் வாணி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பட்ட சகலகலாவல்லி மாலை மனனப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வெளிவந்துள்ளது.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் பரிசு- செல்வி அ.மிருணாளினி (கோப்பாய் ம.வி), இரண்டாம் பரிசு- செல்வி ஈ.நிசானா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.), மூன்றாம் பரிசு- செல்வி ஜெ. கார்த்திகா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.).

**மேற்பிரிவு**

முதலாம் பரிசு- செல்வி ப.சிந்துஜா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.), இரண்டாம் பரிசு- செல்வி சு. வைஷ்ணவி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.), மூன்றாம்பரிசு-செல்வி வெ.ஷம்சிகா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி.).

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தியாலயம் முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய்: 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி: 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி: 0778175116, 'கோபி எலைக்ரிக்' - முல்லைத்தீவு நகர்: 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார்: 023 222 3311

# காக்க முடியாவிட்டாலும் காக்கைவன்னியன் ஆகாதீர்

மாவீரர் நாளில் நீட்டிய தன்னுடைய கொலைவெறி நாக்குகளை, அதிகாரம் இரண்டாவது நாளாகவும் உள்ளெடுக்கவில்லை. முதல் நாளை விடவும் இரண்டாம் நாளில் இரை தேடும் படலம் இன்னும் அதிகமானதாகவே இருந்தது.

முதல் நாள் தம்முடைய விடுதிகளுக்குள் படைத்தரப்பு அத்துமீறி நுழைந்து அச்சுறுத்தியதைக் கண்டித்து புதன்கிழமை பல்கலை மாணவர் தம்முடைய எதிர்ப்பை ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்த முனைந்தனர். ஆரம்பத்தில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் கூடிய மாணவர்கள் பின்னர் பேரணியாக பல்கலைக்கழக பிரதான வாசல் ஊடாகப் புறப்பட்டு, விஞ்ஞான பீட வாசல் வரை பிரதான வீதியூடாக மீண்டும் உள்வரும் திட்டத்தோடு புறப்பட்டனர். பிரதான நுழை வாசலுக்கும் விஞ்ஞான பீட வாசலுக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 150 மீற்றர் தான்.

ஆனால், இந்த 150 மீற்றர் தூரத்துக்குக் கூட ஜனநாயகத்தை பயணிக்கவிட அதிகாரம் விரும்பவில்லை. வன்முறை உணர்வோடு கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் சேதங்களை விளைவிக்கும் முயற்சிகளில் கூட மாணவர்கள் இறங்கவில்லை. அவர்கள் தமது கோபத்தை சுலோகங்களில் உள்ள வார்த்தைகளில் மட்டுமே காட்டியிருந்தனர். மிக மிக அமைதியாக ஒரு ஆன்மீக ஊர்வலத்தைப் போலவே பிரதான வாசலில் இருந்து மாணவர்கள் புறப்பட்டனர். ஆனால் மாணவர்களை கண்டதுமே அதிகாரத்துக்கு இரத்த வெறி பிடித்துவிட்டது. கைகளில் கொட்டன்களோடும், துப்பாக்கிகளோடும் பாய்ந்த படைகள் ஆண், பெண் என்ற பேதமின்றி மாணவர்களை துவம்சம் செய்துவிட்டே ஓய்ந்தது.

இவ்வாறு மாணவர்கள் மீது படைத் தரப்பின் அராஜகம் இரு நாள்களாக நிகழ்ந்த பின்னரும் பல்கலைக்கழக நிர்வாகம் அதைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லை. பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏதேனும் ஒன்றென்றால் துடித்துப் பதைத்து, சம்பவ இடத்துக்கு வந்து அவர்களைக் காக்க வேண்டியது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பு. தமது பிள்ளைகளை எங்கிருந்தோ வந்தவர்கள் நடு வீதியில் வைத்து நாய் போல அடிப்பதை எந்தப் பெற்றோர் கைகட்டி வேடிக்கை பார்ப்பர்?.

பல்கலைக்கழக நிர்வாகத்தை நம்பியே தம்முடைய பிள்ளைகளை பெற்றோர் அனுப்பி வைக்கின்றனர். எனவே பல்கலைக்கழக மாணவர்களை, பெற்றோரின் இடத்தில் இருந்து அவர்களைக் காக்க வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு. ஆனால் அந்தக் கடமையில் இருந்து தவறியதோடு மாத்திரம் அல்லாமல் மாணவர் மீதான தாக்குதலைக் கண்டிக்கக்கூட வக்கற்ற நிலையில் முடமாகிப் போயுள்ளது அந்த நிர்வாகம். கேட்டால், 'துணைவேந்தர் விடுமுறையில் உள்ளார்' என்று நொண்டிச்சாட்டு சொல்லிவிட்டு தப்பிக்கும் முயற்சிகளே தொடர்கின்றன. பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்னல் நேரும்போது விடுமுறையைத் தொடர்வது ஒரு நல்ல நிர்வாகிக்கு அழகாகாது.

இதேவேளை, துணைவேந்தருக்காக பதில் கடமை புரியும் பல்கலைக்கழக 'பேராசான்' ஒருவர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் ஒருவரை ''இவர் பல்கலைக்கழக படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்'' என்று தவறான தகவலை கூறியதால் அந்த மாணவன் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தமது கல்விக் கூடத்தில் பயிலும் மாணவரைக் கூட - அவரது பல்கலைக்கழக அடையாள அட்டையைப் பரிசீலித்த பின்னரும் - இனங்கண்டு கொள்ள முடியாத இத்தகையவர்கள் இருப்பதால் தான் மாணவர்கள் கண்டவர்களிடமெல்லாம் கோயில் மாடு போல அடிவாங்க வேண்டியிருக்கிறது.

பேராசான்களே! பல்கலை மாணவர்களை காக்க முடியாவிட்டாலும் காக்கை வன்னியனைப் போல் காட்டிக் கொடுக்கும் கைங்கரியத்தையாவது கைவிடுங்கள், அது போதும்.

# நியாயப்படுத்த இயலாத படுகொலைகள்

■ தமிழில் வீ.எஸ்.ரீ.

மூலம்: சுனந்ததேசப்பிரிய (ராவய)

தனது பயங்கர செயற்பாடுகளால் நாட்டு மக்களை அச்சுறுத்துவதில் வெற்றிகண்ட அரசொன்றுக்கு எதிராக, வெலிக்கடை சிறைச்சாலைக் கட்டடக் கூரை மீதேறி நின்று ஓரிரண்டு இயந்திரத் துப்பாக்கிகளுடன் சண்டியன்கள் போன்று சவால் விடும் சிறைக்கைதிகளது புகைப்படம் எமக்கு எதனை உணர்த்துகிறது? அந்தச்சிறைக்கைதிகளது சவாலுக்கான பதில் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட மனிதப் படுகொலைகள் குறித்த செய்தி எமக்கு எதனை உணர்த்துகின்றது?

இவ்விரு சம்பவங்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை ஒத்தவை. அதேபோன்று அவை, ஒரு வகையில் இன்றைய இலங்கையின் உண்மையான சுயரூபத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகவும் கொள்ளத்தக்கவை. அதாவது அவை மனிதத்துவம் என்பதற்குப் பதிலாக அச்சுறுத்தல், வன்முறை மற்றும் படுகொலை என்பவை வெற்றிகண்டமையை வெளிப்படுத்தும் சம்பவங்களாகவும் கொள்ளத்தக்கதே.

இலங்கை சிறைச்சாலைகளில் சட்டம் உரியவகையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அது மட்டுமன்றி ஒரு வகையில் இன்று முழு நாட்டிலுமே சட்டத்தின் நிர்வாகம் நலிவு கண்டுள்ளது. அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அரசின் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட அச்சமூட்டும் மனிதப்படுகொலைகள், உரிய முறையில்லாத சிறைச்சாலை சட்ட நிர்வாகம், மற்றும் முறையற்ற நாட்டின் சட்ட நிர்வாகம் என்பவற்றை வெளிப்படுத்தும் வன்செயலின் சமிக்ஞையாகக் கொள்ளத்தக்க குற்றமாகும். அரசியல் அதிகாரம், பணபலம் என்பவை மூலம் போன்றே, அச்சுறுத்தல் மூலமும் நிர்வாகம் முன்னெடுக்கப்படும் இலங்கையின் இத்தகைய போக்கை, ஊடகங்கள் தெளிவாக வெளிக்கொணராதிருப்பினும், வெலிக்கடைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட கைதிகளில் சிலர் கைவிலங்கிடப்பட்ட நிலையில் கொல்லப்பட்டனர் எனச் செய்தி அதனை தெளிவுபடுத்தியுள்ளது. சோதனை நடவடிக்கையென்ற பெயரில் படுகொலை மேற்கொள்ளப்பட்டதெனவும் செய்திகள் வெளியாகியிருந்தன. பாதாள உலகக் கோஷ்டியினரை அழித்தொழிப்பதற்கான வழமையான நடைமுறை வெலிக்கடை சம்பவத்திலும் கைக்கொள்ளப்பட்டிருந்தது.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி தொடர்பாக நாம் சிறைவாசம் அனுபவித்த வேளை, வெலிக்கடைச் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, ஏதோவொரு காரணம் கற்பித்து எமது சகபாடிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் ''மற்றொரு சிறைக்கைதி இன்று உயிரிழப்பு என விளம்பரப் பலகையில் குறிப்பு எழுதுவதுடன் எனது கடமை பூர்த்தியாகிவிடும். நீங்கள் உயிரிழப்பதால் எனக்கென்ன நட்டம் ஏற்பட்டு விடப்போகிறது?'' என இறுமாப்புடன் கூறிக்கொண்டே தாக்குதல் மேற்கொள்வது வழக்கம்.

தடுப்பிலிருந்தோர் மீதோ, கைதிகள் மீதோ தாக்குதல் மேற்கொள்ளும் சிறைச்சாலைக் காவலர்கள் தாக்குதலின் போது எவர் மீதும் ஈவிரக்கம் காட்டுவதில்லை. அவர்களது மனிதாபிமானமற்ற, கொடூரத்தனமான தாக்குதல்களால் படுகாயமுறும் கைதிகளுக்கு ஏற்படும் காயங்கள் குறித்து அங்கிருந்த சிறைச்சாலை வைத்தியர்கள் எந்தவித உண்மையான அறிக்கைகளையோ, குறிப்புக்களையோ மேலிடங்களுக்கு வழங்குவதில்லை என்பது அதைவிடப் பயங்கரமானதொரு விடயமாயிருந்து வந்தது. சிறைச்சாலைகள் [illegible] கைதிகளால் நிரம்பி வழிந்தன என்பதோடு அவை குற்றங்களை வளர்க்கும், குற்றங்களுக்கான திட்டங்கள் தீட்டப்படும் இடமாகவும் இருந்து வந்துள்ளன. சிறைக்குள் கைதிகளாகப் புகுவோர், ஏதோ ஒரு வகை அதிகாரப் பின்னணி கொண்டிருந்தால் அவர்கள் சிறைச்சாலைகளின் அதிகாரபூர்வமற்ற நிர்வாகிகளாகத் தம்மை நிலை நிறுத்திக்கொள்ளும் நிலைமையும் அங்குண்டு. பொதுவாகவே சிறைச்சாலைச் சட்ட நடைமுறைகள், தனிமனித உரிமைகளைக் கணக்கில் எடுப்பதில்லை. அது அரசியல் அதிகார, பணபலப் பின்னணி கொண்ட தரப்பினர், மற்றும் முரடர்கள் விடயத்தில் மட்டுமே தளர்வுப் போக்குக் கொண்டமைகிறது.

அது மட்டுமன்றி, கடந்த 1983 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இதே வெலிக்கடைச்சிறைக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 52 தமிழ் அரசியல் கைதிகள் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அவ்வேளையை அரச அதிகாரத்தரப்பினரால் தூண்டப்பட்ட, அச்சிறைச்சாலைக்குள் கைதிகளாகவிருந்த சிங்கள முரடர்களாலேயே அம் மனிதப்படுகொலைகள் நடத்தப்பட்டன. அவை குறித்து எந்தவொரு விசாரணைகளும் மேற்கொள்ளப்படாதது மட்டுமன்றி, அந்தக்குற்றம் குறித்து எவரும் தண்டிக்கப்படவுமில்லை.

வவுனியாச் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சில மாதங்களுக்கு முன்னர் சிறைச்சாலை நிர்வாகத்துக்கு எதிராக மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்க, இத்தகைய கொடூர படுகொலைகளைப் புரிவதற்குப் பழக்கப்பட்ட விசேட அதிரடிப்படை பணியினர் பயன்படுத்தப்பட்டனர். அந்த வேளையிலும், அதன் பின்னரும் விளக்கமறியல் கைதிகள் மீது அவர்கள் மேற்கொண்ட குரூரத்தாக்குதல் காரணமாக இரு தமிழ் அரசியல் கைதிகள் உயிரிழக்க நேர்ந்தது. அந்தப்படுகொலைகள் தொடர்பாக முறைப்படியான விசாரணைகள் மேற்கொள்ளப்படாதது மட்டுமன்றி, அச்சம்பவம் தொடர்பாக எவரும் தண்டிக்கப்படவுமில்லை. தற்போது அது 'கிரியத்' வீரர்களின் வீரதீரச்செயற்பாடாக ஆகியுள்ளது. விடுதலைப்புலிகளான அவர்களைக் கொல்வதில் தவறென்ன? என நியாயம் கற்பிக்கப்பட்டமைபோன்று தற்போது வெலிக்கடைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகவும் கூட பாதாள உலகக் கோஷ்டியினரைக் கொன்றமை தவறல்ல என நியாயம் கற்பிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாகக் கூட, சமூக ஆர்வலர் தரப்பாக நின்று தமிழ் மக்களது நியாயமான உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தரப்பினரே கேள்வி எழுப்பி வருகின்றனர்.

அடுத்தவரின் வாழ்வுரிமை பாதிக்கப்படும் வேளை, அது குறித்துக் குரல் எழுப்ப முன்வராத எமது சமூகச் சூழலில் இந்த வெலிக்கடைச் சம்பவம் தற்போது மழுங்கடிக்கப்பட்டதொன்றாக அமையக்கூடும். சரி, படுகொலை மேற்கொண்டோரை இப்போது என்னதான் செய்ய இயலும் என இன்றைய சமூகம் வினாவக் கூடும். அவர்கள் கொல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்டவர்கள்தான். ஆனால் கொலைகாரர்களோ மேன்மேலும் தமக்கு இரைதேடி மோப்பம் பிடிக்கிறார்கள் என்பதை நாம் கூறி வைத்தாக வேண்டியுள்ளது. அவ்விதம் எதிர்காலத்தில் அக்கொலைகாரக்கும்பலின் இரையாக ஆகப் போவது யாரென்பதை யாரறிவார். ஏன் பல்கலைக்கழக விரிவுரையாளரொருவரோ, அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் மாணவரொருவரோ, பணி தவிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளும் தாதியொருவரோ, தொழிற்சங்கத்தலைவரொருவரோ இக்கொலைக்காரக்கும்பல்களின் இலக்காக ஏன் இருக்கக்கூடாது? கொலை என்பது வெறுமனே மரணத்தை விளைவிப்பது மட்டுமேயல்ல. பயமுறுத்தல், அச்சுறுத்தல் என்பவை மூலம் பீதியுறவைத்து ஒரு மனிதனை மனதளவில் கொல்லாமல் கொல்வதும் மரணம் ஏற்படுத்துதலுக்கு நிகரானதொன்றே.

அரசின் பின்புல அனுசரணையுடன் குற்றமிழைப்போர் அதற்கான தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வது இன்று இந்நாட்டின் அசிங்கமான அரசியல் கலாசாரமாகி விட்டுள்ளது. அந்த வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் நடந்தேறிய படுகொலைச்சம்பவம் தொடர்பாக எவரொருவர் கூட தண்டிக்கப்பட்டதாக இல்லை.

கைதிகள் தம்வசம் ஆயுதங்கள் வைத்திருந்தனர் என்பதற்காக மட்டும் அவர்களில் 27 பேரைப் படுகொலை செய்ததை நியாயப்படுத்தி விட இயலாது. அவர்கள் சிறைச்சாலைக்குள்ளிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றித் தம்வசம் வைத்திருந்த போதிலும் சிறைச்சாலை வளாகத்துக்குள்ளேயே இருக்க நேர்ந்துள்ளது. ஆதலால் உயிர்ப்பாதுகாப்புக்கெனக் கூறிக்கொண்டு, சட்டி, பானைக் கடைக்குள் புகுந்த மாடு சேதம் ஏற்படுத்தியமை போன்று கண்மண் தெரியாது கைதிகள் மீது துப்பாக்கி வேட்டு மழை பொழியாமல், உணர்ச்சிவசப்பட்ட நிலையிலிருந்த கைதிகளுடன் சுமுகமாக பேசி அவர்களைச் சாந்தப்படுத்த முதலில் முயற்சித்திருக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அதுவே உரிய வழிமுறை என்பதை அனுபவங்கள் புலப்படுத்தியுள்ளன.

ஆனால், ஆயிரக்கணக்கான தமிழ் குடிசார் பொதுமக்கள் உயிரிழக்கும் அபாயத்தைக் கணக்கில் எடுக்காது, விடுதலைப்புலிகளை அழித்தொழிப்பதே வீரத்தனம் மற்றும் வழமையான குறிக்கோள் எனக் கருதிச் செயற்பட்ட இலங்கை அரசின் நடைமுறை நியாயப்படுத்தப்படுகிறது. உண்மையில் அரசின் போக்கு முதலில் இலக்கொன்றை முன்வைத்து படுகொலை செய்வது; அதன் பின்னர் அதனை நியாயப்படுத்துவது என்ற விதத்தில் அமைகிறது. பல்லாயிரக் கணக்கான தமிழ்க்குடிசார் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் போரில் அரசின் வீரப்பிரதாபத்தை பாராட்டிப் புகழும் சிங்கள சமூகத்துக்கு அரசிடமிருந்து இதற்கும் மேலாக வேறெந்தப் பெறுபேற்றையும் எதிர்பார்க்க இயலாது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஆர்ப்பாட்டம், றொசான் சானக படுகொலைச்சம்பவம், சிலாபம் மீனவர் போராட்டம் என்பவற்றின் போதான படையினரின் படுகொலைகள் மற்றும் தமிழ்க்குடிசார் பொதுமக்களது படுகொலைகள் என்பவற்றின் போதெல்லாம் ஒரே விதமான அடக்கு முறை உத்தியே கைக்கொள்ளப்பட்டது. நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களை அரச ஊடகங்களைப் பயன்படுத்தி கொச்சைப்படுத்தி தேசத்துரோகிகளாகச் சித்திரித்தமையும் இத்தகைய அடக்கு முறை முனைப்பின் பாற்பட்டதே. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கூட அடக்குமுறைமுனைப்பைக்கொண்டதே. மொத்தத்தில் போர் முடிவின் பின்னர் இலங்கை தொடர்ச்சியாகவே சண்டித்தனப் பாணியிலேயே பயணிக்கிறது.

ஹிட்லரின் நாஸி வதைமுகாமில் கைதியாக அடைபட்டிருந்த மதகுரு மார்ட்டின் நிமோலர் குறிப்பிட்ட ''அவர்கள் என்னைத் தேடி வந்த போது எனக்கு உதவுவதற்கோ, பச்சாதாபப்படுவதற்கோ வேறு எவர் கூட இருக்கவில்லை என்ற வார்த்தைக்கு உதாரணம் காட்டும் நாடு சிலவேளை இலங்கையைப்போன்று வேறெதுவும் இல்லாதிருக்கலாம். பாதாள உலகக் கோஷ்டியினரைக் கொலை செய்வதில் தப்பென்ன? என்ற வாதம் தவறானது. ஏனெனில் அவர்களும் கூட மனிதப்பிறவிகளே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ சிவேசன்


# தொழில் முயற்சிகளின் தளமாய் மாறவேண்டிய வடமாகாணம்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவில் சுமார் 30 ஆண்டுகளாக நிலைத்து நீடித்த கொடிய போர் ஓய்ந்தும் கூட போரின் வடுக்கள் ஆறவில்லை. போரின் பின்னரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை. அதே வேளை அபிவிருத்தி என்னும் போர்வையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் குறிப்பாக வடக்கில் நிகழும் வளச்சுரண்டல்கள் ஓய்ந்தபாடில்லை. இந்த மாயப் போர்வைக்குள்ளிருந்து வெளிவந்து மக்கள் அபிவிருத்தி பற்றியும் புதிய தொழில் முயற்சிகள் ஆரம்பிப்பது பற்றியும் சிந்தித்து தெளிவான முடிவை வேகமாக எடுக்க வேண்டிய தேவைப்பாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

**உல்லாசப் பயணவிடுதிகள், பொதுவிடுதிகள்**

இலங்கைக்கு வெளிநாட்டு அந்நிய செலாவணியை உழைத்துத் தரும் துறைகளில் உல்லாசப் பயணத்துறையும் ஒன்றாகும். முடிவுற்ற போருக்குப் பின்னர் வடக்கு நோக்கி வருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடியவாறு சகல வசதிகளையும் கொண்ட உல்லாச விடுதிகளை அமைத்தல். அவ்வாறு அமைக்கப்படுகின்ற உல்லாச விடுதிகள் தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் தமிழர்களது விருந்தோம்பும் பண்புகளைப் பிரதிபலிக்கச் செய்வதாகவும் அமைய வேண்டும். இவ்வாறான உல்லாச விடுதிகள் ஐந்து மாவட்டங்களிலும் அமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் அவதானிக்கலாம். யாழ்.மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கசூரினா, சாட்டி கடற்கரையோரங்களிலும் காங்கேசன்துறை, பருத்தித்துறை கடற்கரைகளிலும் உல்லாசப் பயண விடுதிகளை அமைத்தல் சாலப் பொருத்தமாக இருக்கும். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக் கடற்கரைக்கு அருகில் அமைப்பதன் மூலம் உல்லாசப் பயணிகளை கவருவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கும்.

இதற்கும் மேலாக உள்ளூர் உல்லாசப் பயணிகளுக்கும் சுற்றுலா வருவோர்களுக்கும் தங்கும் இடவசதி விடுதிகள், உணவு வசதிகள் என்பவற்றைப் புறநகர்ப்பகுதிகளிலும் அமைத்துக் கொள்ளலாம்.




**கடல்சார் தொழில்கள்**

யாழ்.மாவட்டம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் காணப்படுகின்ற கடல் பகுதிகளிலும் நன்னீர் ஏரிகளிலும் அரிய பல வகையான மீன் இனங்கள் காணப்படுகின்றன. இந்த மீன் இனங்களைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மீன்பிடி வள்ளம், மீன்வலை போன்றனவற்றை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை அமைக்கலாம். யாழ்ப்பாணத்தில் குருநகரில் சீ-நோர் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இதுபோன்று ஐஸ் கட்டித் தொழிற்சாலை, சினோர் தொழிற்சாலை என்றவற்றை ஆரம்பிப்பதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது. ஐஸ்கட்டி தேவையாக இருப்பதனால் இத்தகைய தொழிற்சாலைகள் அமைப்பது தேவைப்பாடு உடையது. மற்றும் இந்த மாவட்டங்களுக்குத் தேவையான ஐஸ் வேறு இடங்களில் இருந்து கூலர் மூலம் எடுத்து வரப்படுகின்றது.

★ மீன்பதனிடல் தொழிற்சாலை (கருவாடு)

★ மீன்களைப் பதப்படுத்தி ரின்களில் அடைக்கும் தொழிற்சாலை.

★ கடல் கலங்கள், மீன்பிடி வலைகள், மிதவைகள் உருவாக்குவதற்கான் தொழிற்சாலைகளை அமைக்கலாம். வேலைவாய்ப்பும் குறைந்தளவு பணத்துடன் நிறைவாக மீன்பிடி உபகரணங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

**தென்னை சார் பொருள்கள்**

ஒரு தென்னையில் இருந்து பல்வேறு முடிவுப் பொருள்களை உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக இளநீர், தேங்காய், தேங்காய்ப் பால், தேங்காய்பாலுந்தல் கொப்பறா, பூ இனிப்பு வகைகள், தேங்காய் எண்ணெய், தென்னை மட்டை, ஈர்க்கினை கொண்டு விளக்குமாறு, தும்பைப் பயன்படுத்தி தும்புக்கட்டை, கயிறு, கைவினைப்பொருள்கள் போன்ற பொருள்களை உருவாக்கலாம். இவ்வாறு பதனிடல், பொதியிடல், போத்தலில் அடைத்தல் போன்ற தொழில்களுக்கும் அதிகளவிலான மூலதனம் தேவைப்பாடு உடையதாகக் காணப்படுகின்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் குறிப்பாகப் பூநகரி, பளை பிரதேசங்களில் மேற்கூறிய தொழில்களைச் செய்யக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

வடமாகாணத்துக்குத் தேவையான தேங்காய் எண்ணெய் வெளிநாடுகளில் இருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் வருவதனால் தேங்காய் எண்ணெய் மற்றும் அரைக்கும் ஆலை ஒன்றை அமைப்பது மிகப் பொருத்தமானதாக இருக்கும். இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெய் உரிய முறையில் போத்தலில் அடைத்து சந்தைக்கு அனுப்பினால் சந்தை வாய்ப்புக்கள் அதிகம் இருக்கும்.

சமகாலத்தில் தும்புசார் பொருள்களின் பாவனை குறைவாக உள்ளதெனப் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பவர்கள் எண்ணலாம். ஆனால் முன்னைய காலத்துடன் ஒப்பிடும்போது பிளாஸ்ரிக் பாவனை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. இருந்தபோதும் தும்புப் பொருள்களை பிளாஸ்ரிக் பொருள்களின் தரத்துக்கு இணைய உற்பத்தி செய்தால் சந்தையில் போட்டி போட முடியும்.

**மண்பாண்ட சார்தொழில்கள்**

முருங்கன் பிரதேசத்தில் காணப்படுகின்ற களி மண்ணைப் பயன்படுத்தி மட்பாண்ட தொழிற்சாலைகளை உருவாக்கலாம். அதாவது பானை, சட்டி அழகு சாதனப் பொருள்கள், சாடி, சிலைகள் போன்றவற்றை செய்யலாம்.

விசுவமடு, உருத்திரபுரம், வள்ளிபுரம் மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் அதிகளவான மரமுந்திரிகை செய்கை பண்ணப்படுகின்றது. இத்தகைய மரமுந்திரிகைகளைமூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய அல்லது அவற்றுள் பெறுமதி சேர்த்து புதிய முடிவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாம்.

வடமாகாணத்தில் கட்டட நிர்மாணிப்பு வேலைகள் நடைபெறுவதனால் நிர்மாணிப்பு வேலைகளுக்குத் தேவையான 4" 5" சிமெந்து கற்கள், தூண்கள், அழகான பூச்சாடிகள் போன்றன உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். இவ்வாறான கட்டட நிர்மாணிப்பு வேலைகளை செய்யக் கூடிய ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிறுவனங்களுக்கான கேள்வியும் அதிகமாயுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிகளவான விளைநிலங்கள் காணப்படுகின்றன. அந்த விளை நிலங்களில் பெரிய அளவில் அதாவது ஏக்கர் கணக்கில் மாமரத்தோப்பு, பலாமரத்தோப்பு, வாழைத்தோட்டம் போன்றவற்றை உருவாக்கலாம். ஏனெனில் மிக விரைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் பெரிய அளவில் பழச்சாறு தொழிற்சாலை ஒன்றை Cargil நிறுவனம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. அத்துடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்கள் உள்நாட்டுக்கே பற்றாக் குறையான நிலையில் உள்ளன. அத்துடன் இந்தப் பிரதேசங்களில் பெரிய அளவில் வளர்ப்புக்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இங்கு உள்ள விளை நிலங்களில் சிறுகுறிஞ்சா, கருவேப்பிலை போன்றவற்றை செய்கை பண்ணி அவற்றை தூளாக அரைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. மேலும் இத்தகைய பொருள்களுக்கு வெளிநாடுகளில் அதிகளவு கேள்வியும் உள்ளது.

பனைவளம் இங்கு அதிகளவு காணப்படுகின்றது. இவற்றிலிருந்து கள், பதனீர், பனாட்டு, பனங்கட்டி போன்ற பொருள்களையும் பனை ஓலையில் இருந்து கடகம், ஏனைய பெட்டி வகைகள், கைவினைப் பொருள்கள் போன்றவற்றையும் உருவாக்கலாம். எனவே இவ்வாறான தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் அதிகளவிலான நெற் செய்கைகள் காணிகள் காணப்படுகின்றது. வானம் பார்த்த பூமியாக வெறும் ஒரு போகச் செய்கையுடன் நிறுத்தாமல் இந்த நிலங்களில் குறைந்தகால அறுவடையைக் கொண்டதும் குறைந்தளவான நீரின் பயன்பாடுடையதுமான உழுந்து, பயறு, எள் போன்ற உப தானியங்களை உற்பத்தி செய்யலாம்.

விசுவமடுப் பகுதியில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட கோதுமைப் பயிர்ச் செய்கை வெற்றியளித்துள்ளது. எனவே நெல்லின் நுகர்வு வீதத்தைக் காட்டிலும் கோதுமையின் நுகர்வு வீதம் யாழ்ப்பாணத்தில் அதிகமாகையால் கோதுமைச் செய்கையை ஊக்குவிக்கலாம். ஆகவே வடமாகாணத்தில் போதிய அளவு வளங்கள் காணப்படுகின்றன. அவ்வளங்களைப் பயன்படுத்தி புதிய நல்ல முயற்சிகளை ஆரம்பிக்கலாம்.

---

■ சி.நற்குணலிங்கம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.


# பரீட்சையை 'சோதனை' ஆக்கக் கூடாது

கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகிறது. இந்த விடயத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும். கற்கும் மாணவர்கள் பதற்றமடையாது தமது காரியத்தில் ஈடுபட வேண்டும். பதற்றத்தைப் பொறுத்தமட்டில் செயலும் அதுவே. விளைவும் அதுவே. காரணமும் அதுவே. காரியமும் அதுவேயாகும். இன்றே செய் நன்றே செய் என்பதற்கு அமைய கற்றலை பிற்போடக் கூடாது. தமிழில் அழகாகச் சொல்வார்கள். "தள்ளிப் போடு வதைக் கிள்ளிப் போடுங்கள்" என்று. மாணவர்கள் எப்போதும் உயர்வைப் பற்றியே சிந்திக்க வேண்டும். உயர்வு கிடைக்காவிட்டாலும் கூட அவ்வாறு சிந்திப்பதை நிறுத்தக் கூடாது என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

தோல்வி என்கிற எண்ணம் ஆக்கபூர்வமான சிந்தனையாகாது. அது ஓர் எதிர்மறைச் சிந்தனையாகும். துணிச்சலைத் துணையாகக் கொண்டவர்களுக்கு வெற்றி நிச்சயம்.

கற்பாடம், பரீட்சை வினாப்பத்திரம், வினாக்களுக்கு விடையளித்தல் என்பவற்றின் தொகுப்பே பரீட்சை எனப்படும். பரீட்சையில் கற்றல் நிகழ்வு மிக முக்கியமானதாகும். கற்றலானது ஈடுபாட்டுடனும் ஊக்கத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாணவன் தனக்கு ஒத்துப் போகின்ற, விருப்பமான முறையில் கற்றலில் ஈடுபட வேண்டும். தனித்துக் கற்றல், கூட்டாகக் கற்றல், உரத்து வாசித்தல், மௌனமாக வாசித்தல், மனனஞ்செய்தல், ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கற்றல், கற்றவற்றை எழுதிப் பார்த்தல், இன்னொருவருக்கு சொல்லிப் பார்த்தல் என எது தனக்கு ஏற்றதோ ஏற்றவைபோ அவற்றைப் பின்பற்றிக் கொள்ளலாம். அத்துடன் [illegible] மான அளவு பயிற்சிகள் [illegible] பட வேண்டும். இரவு வேளைகளில் கூடிய நேரம் கற்றலுக்கு ஒதுக்கக்கூடாது. காலை வேளையிலும் கற்பதற்கான நேரம் ஒதுக்கப்பட வேண்டும். இதுவே மனனத்துக்குப் பொருத்தமான நேரமாகும்.



கற்கும் நேரம் மிக நீண்டதாக அமையக் கூடாது. இடை விட்ட கற்றல் சிறந்ததாகும். கற்கும் நேரத்தை மாற்றக் கூடாது. கற்பதற்கு என ஒதுக்கப்படும் நேரமானது நாளுக்கு நாள் மாற்றமடையாத வகையில் பின்பற்றப்படல் வேண்டும்.

பாடங்களை முன்னுரிமைப் படுத்தி கற்க வேண்டும். கடினமான பாடம், இலகுவான பாடம் என வகைப்படுத்தக் கூடிய வகையில் பாடங்கள் காணப்படுவதுண்டு. எனவே கடினமான பாடங்கள் எனக் கருதும் பாடங்[illegible] காலத்தையும் ஒதுக்கிக் கற்க வேண்டும். கட்டாயம் எல்லா அலகுகளும்படிக்கப்பட வேண்டும். அதேவேளை பாடம் தொடர்பாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க ஆசிரியர்களின் உதவியை அவ்வப்போது பெற்றுக்கொள்ள வேண்டும்.

கற்கும் சூழல் கற்றலுக்கான சூழலாக அமைந்திருக்க வேண்டும். அமைதி, சுத்தம் பேணப்பட வேண்டும். மனதில் அமைதியும் சந்தோஷமும் நிலவவேண்டும். அத்துடன் கற்றல் நுட்பங்களும் பின்பற்றப்படுமாயின் கற்றலுக்கான நேரம்மீதப்படுத்தப்படும்.

ஆசிரியர்- மாணவர் இடையிலான உறவு சிறந்ததாக அமைய வேண்டும். மாணவர் விடை காண சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். வலுக்கட்டாயப் படுத்தி கற்பித்தலில் ஆசிரியர்கள் ஈடுபடக் கூடாது. கற்பிக்கும் ஆசிரியரது தொனி சிறப்பாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாணவரது உன்னிப்பான கவனம் அவசியமானதாகும். ஆசிரியர் வினாக்களைப் பொதுவாகவும் விடையைத் தனித்தனியாகவும் கேட்க வேண்டும். கற்றல்- கற்பித்தலில் ஆசிரியர் சிந்திப்பவராகவும் மாணவர் செயற்படுபவராகவும் இருக்க வேண்டும். விளங்காதவற்றை மாணவர்கள் ஆசிரியரிடத்தில் கேட்டுத் தெளியக் கூடிய வகையில் ஆசிரிய- மாணவர் உறவு காணப்படல் வேண்டும்.

மாணவர்கள் சிறந்த முறையில் கற்று பரீட்சையில் தேறுவார்களாயின் சோதனைகள் வேதனைகளாக அமையாது. எதிர்கால உலகு சிறப்பாக அமைய ஆரோக்கியமான, புத்தியுள்ள, ஆளுமையுள்ள, சிறந்ததலைமைத்துவமுள்ள சமுதாயம் சமைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவத்தை அழி

எல்லாம் அவன் செயல் அவனின்றி ஓர் அணுவும் அசையாது.

அவன் ஆட்டுகின்றான். நான் ஆடுகின்றேன். என்னால் ஆவதொன்றும் இல்லை என்று நினைப்பது ஞானம். என்னால் எல்லாம் முடியும் என்று நினைப்பது ஆணவம். புராண இதிகாசங்கள் அனைத்தும் ஆணவத்தால் அழிந்தவர்களையே சித்திரித்துக் காட்டுகிறன.

ஆணவக்காரர்களின் முடிவு கொடுமையானதாக இருக்கும் என்று அது எச்சரிக்கிறது. இராவணன், துரியோதனன், இரணியன், நரகாசுரன் சூரபத்மன், பத்மாசுரன் ஆகியோர் ஆணவத்தின் அடையாளச் சின்னங்கள். ஆணவம் என்பது தீயோருக்கும் ஏற்படும் நல்லோருக்கும் ஏற்படும்.

தீயோரின் ஆணவம் அழிவுக்குக் காரணமாக இருக்கிறது. நல்லோரின் ஆணவம் இறைவன் அருளால் விரைவில் அழிக்கப்படுகிறது.

நல்லோர்க்காயினும், தீயோர்க்காயினும் ஆணவம் என்பது அழிக்கப்படவேண்டிய ஒன்றே. ஆணவத்தை விடுத்து அடக்கமாக இருக்க வேண்டும் என்பதே இந்து மதம் கூறும் கருத்து. முன்னேற விரும்புகிற எவனுக்கும் ஆணவம் பெருந்தடை.

இராமாயணத்தில் ஆஞ்சநேயர் மிகுந்த பலசாலி. சீதையை மீட்க, அவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியவை. அவருடைய சேவையைப் பாராட்டி, சீதாதேவியே சிரஞ்சீவியாய் வாழும் வரத்தைத் தந்தாள். அதே போல், மகாபாரதத்தில் அர்ச்சுனன் சிறந்த வில்லாளி.

வில்லுக்கு விஜயன் என்று பெயரெடுத்தவன். யுகந்தோறும் வாழும் பேறு பெற்ற அனுமனை அர்ச்சுனன் ஒரு முறை, ஒரு கடற்கரையோரம் சந்தித்தான். அர்ச்சுனனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அனுமனிடம் அதைக் கேட்டான்.

''இராமன் ஒரு சிறந்த வில்லாளியாயிற்றே! அவர் கடலில் கட்டிய பாலத்தைத் தன் அம்புகளாலேயே கட்டியிருக்கலாமே! பின் எதற்காக கற்களால் கட்டினார்?'' என்றான் அர்ச்சுனன். அதற்கு அனுமன் சிரித்துக் கொண்டே, ''அவ்வாறு கட்டியிருந்தால் என்போன்ற குரங்குகளின் பலம் தாங்காமல் உடைந்து போயிருக்கும்'' என்றார்.

அனுமன் கூற்றை அர்ச்சுனன் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக அர்ச்சுனன், ''நான் இப்போதே இந்தக் கடலில் அம்புகளால் பாலம் அமைக்கிறேன். அதைத் தங்களால் உடைக்க முடியுமா?'' என்றான்.

''உடைத்து விட்டால்...? என்று கேட்டான் அனுமன்.

''தாங்கள் நான் கட்டிய பாலத்தை உடைத்து விட்டால் இங்கேயே தீயில் புகுந்து இறக்கிறேன்'' என்று சவால் விடுத்தான் அர்ச்சுனன். ஆஞ்சநேயரும் அதற்குச் சம்மதித்தார்.

உடனே அர்ச்சுனன் அம்புகளை விடுத்து ஒரு பாலம் அமைத்தான். ஆஞ்சநேயர் அந்தப்பாலத்தின் மீது தன் கால்விரலை வைத்த போதே பாலம் உடைந்து தூள் தூளானது. தோல்வியை ஒப்புக் கொண்ட அர்ச்சுனன், தான் வாக்களித்ததைப் போல், தீயில் புகத் தயாரானான்.

அவ்விடத்திலேயே தீ மூட்டினான். நெருப்பை வலம் வந்து, அதில் குதிக்க முற்படும்போது, பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அங்கே தோன்றினான். இருவருக்குள் நடந்த போட்டியை, அவர்களிடம் கேட்டறிந்தான் ஸ்ரீ கிருஷ்ணன்.

அதன் பின், ''உங்கள் இருவரின் போட்டி செல்லாது. ஏனெனில் போட்டி என்றிருந்தால், அதற்கு நடுவர் ஒருவர் வேண்டுமல்லவா?'' என்றார்.

''நான் இப்போது நடுவராக இருக்கிறேன். நீங்கள் மீண்டும் ஒரு முறை உங்கள் போட்டியை நடத்துங்கள்'' என்றார். இப்போது அர்ச்சுனன் அம்புகளை விடுத்துப் பாலம் அமைத்தான். மீண்டும் அனுமன், அலட்சியமாகத் தன் கால் விரலை வைக்கப் பாலம் உடையவில்லை.

பாலத்தின் மீது அனுமன் ஏறி நின்றான். அப்போதும் பாலம் உடையவில்லை. தன் பலம் கொண்ட மட்டும் ஏறிக் குதித்தான் அனுமன். அப்போதும் பாலம் சிறிதளவும் அசையவில்லை.

அனுமனுக்குச் சந்தேகம் எழ, பாலத்தை உற்று நோக்கினான். பாலத்தை, அதனடியிலிருந்து சுதர்சனச் சக்கரம் தாங்கிக் கொண்டிருந்தது. அனுமன், பாலம் உடையாமல் இருந்ததற்கு காரணத்தை அறிந்து கொண்டான். அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்துக் கேட்டான் ''முதலில் பாலம் உடைந்ததற்கு காரணம் என்ன?'' என்று. கண்ணன் புன்னகையுடன் கூறினான்.

''அர்ச்சுனா! உனக்கு, நீ ஒரு சிறந்த வில்லாளி என்ற ஆணவம் இருந்தது. அந்த ஆணவத்தால் முதலில் என்னை நினையாது நீ பாலம் அமைத்தாய். ஆனால் அனுமனோ, இராம நாமத்தை ஜெபித்தபடியே கால் வைத்ததால் பாலம் உடைந்தது.

இரண்டாம் முறை நீ என்னை வணங்கிய பின் பாலம் அமைத்தாய். ஆனால், அனுமன் ஆணவத்துடன், அலட்சியமாக பாலம், நம் பலத்தால் உடைந்தது என்று நம்பி, பாலத்தை உடைக்கப் பார்த்தான். அதனால், என் சுதர்சனச் சக்கரம் பாலத்துக்குப் பலமாய் அமைந்து காப்பாற்றியது.

''எந்தவொரு செயலையும் என்னை நினைத்து ஆணவமின்றிச் செய்தால் வெற்றி நிச்சயம்'' என்றான் கண்ணன். அனுமன், அர்ச்சுனன் இருவருக்கும் ஆணவம் அகன்றது. அனுமனுக்கு இராமனாகவும், அர்ச்சுனனுக்கு கிருஷ்ணனாகவும் காட்சி தந்தான் பகவான். தன் அடியார்களின் ஆணவத்தை அழிக்க இறைவன் அருள் நோக்கோடு வருவான் என்பது நிச்சயம்.

''எதற்கும் நீ காரணமல்ல; ஏதோ ஒரு சக்தி தான் காரணம் என்று எண்ணினால், நீ ஆணவத்திற்கு அடிமையாவதில்லை. எந்தச் சூழ்நிலையிலும் நீ ஆணவம் கொள்ளாதே! 'அடக்கம் அமரருள் உய்க்கும்.' 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்பது வள்ளுவனின் வான் மறை.

சிறியவர்கள் ஆணவத்தால் உன்னைச் சிறுமைப் படுத்தலாம்.

அதைக் கண்டு, நீ கோபம் கொள்ளாமல், விலகி விடுவதே நன்று.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# 56 வருடங்கள் சேவையாற்றும் நீர்வேலி பாலர் பகல் விடுதி



**ஞானி**

நீர்வேலி கந்தசாமி கோயில் தெற்கு வீதியில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் கட்டடத்தொகுதி வரிசையில் மிகப்பெரியதும், வசதியானதுமான கட்டடத்தில் 56 வருடங்களாக ''நீர்வேலி பாலர் பகல் விடுதி'' செயற்பட்டு வருகின்றது. 2 வயதிலிருந்து 5 வயதுக்கு உட்பட்ட மழலைகள் அங்கு அனுமதிக்கப்பட்டு காலை 7.30 மணியில் இருந்து பிற்பகல் 4.30 மணி வரை தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

பாலர் பகல் விடுதியின் தோற்றம் தொடர்பாக விடுதியின் மூத்த நிர்வாகி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்; யாழ் .மாவட்டத்தின் புகழ்பூத்த கல்வியாளர்களில் ஒருவரும் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும் கல்விப்பணிப் பாளராகக் கடமையாற்றியவருமான நீர்வேலியைச் சேர்ந்த அமரர் இ. கே. சண்முகநாதனின் மனதில் ஏற்பட்ட மனிதாபிமான சிந்தனையின் வெளிப்பாடே பாலர் பகல் விடுதியின் தோற்றம்.

''கணவன்- மனைவி உட்பட வயது வந்தவர்கள் எல்லோரும் அரச உத்தியோகத்துக்கு செல்லும் நண்பர் ஒருவரின் இல்லத்துக்கு இ. கே. சண்முகநாதன் சென்றிருந்தார். அந்த வேளையில் குறித்த குடும்பத்தினர் ''தமது பிள்ளைகளைத் தாங்கள் அலுவலகக்கடமைக்குச் செல்லும் வேலை நாள்களில் ஓர் அறையில் தங்க வைத்து தண்ணீர் மற்றும் உணவு வகையை வைத்து கதவை பூட்டிவிட்டுச் செல்கின்றனர். அந்த வேளை விருப்பத்துக்கு ஏற்ப உணவுகளைச் சாப்பிடுவதோடு மலசலம் எல்லாவற்றையும் அறையிலேயே கழித்துவிட்டு கழிவுகளின் மத்தியில் உறங்கிக் கிடப்பவர்களைத் தாங்கள் கடமை முடித்து திரும்பி வந்து தட்டி எழுப்பி கழுவிச் சுத்தம் செய்து இயல்பு நிலைக்குக் கொண்டு வருகின்றனர். இந்த வகையில் தொழிலை கைவிடுவதா? பிள்ளையைப் பராமரிப்பதா? என மனப்போராட்டத்துக்கு உள்ளாவதாகக் கூறி கவலைப்பட்டனர்'' அந்த வேளையில் சிந்தனையில் தோற்றியதே பாலர் பகல் விடுதி.

> **2006, 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 110-120 பிள்ளைகள் வரையில் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். இந்த வருடம் 30 பிள்ளைகள் வரையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான பிள்ளைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.**

பாலர் பகல் விடுதிக்கான அடிக்கல்லை ஐம்பது காலப் பகுதியில் கைத்தொழில் சமூக சேவைகள் வீடமைப்பு அமைச்சராக இருந்த சேர் .கந்தையா வைத்தியநாதன் நட்டு வைத்தார். 1956 ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் ம. ஸ்ரீ.கந்தா பாலர் பகல் விடுதி யைத் திறந்து வைத்தார். அன்று தொடக்கம் இன்று வரையும் அது தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

ஏறத்தாழ ஐந்துபரப்புக் காணியில் மூன்று பக்கங்களும் கட்டடங்கள் கொண்டதாகவும்; நடுவில் பூந்தோட்டம் மற்றும் சிறுவர் பூங்கா உள்ளிட்ட அமைப்புக்களைக் கொண்டதாகவும் மிக விசாலமான வசதியான. சொந்தக்கட்டடத்தில் பாலர்பகல் விடுதி செயற்படுகின்றது. பாலர்கள் தங்குவதற்கான வசதியான அறைகள் விருப்பம் போல குறித்த நேரத்தில் சயனிப்பதற்கான கூடம், சமையல் கூடம், மேடையுடன் கூடிய உள் அரங்கு, அலுவலகம், வகுப்பறைகள் என பத்து அறைகள் மற்றும் விசாலமான விறாந்தைகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்ட பாலர் பகல் விடுதிகளில் முதன்மையானது. அமைப்பு முறையில் சிறுவர்களுக்கு ஏற்றமுறையில் மிக வசதியான நிலையில் திட்டமிட்ட வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாலர்பகல் விடுதியின் பொறுப்பாளராக செல்வி தியாகேஸ்வரி வல்லிபுரம் கடமையாற்றுகின்றார். உதவியாளர்களாக செல்வி வெற்றிவேலு கவிதா, செல்வி கோவிந்தராஜன் விஜயகுமாரி, செல்வி மனோரஞ்சினி மனோகரன், செல்வி சசிகலா கந்தசாமி ஆகியோர் கடமையாற்றுகின்றனர்.

2006, 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 110-120 பிள்ளைகள் வரையில் அனுமதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். இந்த வருடம் 30 பிள்ளைகள் வரையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான பிள்ளைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கான போதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. 2-3 வயதுப் பிரிவினர், 4 வயதுப் பிரிவினர், 5 வயதுப்பிரியினர் என வகுக்கப்பட்டுள்ளது. கடும் நீல நிறம் கொண்ட சீருடை விடுதிக்கென பயன்படுத்தப்படுகின்றது.

பாலர் பகல் விடுதியின் நாளாந்த தொழிற்பாடு தொடர்பாக மேற்பார்வையாளர் செல்வி தி. வல்லிபுரம் தகவல் தெரிவிக்கையில், காலை- மாலையில் பசுப்பால் தேநீர், நண்பகல் சோறு, கறி உட்பட போஷாக்கு உணவு; பிற்பகல் தேநீர் வழங்கப்படும் போது திரிபோஷா போன்ற சிற்றுண்டியும் வழங்கப்படும்.

மதிய வேளையில் உணவுக்கு பின்னர் 12 மணியில் இருந்து 2 மணிவரை நித்திரை கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. காலை மாலை வேளையில் சிறுவர்களுக்கான வழிப்படுத்தல் மற்றும் தமிழ் ஆங்கில பாடல்கள் மற்றும் வயது நிலைப் பிரிவுகளுக்கு ஏற்ற வகையில் கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதோடு, ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் மற்றும் பழக்க வழக்கங்கள் நல்வழிப்படுத்தல்கள் மேற்கொள்ளப் படுகின்றன. சிறுவர்கள் நித்திரைகொள்ளும் போது கூட போன்று இருப்பவர்கள் இடையில் எழுந்து மற்றச் சிறுவர்களுக்கு அடிப்பது, துன்புறுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

காலையில் பெற்றோர் சிறுவர்களைக் கொண்டு வந்து கையளிப்பார்கள். மாலையில் அவர்கள் வந்து பொறுப்பேற்று வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வரை காத்திருந்து கையளிப்போம். சிறுவர்களை மகிழ்ச்சியான சூழலில் முழுநாளும் பராமரிப்பதே எமது கடமை எனத்தெரிவித்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சல் மூலமாக காசுக் கட்டளை சேவை

## கிழக்கு தபால் நிலையங்களிலும் ஆரம்பம்

திருகோணமலை,நவ.30

கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பொது மக்களின் நன்மை கருதித் தபால் நிலையங்களில் மின்னஞ்சல் (ஈ-மெயில்) மூலமான காசுக் கட்டளை சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் காசுக் கட்டளை சேவை மூலமாக விரைவாக உள்ளூர் பணப் பரிமாற்றல் சேவையை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**இதற்கு மேலதிகக் கட்டணம் எதுவும் அறவிடாமல் சாதாரண காசுக் கட்டளையின் கட்டணமே அறவிடப்படுகின்றது.**

மின்னஞ்சல் மூலமாக பணப்பரிமாற்றம் செய்வதற்கு பொது மக்களிடமிருந்து மேலதிகக் கட்டணம் எதுவும் அறவிடாமல் சாதாரண காசுக் கட்டளையின் கட்டணமே அறவிடப்படுகின்றது.

மிகவிரைவாக அந்த நிமிடத்திலேயே பணப் பரிமாற்றம் செய்யப்படும். தந்திக் காசுக்கட்டளை மற்றும் தொலைநகல் காசுக்கட்டளைகளைப் பணப்பரிமாற்றம் செய்வதாயின் தரகுப் பணம் அதிகமானதாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் உறவினர்களுக்குப் பணம் அனுப்புவதற்கான வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவையும் ஏற்கனவே தபால் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் பல்வேறு இடங்களிலும் மின்னஞ்சல் மூலமான காசுக் கட்டளைச் சேவை இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## சிறிய வடிகால்களால் நீரில் மூழ்கும் வீதிகள்



கட்டுகஸ்தோட்டை,நவ.30

கட்டுகஸ்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால்களினூடாக நீர் பெருக்கெடுப்பதால், வீதிகள் நீரில் மூழ்கு வதாக அந்தப் பிரதேச மக் கள் தெரிவித்தனர்.

இந்த வடிகால்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

எனவே இந்த வடிகால்களைப் பெரிதாக அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## மட்டு. வாவிகளின் நீர் மட்டம் உயர்வு

மட்டக்களப்பு,நவ.30

நாட்டின் பல பகுதிகளில் தற்போது பெய்து வருகின்ற மழையால் பெரும்பாலான குளங்களின் நீர் மட்டங்கள் உயர்வடைந்துள்ளன. இதனால் குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடிப் பிரதேசங்களிலுள்ள வாவிகளின் நீர் மட்டம் கடந்த இரண்டு நாள்களாக உயர்வடைந்துள்ளன என்று பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழையால் படுவான்கரை வயல் பிரதேசங்களில் இருந்துவரும் நீரினாலேயே வாவிகளின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர். வாவிகளின் நீர் மட்டம் சுமார் இரண்டரை அடிவரை உயர்ந்துள்ளது. இதனால் காத்தான்குடி வாவியில் சிறிய மீன்பிடிப் படகுகளை கரையில் நிறுத்த முடியாமல் அவை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, முகத்துவாரம் வெட்டப்பட்டு நீர் பாயுமாயின் இந்த வாவிகளின் நீர் மட்டம் குறைவடையும் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ச)

## உடவளவை பெருக்கெடுப்பு; 350 பேர் பாதிப்பு

நுவரெலியா,நவ.30

உடவளவை கங்கை பெருக்கெடுத்துள்ளதால் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

உடவளவை நீர்த் தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக உடவளவை கங்கை பெருக்கெடுத்துள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சரத்லால் குமார தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கால் சுமார் 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு வீடுகள் முற்றாகவும் 50 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. (ச)



வெருகல்நீலாப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

## சர்வதேச ஆயுள்வேத மாநாடு; கிழக்கிலிருந்து மருத்துவர் நக்பர்

மட்டக்களப்பு,நவ.30

ஆயுள்வேதம் சம்பந்தமாக இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வரும் சர்வதேச ஆயுள்வேத மாநாடு இந்தமுறை இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள போபால் நகரில் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கிழக்கு மகாணத்திலிருந்து நிந்தவூர் அரச ஆயுள்வேத வைத்தியசாலை யின் வைத்திய அதிகாரி கே.எல்.எம். நக்பர் கலந்துகொண்டு மூட்டுவலி, பக்கவாதம் சம்பந்தமான இரண்டு கட்டுரைகளைச் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளார்.

சர்வதேச் ரீதியில் ஆயுள்வேத வைத்தியமுறையை பரவலாக்கி அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை பெறக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ளும் நடைமுறையை உலகம் முழுவதும் பரவச் செய்வதை நோக்காகக் கொண்டு நடைபெற்றுவரும் ஐந்தாவது சர்வதேச மாநாடு இதுவாகும். (ச)

## சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு,நவ.30

கல்குடாப் பிரதேசத்தில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் காணிப் பதிவுகள், பிரதேசத்தில் அதிகரித்து வரும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் வெலிகந்தையிலுள்ள கிழக்கு கட்டளை தலைமையகத்தில் இடம்பெற்றது.

போதைப்பொருள் விற்பனை மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொலிஸ் தரப்புடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கிழக்கு மாகாண கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா தெரிவித்தார்.

சட்டவிரோத அரச காணி அபகரிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)

## கிழக்கு மாகாண திணைக்களங்களை கண்காணிக்க 15 உறுப்பினர்கள்

திருகோணமலை,நவ.30

கிழக்கு மாகாணசபை அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய 15 உறுப்பினர்களை நியமிப்பதற்கு கிழக்கு மாகாண சபை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று வீதி அபிவிருத்தி அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான எம்.எஸ்.உதுமாலெவ்வை தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார்.

மாகாணசபையின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு 15 பேரை நியமிப்பது தொடர்பாக கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தினால் சமர்ப்பிக்கப் பட்ட தீர்மானத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு அங்கீகாரம் வழங்கி உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

**போக்குவரத்துக் கொடுப்பனவாக 4ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

மேலும், இந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் விசேட போக்குவரத்துக் கொடுப்பனவாக 4ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திணைக்களங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் வேலைகள் குறைவடைவதோடு, நீண்ட காலத் தேவையாக இருந்துவந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ச)

## பெருந்தோட்டப் பகுதி குடிதண்ணீர் மனிதப் பாவனைக்கு ஏற்றதல்ல

### ஆய்வில் தகவல்

நுவரெலியா,நவ.30

பெருந்தோட்டப் பகுதிகள் சிலவற்றில் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் மனிதப் பயன்பாட்டுக்கு உகந்ததாக இல்லை என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

பொகவந்தலாவை நகரை அண்மித்த பகுதிகளில் உள்ள பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்து பெறப்பட்ட 16 குடிதண்ணீர் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அனைத்து நீர் மாதிரிகளிலும் போலிபோம் எனும் பக்டீரியா உள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நீர் மூலம் பரவக்கூடிய நோய்களின் தாக்கம் ஏற்படும் பட்சத்தில் குறித்த குடிதண்ணீரைப் பருகும் மக்கள் மத்தியில் அது வேகமாகப் பரவலாம் என்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளில் உரிய முறையில் குளோரின் சேர்க்கப்பட்டு நீர் சுத்திகரிக்கப்படாமையே இந்த நிலைமைக்கான காரணம் என்று ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொகவந்தலாவை பொது சுகாதாரப் பரிசோதகர் பி.கே.எல்.வசந்த விடம் கேட்டபோது, உரிய முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை மக்களுக்கு விநியோகிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை எழுத்து மூலம் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

கழிவறையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நீர் நிலைகளுடன் சேர்வதைத் தடுப்பதற்கு தோட்ட நிர்வாகங்களும் பொதுமக்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வரும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

**கடகம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** பளிச்சென்றுபேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**கன்னி:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**நாளை**

கார்த்திகை -16 சனிக்கிழமை 01.12.2012
திதி: திருதியை பி.இ 02.18 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ. 10.46 வரை
சுபநேரம்: 03.15- 04.45 வரை
ராகுகாலம்: 09.15- 10.45 வரை

**துலாம்:** அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் கூட்டிக் காட்டினால் அமைதியாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

**தனுசு:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

**மகரம்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக இருக்கும்.

**கும்பம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும்.

**மீனம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்ட நாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | | | 8 | | 2 | 1 | |
| | | 6 | | | 9 | | | 4 |
| 1 | | | | | | 9 | | 3 |
| 2 | 6 | | 3 | | 7 | | 4 | 5 |
| | | | 1 | | 8 | | | |
| 9 | 8 | | 5 | | 4 | | 2 | 1 |
| 3 | | 7 | | | | | | |
| 6 | | | 7 | | | 3 | | |
| | 9 | 2 | | 3 | | | 5 | 7 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 7 | 1 | 6 | 8 | 5 | 9 | 4 |
| 8 | 9 | 4 | 3 | 7 | 5 | 2 | 6 | 1 |
| 1 | 5 | 6 | 2 | 9 | 7 | 3 | 7 | 8 |
| 4 | 7 | 3 | 8 | 2 | 9 | 6 | 1 | 5 |
| 9 | 1 | 8 | 5 | 3 | 6 | 4 | 2 | 7 |
| 5 | 6 | 2 | 4 | 1 | 7 | 8 | 3 | 9 |
| 2 | 4 | 9 | 6 | 8 | 1 | 7 | 5 | 3 |
| 7 | 3 | 5 | 9 | 4 | 2 | 1 | 8 | 6 |
| 6 | 8 | 1 | 7 | 5 | 3 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் சுங்கிலியன் இராமன்





தோற்றம்
06.12.1931

மறைவு
31.10.2012

கடந்த 31.10.2010 புதன்கிழமை அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியை அறிந்து எம்முடன் துயர்பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, பத்திரிகை மூலமும் ஆறுதல் தெரிவித்த நண்பர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். 28.11.2012 புதன்கிழமை கீரிமலையில் புண்ணியஸ்தானம் நடைபெற்றது.

இன்று (30.11.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் நேரில் வந்து அழைக்க முடியவில்லை. தயவு செய்து இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு அனைவரையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.



கைதடி தெற்கு

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு, கொம்பனித்தெரு வீடமைப்புத் திட்ட வேலைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி நேற்றுமுன்தினம் மலே வீதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அனைத்து வெற்றிகளின் பெருமையும் படையினருக்கே

## பெருமிதப்படுகிறார் விமல்



கொழும்பு,நவ.30

நாட்டின் சகல வெற்றிகளினதும் பெருமை படையினரையே சாரும் என்று வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்திடிய பிரதேசத்தில் ஊனமுற்ற படையினருக்காக நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரமாக சுவாசிக்கக் கூடிய பின்னணியைப் படையினரே ஏற்படுத்திக் கொடுத்தனர்.

போரின்போது ஊனமுற்ற படையினரைப் பாதுகாக்க வேறுநாடுகளில் திட்டங்கள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

உலகின் ஏனைய நாடுகளைப் போன்று அல்லாது போரின் போது ஊனமுற்ற படையினரின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.- என்றார். (ச)

# ஐ.தே.க. தலைவருக்கு எதிராக பராக் ஒபாமாவிடம் முறைப்பாடு

## மைத்திரி குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு,நவ.30

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் முறைப்பாடு செய்யப்படும் என்று கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரட்ண தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்கின்றார். எதிர் வரும் காலங்களில் எதிர்க்கட்சித் தலைவருடனான தொடர்புகளின் போது இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளுமாறு ஒபாமாவிடம் கோரத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் கூறினார்.

இதுதொடர்பில் 25000 கையொப்பங்கள் அடங்கிய விசேட மனு ஒன்றை ஒபாமாவுக்கு இணையத்தின் ஊடாக அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

**25000 கையொப்பங்கள் அடங்கிய விசேட மனு ஒன்றை ஒபாமாவுக்கு இணையத்தின் ஊடாக அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளோம்**

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் பதவியை உரிய முறையில் வகிக்கவில்லை. மாறாக ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றார். இதன் காரணமாகவே எதிர்க்கட்சி பலவீனமடைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே ரணில் விக்கிரமசிங்கவுடனான உறவுகள் குறித்த மீள் பரிசீலனை செய்யுமாறு பராக் ஒபாமாவிடம் கோர உள்ளோம் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# தீர்வு கிடைக்கும் வரை ‘13’ஐ அகற்ற முடியாது

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சொல்கிறார்

கொழும்பு,நவ.30

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை.

ஆகையால், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வை வழங்காமல் 13ஆவது திருத்தத்தை அகற்ற முடியாது என்று பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.



அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாத்து, அன்றாட தேவையை நிறைவேற்றி அடுத்த கட்டத்தை நகர்த்தவேண்டும் . என்று அவர் கூறினார்.

எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு சகலருக்கும் உரிமை இருக்கின்றது. எனினும் அது தொடர்பில் கூட்டுப்பொறுப்புடன் தீர்மானம் எதுவும் அரசால் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ஹெரோயின் விற்ற பெண்ணுக்கு தூக்குத் தண்டனை

கொழும்பு,நவ.30

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டதாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்ட பெண் ஒருவருக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி விமல் இந்தத் தீர்ப்பை வழங் கியுள்ளார்.

385 கிராம் ஹெரோயினுடன் குறித்த பெண் 6 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டன. இதனையடுத்து குறித்த பெண்ணுக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (ச)

# 13 ஐ ரத்துச் செய்வதா? அப்படி ஒன்றுமே இல்லை

## அடித்துக் கூறுகிறார் வாசுதேவ



கொழும்பு,நவ.30

13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய அரசோ, அமைச்சரவையோ தீர்மானிக்கவில்லை என்று சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ராஜகிரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆம் திருத்தச் சட்டம் அரசமைப்பின் ஓர் அங்கமாகும். எனவே அந்தச் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது.

இந்தச் சட்டத்துக்கு எதிராக ஒன்றிரண்டு அமைச்சர்கள் கருத்து வெளியிடுவதைப் பெரிதாகக் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை. ஒரு சிலர் 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று கருதிய போதிலும், பெரும்பான்மையான அமைச்சரவை அமைச்சர்கள் 13 ஆம் திருத்தச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றே கருதுகின்றனர்.

அமைச்சரவையில் பெரும்பான்மையானவர்கள் 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்று கருதவில்லை.- என்றார்.(ச)

# மரத்தளபாட தொழில்துறையை வருமானமிக்கதாக்க வேண்டும்

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு தகவல்

கொழும்பு,நவ.30

இலங்கையின் பொருளாதாரத்துக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மர தளபாடங்கள் உற்பத்தித் தொழிலை மாற்ற வேண்டும் என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள உள்ளதுடன், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தளபாட உற்பத்திகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறையில் எதிர்காலத்தில் அதிகளவான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

# ஐ.தே.க.மாநாட்டுக்கான இடைக்கால தடையை கோரிய மனு நிராகரிப்பு

கொழும்பு,நவ.30

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நுகேகொட மாவட்ட நீதிமன்றம் மனுவை நிராகரித்துள்ளது.

இதற்கமைய மாநாட்டை நடத்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்க குறிப்பிட்ட சிலருக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை 6 வருடங்களுக்கு நீடித்துக் கொள்ளும் முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தீர்ப்புகளை அரசால் சகிக்க முடியாதநிலை

## அதனாலேயே நீதித்துறைக்கு அழுத்தம் என்கிறார் சந்திரிகா

கொழும்பு,நவ.30

நடைமுறையிலுள்ள சகிப்புத்தன்மையற்ற அரசியல் சூழலில் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை அரசால் சகித்துக் கொள்ள முடியாதநிலை தோன்றியுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஜனநாயகம்-அரச-நீதிமன்றம் என்ற தலைப்பில் [illegible] மனு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விருப்பு வெறுப்புகளின் பிரகாரம் நீதிமன்றம் செயற்பட வேண்டும் என அரசு எண்ணுவது ஜனநாயகத்துக்கும் மக்கள் இறைமைக்கும் விடுக்கப்படவுள்ள அச்சுறுத்தலுக்கான அறிகுறியாகும்.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை உள்ளிட்ட, கடந்த காலத்தில் இடம் பெற்ற தொடர் சம்பவங்களினால் நீதித்துறைக்கு அழுத்தம் விடுக்கப்பட்டுள்ளது.

தொழிலில் இருந்து நீக்கப்படுகின்ற ஊழியர் ஒருவர் தனக்கு நியாயம் பெற்றுக் கொள்வதற்காக நாடக்கூடிய பல்வேறு இடங்கள் காணப்படுகின்றபோதிலும் ஜே.ஆர்.ஜயவர்த்தனா அரசமைப்பின் பிரகாரம் உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் நியாயம் கோரி செல்லக்கூடிய இடமொன்று காணப்படவில்லை.

எவரேனும் நீதியரசர் ஒருவருக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதனை நாடாளுமன்றத்துக்கு வெளியில் நீதிமன்றக் கட்டமைப்பின் கீழ் விசாரணைக்கு உட்படுத்துவது உகந்தது என்ற யோசனையை நாம் திருத்தமாக முன்வைததுள்ளோம்.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணையை விசாரிப்பதற்கு மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்படுவதே சிறந்தது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளில் இரு முகம் காண்போம்

## பறந்தோடிய பன்னிரண்டில்



அமரர்

## இராசு செல்வரட்ணம் (சித்தப்பா)

(உரிமையாளர் அம்பாள் மரக்காலை
வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர்)

மண்ணுலகுக்கு மனம்
மகிழ வந்தாய்
03.08.1942

விண்ணுலகுக்கு
விம்மியழச் சென்றாய்
30.11.2000

செந்நாவின் சொல்வாக்கால் செல்வாக்கைப் பெற்றீர்களே
உம் புன்முறுவல் தழுவும் முகத்தில் இன்முகம் கண்டோமே
காலத்தால் அழியாத காவிய நாயகராய்
எம் எல்லோர் சிந்தையிலும் வாழ்கின்றீர்களே
பண்பினால் பார் போற்ற வாழ்ந்தீர்களே
எமையெல்லாம் ஊர் போற்ற உருவாக்கினீர்களே
குடும்பத்தின் குலவிளக்காய் தலைமைத்துவத்தின் தலைவராய்
பாசத்தின் இருப்பிடமாய் கருணைக் கடலாய் வாழ்ந்தீரே
அன்னை வீரமாகாளியின் பாதம் பணிந்து
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மீளமுடியாத பதினாறில்



செல்வி

## செல்வரட்ணம் றஜனி

(வர்த்தகப் பிரிவு A/L 1995, மாணவி,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

மலராய் மலர்ந்தாய்
19.10.1976

காற்றாய் மறைந்தாய்
21.08.1996

ஆறாத்துயரில் **குடும்பத்தினர்.**

"செல்வபதி",
256,நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/3114)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளாக வாழும் உலகம் அழிய வேண்டும்

எங்க போர் முடிஞ்சுதோ அங்க மாவீரர் இறுதி நாளில் புலிக் கொடி ஏற்றப்பட்டது. எல்லாம் முடிஞ்ச மாதிரித்தான் இருக்கும். ஆனால் ஆரம்பிக்கும். இதுவே வரலாறு தந்த பாடம். முடிஞ்சதை ஆரம்பிக்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான தீர்வினை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். போயிற்றது என்று கண்மூடியிருந்தால் அதன் விளைவு பெரிதாக இருக்கும். இதனை அரசு உணர வேண்டும். இல்லாது போயின் மீண்டும் ஓர் அழிவினை எதிர்கொள்ள நேரிடும்.

நேற்று வியாழக்கிழமை இரவு ஏழு மணியிருக்கும் எனது கைபேசியில் என்னை ஒருவர் தொடர்பு கொள்ளுமாறு அழைக்கிறார். யார் என்று கைபேசியை அழுத்திப் பார்க்கிறேன். எனது நண்பன் சுகந்தன். என்ன என்று கேட்க முதலே "என்னடா உலகம் அழியப் போகுதாம்" என்று என்னைக் கேட்டான். நானோ "யார் சொன்னது" என்று கேட்டேன். "சனம் கதைக்குது" என்றான்.

"எங்கட சனம் கதைக்க நியாயம் இருக்கிறது. மூன்று தசாப்த விடுதலைப் போரில் ஈடுபட்டு நொந்துபோய் மீள முடியாமல் தவிக்குதுகள். அந்த மக்கள் வாழ்வாதாரத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உதவுவதற்கு எவரும் இல்லை. அரச படைகள் தமிழர் பகுதிகளில் குவிக்கப்பட்ட நிலையில் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. இதனைத் தட்டிக் கேட்க நாதியற்ற சனமாக தமிழ்ச் சனம் அடிமைகளாக வாழுது. இப்படி இருக்கேக்க உலகம் அழியத்தான் வேண்டும்.

இறந்தவர்களுக்காக நினைவு தீபச் சுடரினை ஏற்றுவதற்குக் கூடத் தடை விதித்த இந்த நாட்டில் எப்படி தமிழ்ச் சனம் வாழ முடியும். யாழ்.பல்கலைக்கழக பெண்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்த அரச படையினர் விடுதி அறைகளின் கதவுகளை உடைத்து உட்சென்று அறையினுள் ஏற்றப்பட்டிருந்த தீபங்களை அணைத்துள்ளனர். வீட்டுக்குள்ளேயும் ஒன்றுமே செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வீட்டுக்குள்ளேயே தீபம் ஏற்ற விடாமல் தடுத்த அரச படைகளால் எப்படித் தமிழ் மக்களின் வாழ்வில் அக்கறை கொள்ளப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இப்படியாக அரச படைகளின் அத்துமீறல் எமது பகுதிகளில் மீறியிருக்கும் போது உலகம் அழிய வேண்டும் என்றேன். அவனோ "நான் என்னடா கேட்கிறேன். நீ என்னடா சொல்கிறாய்?" என்றான். நானோ பிறகு என்னத்தையடா சொல்ல முடியும். வலிகளோடும் வேதனைகளோடும் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். உலக நாடுகளும் கைவிட்டுள்ளன. அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரின் பாரம்பரிய அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன.

ஊனமாக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களில் மௌனிக்கப்பட்ட வார்த்தைகள் ஆழமாக இதயத்தில் நெருப்பாய் எரிகிறது. சாம்பல் மேட்டில் மெழுகப்பட்டு அடையாளங்கள் மறைக்கப்படுகின்றன. கேட்க நாதியற்ற இனமாக தமிழர்களை ஆக்கிவிட்டு கேட்பதுபோல பேசிக் கொள்ளும் நடைமுறையில் எத்தனை அழிவுகளைத் தமிழர் பிரதேசங்களில் இன்னும் பார்க்கவுள்ளோம். அடையாளப் படுத்தப்பட்டவர்கள் அடையாளம் தெரியாமல் இருக்கிறார்கள். அடையாளமே இல்லாதவர்களை அடையாளப்படுத்திப் பார்க்கிறார்கள். அடாவடியில் அரச அதிகாரிகள் கட்டுண்டுபோய் இயங்க முடியாமல் நடைப்பிணமாக இருக்கிறார்கள். சில புத்திஜீவிகள் சுயநினைவில்லாமல் முட்டாள்களாகக் காணப்படுகிறார்கள். ஏதாவது கேள்வி கேட்டால் இடமாற்றம், பதவி நீக்கம் என்று அலுவலர்களைக் கட்டுப்படுத்தி விடுகிறார்கள். எல்லைமீறி கடும்போக்கு தீவிரமடைகிறது. அரச அதிகாரிகள் மக்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் காணப்படுகின்றனர். பிரதேச பாதிப்புக்கு தாமும் உடந்தையாக இருந்து வருகின்றனர். இந்தப் பிழைப்பு வேணுமா? உலகம் அழியத்தான் வேண்டும்" என்றதும் குறுக்கிட்டவன் "நான் என்னத்தைப் பற்றிக் கேட்டேன். நீ என்னத்தைப் பற்றிச் சொல்கிறாய்?, இது எல்லாவற்றையும் விட்டுவிட்டு முதலில் உலகம் அழியப் போகிறதா? இல்லையா? அதைப் பற்றிச் சொல்லு" என்றான்.

"என்னத்தை விடச் சொல்லுகிறாய். நாம் பிறந்து அரைவாசி வாழ்நாள் போர் மேகம் சூழ்ந்து விடுதலை வேண்டி இருண்ட யுகத்திலே வாழ்ந்தோம். அது பரவாயில்லை. ஆனால் இப்பொழுது போர் மேகம் விலகியும் விடுதலையின்றி இருண்ட சூழலிலே வாழ்கிறோம். போரினால் பாதிக்கப்பட்டவனுக்கு இந்த மண்ணில் இடமில்லை. பணத்துக்காக விலைபோகிற கூட்டம் எமது மண்ணிலே இப்பொழுது உருவாகிறது. ஓர் உயிரைக் காப்பாற்றும் பெருமைக்குரிய மருத்துவத் தொழில் கூட பணத்துக்கு அடிமையாகிவிட்டது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது என்று சொல்வார்கள். ஆனால் இப்பொழுது குடியில்லா ஊரிலும் கோயில்கள் முளைக்கத் தொடங்கிவிட்டன. மனித நேயம் இன்றி கணக்கிட முடியாத செயற்பாடுகள் எமது மண்ணில் நாளாந்தம் இடம்பெறுகின்றன. இதனால் எவர் பாதிக்கப்படுகின்றனர் என்று கூட பார்க்காமல் தங்கள் தங்கள் பாட்டில் முன்னேறிச் செல்கிறார்கள். படிக்காதவனை விட படித்தவனால் பல விளைவுகள். சமூகம் பாழடைகிறது. கிராம சேவகர் தொடக்கம், பிரதேச செயலர், அரச அதிபர், வடமாகாண அதிகாரிகள் வரை தாம் என்ன செய்கிறோம் என்று தமக்கே தெரியாமல் உள்ளனர். பிழையான காரியங்களுக்குச் சரி என்று சொல்லவும் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லவும் பழகிக் கொள்கிறார்கள். உலகம் அழியத்தான் வேண்டும். எவரைப் பார்த்தாலும் உலகம் அழியப் போகுதாம் என்றுதான் கதை அடிபடுகிறது. உலகம் பகுதிபகுதியாக அழிவடைந்து வருவதும் எவருக்கும் தெரியவில்லை. நிலநடுக்கம், நிலச்சரிவு, பூகம்பம், புயல், பேரலை இவை அனைத்தும் உலகம் முழுவதுமாக அழிவதற்கான ஆரம்பக் கட்ட அழிவுகள். இன்று உலகம் அழியாவிட்டாலும் என்றோ ஒருநாள் முழுவதுமாக அழியத்தான் போகிறது. ஒரே நேரத்தில் உலகம் அழியப் போகிறது என்பதை கற்பனையில் கூடப் பார்த்திருக்க முடியாது. மாயன் கலண்டர் இந்த ஆண்டுடன் முடிவடைவதால் உலகம் அழியப் போகுதாம். பூமியை நோக்கி பூமியை விட பல மடங்கு பெரிதான கல்லொன்று விழப் போகுதாம் எதிர்வரும் 21,22,23 ஆம் திகதி இருளில் இருக்கும் என்றெல்லாம் கதைவிடுகினம்.

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

இந்தக் கதைகளை விடுகின்றவர்களிடம் ஏதோ ஓர் உள்நோக்கம் இல்லாமல் இல்லை. அது இந்த வருடம் முடியத்தான் தெரியவரும். சுனாமி வந்தது. பல ஆயிரக் கணக்கில் உயிர் காவு கொள்ளப்பட்டது. சுனாமி வரும் என்று முதலில் தெரிந்திருந்தால் உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம். சுனாமி வருவதை முன்னரே தெரிந்துகொள்ள முடியாமல் இருப்பவர்கள் உலகம் அழியப் போவதை முன்னரே சொல்லுகினம். இயற்கையின் சீற்றத்தை எவராலும் கணிப்பிட முடியாது.

எப்ப, என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. அது நடக்கும்போதுதான் தெரியும். உலகம் எப்ப வேண்டுமானாலும் அழியட்டும். முதலில் மனிதர்களாக இருக்கப் பழகுவோம். ஒருவனுக்கு உணவு இல்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி சொன்னார். எமது பிரதேசத்தில் கஷ்டப்படும் மக்களுக்கு உதவுவோம். அப்பொழுதுதான் இயற்கையின் மீதும் நம்பிக்கை வரும்.

## பரிந்துரைகள் ஒரு பார்வை

"கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள்" ஒரு பார்வை என்பது தொடர்பில் யாழ். வட்டுக் கோட்டை ஸ்ரீகணேச வாசிகசாலை கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. (எ)

## மின் கம்பத்தில் மோதி இளைஞன் படுகாயம்

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்தவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு மண்டுவில் சோலைஅம்மன்கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றது.

விபத்து நடைபெற்ற இடத்தில் காயங்களுடன் காணப்பட்ட நபரை அந்த வழியே வந்த பொதுமக்கள் வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் காணப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த செல்லர் முகுந்தன் என்பவரே காயமடைந்த வராவார். (3-9)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
02.02.1938

உதிர்வு
31.10.2012

அமரர் சின்னத்தம்பி திரவியம்

ஆசையது தீருமட்டும் அணைத்துக் கொஞ்சி
வேண்டியதெல்லாம் தந்த அம்மம்மா நீங்கள்
பாசமிகு அம்மம்மா நீங்கள் எமைப் பேணி
நின்றவைகள் நினைக்க மனம் எரியுதையோ
தேசமெங்கும் தேடினாலும் உங்களைப் போல்
தவவடிவம் இன்னொருவர் கிடைப்பாரோ
ஈசனடி கண்டிடவே ஓடினீர்கள்
கதிகெட்டு நிற்கின்றோம் துயரம் தானே.

என்றும் உங்கள் நினைவுடன்
பேரப்பிள்ளைகள்:
மீரா (ஆசிரியர்)
மதுரா (ஆசிரியர்)
பிருந்தா (தாதி).

மாசேரி, வரணி.

மணிவிழாக்காணும் மணிகளை மனதார வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கடமை உணர்வுடன் மகத்தான சேவையாற்றி 29.11.2012 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்ற எமது பிரதி அதிபர் **கந்தசாமி உபேந்திரன்** அவர்களையும் 14.11.2012 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி **புஸ்பலீலா ஜீவராசா** (விஞ்ஞான ஆசிரியர்) அவர்களையும் ஓய்வுக் காலத்தில் சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.





க. உபேந்திரன்
பிரதி அதிபரின் சேவை விவரம்

| | |
|---|---|
| சிலா/ மாதம்பை முஸ்லிம் வித்தியாலயம் | - 03.02.1972 - 03.10.1972 |
| சிலா/ கருக்குப்பனை றோ.க.வித்தியாலயம் | - 04.10.1972 - 31.12.1974 |
| சிலா/ நாத்தாண்டியா முஸ்லிம் வித்தியாலயம் | - 01.01.1975 - 31.01.1975 |
| சிலா/ மாதம்பை முஸ்லிம் வித்தியாலயம் | - 01.02.1975 - 28.02.1977 |
| பலாலி ஆசிரியர் கலாசாலை | - 01.03.1977 - 31.12.1978 |
| [illegible] ம.வி. | - 01.01.1979 - 14.03.1985 |
| யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி. | - 15.03.1985 - 29.11.2012 வரை |

திருமதி புஸ்பலீலா ஜீவராசா
யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி.
14.01.1981 - 14.11.2012

வாழ்த்துவோர்:
ஆசிரியர், ஊழியர் நலன் புரிக் கழகம்,
பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம். [2/591][45.6.7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Samsung

## புதிய ஸ்மார்ட்போன் குறித்த தகவல்கள் வெளியாகின

Samsung Galaxy S4 ஸ்மார்ட்போன் வருகிற 2013 ஆம் ஆண்டில் அறிமுகமாகலாம் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த புதிய ஸ்மார்ட்போனில் Cortex A15 processor, 13MP rear camera மற்றும் Exynos S450 chipset வசதி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இது 4.99 inch 1080p Super AMOLED display வசதியை கொண்டதாக இருக்கும் என்றும், இதனால் 1920 X 1080 pixel திரை துல்லியமாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

மேலும் Galaxy கு-3யின் மேம்படுத்தப்பட்ட வசதியான Galaxy S&4 ஸ்மார்ட்போன் 16GB /32 GB/64 /128 GB Memory வசதியையும் கொண்டதாக இருக்கும் என்று தகவல்கள் கூறுகின்றன.

## ஜிமெயிலின் புதிய வசதியை Compose Reply செய்வதற்கு




மில்லியன் கணக்கான பயனர்களைக் கொண்டுள்ள ஜிமெயில், நாள்தோறும் புத்தம் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தி கொண்டே உள்ளது.

அந்த வகையில் அண்மையில் வெளியான வசதி Compose Reply. இந்த வசதி அனைவருக்கும் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. எனவே இதனை மீண்டும் பழைய ஸ்டைலுக்கு மாற்றி விடலாம். இதற்கு முதலில்,

*1.* உங்கள் ஜிமெயில் கணக்கில் உள்நுழைந்து கொள்ளுங்கள்.


*2.* பின் Compose என்பதை கிளிக் செய்யவும்.

*3.* விண்டோ ஓபன் ஆனதும், வலது கீழ் மூலையில் உள்ள More Menu Icon என்பதை கிளிக் செய்யவும்.

*4.* அதில் Switch Back to old Compose என்பதை தெரிவு செய்யவும். பழைய ஸ்டைலுக்கு மாற்றிவிடலாம்.

மீண்டும் புதிய ஸ்டைலுக்கு மாற வேண்டும் என்றால், New Compose Experience என்பதைத் தெரிவு செய்யவும்.

## ஆஷா குடும்பத்தில் மேலும் 2 புதிய மொபைல்களைக் களமிறக்கும் நோக்கியா



கடந்த செப்ரெம்பர் மாதம் ஆஷா 308 மற்றும் ஆஷா 309 ஆகிய கைபேசிகளை நோக்கியா களமிறக்கியது. தற்போது ஆஷா குடும்பத்தில் இரண்டு புதிய கைபேசிகளை நோக்கியா களமிறக்கி இருக்கிறது. இந்த கைபேசிகளுக்கு ஆஷா 205 மற்றும் ஆஷா 206 என்று பெயர் சூட்டப்பட்டுள்ளன.

இந்த இரண்டு போன்களுமே ரூ.3,500 அளவில் விற்கப்பட இருக்கின்றன. இதன் மூலம் நோக்கியா சாதாரண மக்களைக் குறி வைத்து இந்த கைபேசிகளைக் களமிறக்குகிறது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

ஆஷா 205 மற்றும் 206 ஆகிய இரண்டு கைபேசிகளும் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு விற்பனைக்கு வந்துவிடும் என்று தெரிகிறது. ஆனால் இதைப்பற்றிய அதிகார பூர்வமான தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

இந்த இரண்டு கைபேசிகளும் ஏறக்குறைய சம அளவிலான தொழில் நுட்ப வசதிகளுடன் வருகின்றன. இரண்டுக்கும் இடையே சிறிய அளவில் மட்டுமே வேறுபாடுகள் உள்ளன.

## விளம்பரங்களை விமர்சனம் செய்ய ஓர் இணையம்

விளம்பரங்களை விமர்சனம் செய்வதற்கென Adyapper என்று ஓர் இணையத்தளம் உள்ளது.

விளம்பரத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இந்தத் தளம் எந்த ஒரு விளம்பரத்தின் மீதும் உங்கள் பங்குக்கு கருத்தை சொல்லலாம் என அழைக்கிறது.

கருத்து என்பது விருப்பமாக இருக்கலாம்,வெறுப்பாக இருக்கலாம், காட்டமான விமர்சனமாகக் கூட இருக்கலாம்.

இதற்கு உதவும் வகையில் இந்தத் தளத்தில் பிரபலமான விளம்பர காணொலிகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

உங்களுக்குத் தேவையான விளம்பரத்தை கிளிக் செய்து அந்த விளம்பரம் தொடர்பான கருத்தைப் பதிவு செய்யலாம்.

விளம்பரம் பிடித்திருந்தால் முதலில் பேஸ்புக் பாணியில் லைக் செய்து விடலாம். இல்லை வெறுத்து விடலாம்.

அதன் பின்னர் விளம்பரத்தின் உள்ளடக்கம் அல்லது உருவாக்கத்தில் ஏதேனும் ஆட்சேபம் அல்லது எதிர் கருத்து இருந்தால் அதனையும் பதிவு செய்யலாம்.

நுகர்வோர் கருத்துக்கேற்ப அதிகம் விரும்பப்பட்ட, வெறுக்கப்பட்ட விளம்பரங்களையும் இங்கே பார்க்கலாம்.

இந்தத் தளம் விளம்பரங்கள் மீது கருத்து சொல்லும் அதிகாரத்தை நுகர்வோருக்கு வழங்குவதோடு, அதன் வாயிலாக தங்கள் விளம்பரங்கள் குறித்து பொதுமக்களின் கருத்துக்களை நிறுவனங்களும் அறிந்து கொள்ள வழி செய்கிறது. இணையத்தள முகவரி http://www.adyapper.com/

## அடுத்தாண்டில் Mac இயங்குதளத்தின் புதிய பதிப்பு வெளியீடு



அப்பிள் தனது Mac இயங்குதளத்தின் புதிய பதிப்பான X 10.9ஐ மிக விரைவில் களமிறக்க இருக்கிறது.

அத்துடன் இந்த புதிய இயங்குதளத்தில் Apple Maps மற்றும் பிரபலமான Siri போன்றவற்றையும் இணைத்துத் தரவிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் இந்த புதிய இயங்குதளத்தை உருவாக்கும் பணிகள் மிக துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Mountain Lion இயங்குதளத்தில் வரும் மேக்ஸ் சாதனங்கள் ஏற்கனவே Dictation and Text&to&Speech போன்ற Application-களைப் பயன்படுத்தி வருகின்றன,

இந்த நிலையில் இந்த புதிய இயங்குதளத்தில் Siri என்ற அப்ளிகேசன் வரும் போது மேக்ஸ் சாதனங்களைப் பயன்படுத்துபவர்கள் Voice Command மற்றும் தேடும் வசதி போன்ற சிறப்பு வசதிகளைப் பெறலாம்.

மேலும் இந்த புதிய இயங்குதளத்தில் Apple Maps மிகச் சிறப்பாக வர இருக்கிறது.

ஆனாலும் மேற்சொன்ன வதந்திகள் அனைத்தும் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் இந்தப் புதிய இயங்கு தளம் எப்போது வெளியாகும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் 2013 தொடக்கத்தில் இந்த புதிய இயங்கு தளம் வெளிவந்து விடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஐ நீக்கினால் மு.கா.எதிர்க்கும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவம் சொல்கிறார்

13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கோ, மாகாண சபை முறைமையை இல்லாது ஒழிக்கவோ எடுக்கப் படுகின்ற எத்தகைய முயற்சியையும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் முறியடிக்கும் என்று அந்தக் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் உறுதியாகத் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபை முறை மையை இல்லாது ஒழிக்கின்ற விடயத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த சவாலுக்கும் முகம் கொடுப் பதற்குத் தயாராக உள்ளது.

இந்த முறைமையை மேம் படுத்துவதற்கான விடயங் களிலேயே அதிகமான கவ னத்தை முஸ்லிம் காங்கிரஸ் செலுத்திவருகிறது. நீக்குவதற்கு முயற் சிக்கின்ற யாருக் கும் இந்த விடயத்தில் முஸ் லிம் காங்கிரஸ் ஆணித்தர மாகத் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸைப் பொறுத்தவரை அதிகாரப் பரவலாக்கல் விட யத்தில் மிகத் தெளிவான கொள்கையோடு இருக்கின்றது.

தமிழ் பேசும் சமூகம் என் பது அதிகாரப் பரவலாக்கத் தின் ஊடாக தாங்களே தங்க ளது விடயங்களைச் செய்து கொள்கின்ற ஒரு நிலைவரம் இருக்க வேண்டும்.

தமிழ் பேசும் சமூகத்தை இரண்டாம் தர பிரஜைகளாக வேறு கண்கொண்டு பார்த்து அவர்களுக்கு நியாயமாக வழங்கப் பட வேண்டிய அதிகாரத்தை வழங்க மறுத்ததனாலேயே ஒரு நீண்ட இரத்த வரலாறு இலங்கையில் உண்டானது.

இந்த இரத்த வரலாற்றை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற அடிப் படையிலேயே இந்தியாவினுடைய தலையீட் டின் பிரகாரம் 13ஆவது திருத்தம் உருவாக்கப் பட்டது. அதிலே மாகாணசபை முறைமையும் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மாகாணசபை முறைமை என் பது தமிழ், முஸ்லிம் மக்கள் சிந்திய இரத்தத்தின் விளை வாகப் பெறப்பட்ட ஒரு விட யமாகும். அவ்வாறு பெறப்பட்ட விடயத்தை ஒரு சில ருடைய நலன்களுக்காக நாம் விட்டுக் கொடுக்க முடியாது.

தமிழ் பேசுகின்ற சமூகம் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சூழ்நிலை இன்னும் உருவாகாத நிலையில், ஏற்கனவே அந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருக் கின்ற சொற்ப அதிகாரங் களையும், அதிகாரப் பரவ லாக்கத்தையும் பறித்தெடுப் பது இந்த நாட்டை மோசமான சூழ்நிலைக்குத் தள்ளுகின்ற ஒரு முயற்சி.

எனவே, மாகாணசபை முறை ஊடாக இந்த அதிகாரப்பரவலாக்கத்தை இன்னும் விரிவுபடுத்தி, சிறுபான்மை சமூகம் இந்த நாட்டிலே எல்லாவிதமான விடயங்களிலும், சுதந்திரத்தை அனுபவிக்கும் நிலையை நாம் உருவாக்க வேண்டும். - என்றார்.

## நியமனம் வழங்கல்

அம்பாறை,நவ.30

அம்பாறை, ஆலையடி வேம்பு பிரதேச மத்தியஸ்தர் சபைக்கு புதிதாக 10 உறுப்பினர்களுக்கான நியம னம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் புதன் கிழமை மகாசக்தி நிறுவன மண்டபத்தில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் ஆலை யடிவேம்பு பிரதேச செய லாளர் வே.ஜெகதீசன், அக் கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஹறாயா முகைதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, சிவன் அம்மன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள 1¼ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0772363537

(25957)(3.14)



### இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ ஐக்கியத்துவமும் (NCEASL) யாழ். போதகர்கள் ஐக்கியமும் இணைந்து நடத்தும்....

ஜெபமுகாம் - 2012 - யாழ்ப்பாணம்

இடம் : ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை - மானிப்பாய்

காலம் : 01.12.2012 ( சனிக்கிழமை)

நேரம் : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு : சகோதரன் : பிரபோஸ் : 077 3296406

**போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக உங்கள் சபை போதகர்களைத் தொடர்பு கொள்ளவும் :**

ஈச்சமோட்டை, கச்சேரி, முத்திரைச்சந்தி, இராசாவின்தோட்டம் - போதகர் : சந்திரன் : 077 5751094
பருத்தித்துறை (A.O.G.), நெல்லியடி, அச்சுவேலி - சகோதரன் : குமரன் : 077 3296408
புன்னாலைக்கட்டுவன், பலாலி றோட், பிறவுண் வீதி (கல்வாரி) : போதகர் : ஜேயாஸ் : 077 2421135
மட்டுவில், கனகம்புளியடிச்சந்தி, வேம்பிராய், மீசாலை, சாவகச்சேரி, நுணாவில் : போதகர் : ரிறேம் 077 6163169

(25956)(8.14)



### கட்டாக்காலி ஆடு!

நல்லூர் பிரதேசசபையில் கட்டாக்காலி ஆடு ஒன்று பிடித்து ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் எதிர்வரும் 05.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் தகுந்த ஆதாரத்துடன் அலுவலகத்துக்கு சமுகமளித்து பெற்றுச்செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் 06.12.2012 ஆம் திகதி மு.ப. 10.30மணிக்கு ஏல விற்பனைக்கு விடப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

தலைவர்.
நல்லூர் பிரதேசசபை.

(c/3123)(6.4)



### திருநெல்வேலி அபான்ஸ் வழங்கும் மாபெரும் நத்தார் சேல்




12 மாதங்கள் வட்டி இன்றி மாதாந்த தவணைக் கொடுப்பனவு முறைமூலம் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள் திருநெல்வேலி அபான்ஸ்

269, பலாலி வீதி, கந்தர்மடம்.

0212220247, 0778210161

(c/1893)(9.14)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111



### மரண அறிவித்தல்

#### திருமதி திரவியநாயகம் நாகேஸ்வரி



கெற்பேலியைப் பிறப்பிடமாகவும், வங்களா வீதி, மீசாலை மேற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரவியநாயகம் நாகேஸ்வரி நேற்று (29.11.2012) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரவியநாயகத்தின் (ராசு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்தி கோசு - நாகம்மா தம்பதியரின் மகளும், ஆறுமுகம் - தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகளும், ரூபவரன் (பிரதேசசெயலகம், சாவகச்சேரி), ஆதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கல்யாணி (கனடா), புஸ்பகாந்தன் (சுவிஸ்), திருக்குமார் (குமார்), கரிதாஷ் (அப்பன் - அம்பாள் கடைச்சல் தொழிலகம், மீசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், கேதீஸ்வரன் (கனடா), தீபா, வாசுகிதேவி (ஆசிரியர் யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி), பிரியதர்சா ஆகியோரின் மாமியும், டிருசாத், சாருத் (கனடா), சந்தோஸ் (ஏழாலை), ருஷானி (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), கிஷானி (யா/ வீரசிங்கம் மத்திய கல்லூரி), ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30.11.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளம்.

பொன்னர் ஒழுங்கை,
மீசாலை மேற்கு,
மீசாலை. (சி/3127)(3.14)

தகவல்:
ஆ. திரவிய நாயகம்
(ராசா, கணவர்), பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11.12.1939
உதிர்வு 31.10.2012




31.10.2012 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு அண்ணாவின் இழப்பினால் துயருற்று இருக்கும் எங்கள் குடும்பத்தவருக்கு நேரிலும் தொலை நகல் மூலமும் துயரில் பங்குகொண்டு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரியரசடி வீதி,
சாவகச்சேரி. (சி/3122)(2.6)

திருமதி சுபத்திராதேவி சிவகுமாரன்.



### மரண அறிவித்தல்

#### திருமதி கந்தப்பு நல்லம்மா



மருதங்கேணி தெற்கு தாளையடியைச் சேர்ந்த திருமதி கந்தப்பு நல்லம்மா நேற்று (29.11.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்த தம்பி கந்தப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி செல்லையா இராஜேஸ்வரி, ஞானசேகரம் (ஆசிரியர், கொ/ விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம், தெமட்டகொட), குணசேகரம், நந்தகுமார் (பிரதேச செயலகம், மருதங்கேணி) மண்டலேஸ்வரன், காலஞ்சென்ற திருமதி இராமதாஸ் சாருதாதேவி, தயாநிதி, நவேந்தினி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற செல்லையா, தங்கேஸ்வரி, ஜெயந்தி, சித்ரா, ஜெயலட்சுமி, இராமதாஸ், கமலநாதன், கோமளதாசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தற்காலிக வதிவிடமாகிய திகரி, புலோலி கிழக்கு, பருத்தித்துறையில் நடைபெற்று தகனத்துக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளம்.

தற்காலிக முகவரி:
திகிரி, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (25522)(3.14)

தகவல்:
க.ஞானசேகரம்
(மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழா அழைப்பு

இல. 965, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக இயங்கிய

## சிவன் அம்மை கொம் நெற்

என்னும் எமது ஸ்தாபனம் மீண்டும்
இல.963, கே.கே.எஸ்.வீதி, யாழ்பாணம் எனும் பழைய இடத்தில் புதுப்பொலிவுடன் கூடிய வசதிகளுடன் இன்று (30.11.2012) வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.963, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (25932/2.6)
உரிமையாளர்.

# ரிஷி முக்

**வாழும் கலை அமைப்பின் மாதாந்த சஞ்சிகை**

.பண்டைய ஞானம் .ஆயுள் வேதம் .வாஸ்து சாஸ்திரம்
.ஜோதிடம் .யோகா .தியானம் .மேலும் பல !




இந்தியாவில் இருந்து வெளிவரும் ரிஷி முக் சஞ்சிகை வரும் ஜனவரி முதல் இலங்கையில் சந்தா முறையில் கிடைக்கும்.

தமிழ் - Rs-750 (வருடாந்தம்)மட்டுமே
ஆங்கிலம் - Rs-1000 (வருடாந்தம்)மட்டுமே

வருடாந்த சந்தாதாரர்களுக்கு மட்டுமே தனி பிரதி இல்லை, பதிவுகளை டிசெம்பர் 5ம் திகதிக்கு முன்னர் இங்கே செய்யவும்.

| | | |
|---|---|---|
| செந்தூரம் சுப்பர் மார்கெட் | ராஜலஷ்மி மல்ரி சென்டர் | நாவலர் |
| இணுவில் சந்தி, | நெல்லியடி சந்தி, | மணிமண்டபம் |
| இணுவில். | நெல்லியடி. | நல்லூர். |

பதிவுகளை உறுதிப்படுத்தவும், மேலும் விபரங்களுக்கு அழையுங்கள்
T.P:0771000750
(25896)(6)


# அகலத் திரையில் இராமாயணம்

வடமராட்சி,நவ.30

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் கோயில் முன்றிலில் இராமயணத் திரைப்படம் அகலத்திரையில் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை காண்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திரைப்படம் திரையிடும் ஆரம்ப விழா வ.ரதீஸ்வரன் தலைமையில் மாலை 5 மணிக்கு நடைபெறும். பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆரம்பித்து வைப்பார்.

(ம-8)

# ஒளி விழா

தென்மராட்சி,நவ.30

அமெரிக்கன் சிலோன்மிஷன்திருச்சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் முன் பள்ளி சிறார்களின் ஒளிவிழா, நாளை சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் சு.புத்தி சிகாமணி கலந்து கொள்வார்.

வழிபாட்டு நிகழ்வுகளும் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (3-9)

* * *

கொழும்புத்துறை, நவ.30

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் புனித வளனார் குருமட அதிபர் செ.அன்புராசா அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும் கலாசாலையின் ஆன்மிக குருவுமான அருட்திரு அன்ரன் ஜோர்ஜ் அடிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரதிஅதிபர்வீ.கருணலிங்கம் கிறிஸ்தவ மன்ற காப்பாளரும் விரிவுரையாளருமான அ.பீற்றர் ஆகியோரின் சிறப்புரைகள், கலை நிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.

(3-135)

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்



வையத்தின் மைந்தனாக 16.08.1963
தெய்வத்தின் சொந்தமாக 06.12.2006

## அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

(முன்னாள் ஆசிரியர்,
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை)

திதி : கார்த்திகை மாத அபரபக்க துதியை [30.11.2012]

ஓடி மறைந்தது ஆறு ஆண்டுகள் வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம் உடலில் உயிர் வாழும் காலம் வரைக்கும்
எம்முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"ரவிமஹால்"
நாவற்காடு, வரணி

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பான மனைவி மற்றும் குடும்பத்தினர்.

(25925)(6.8)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நடேசபிள்ளை



நெசவுசாலை வீதி, வீமன்காமம் தெற்கு, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடேசபிள்ளை நேற்று முன்தினம் (28.11.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைபிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனும் காலஞ்சென்றவர்களான தமோதரம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற தவமணி தேவியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நாகராஜா மற்றும் பத்மினி (கலா - கனடா), உதயகுமாரி (நுணாவில்), சாந்தகுமாரி (சுமதி - சுவிஸ்), ரசந்தினி (மல்லாகம்), குமுதினி (பிரான்ஸ்), பாமிதரன் (சுவிஸ்), சுபாதரன் (கனடா), அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(25930) (45.6.7)

சோடா கொம்பனி லேன்,
மல்லாகம்.077 9640 559

தகவல்:
ந.சுபாதரன் (மகன் - கனடா)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24.01.1956
இறைவன் அடியில் 12.12.2011


## அமரர் குமாரசாமி பத்தர் அற்புதராசா (கிப்பி)

எம் அருமை அப்பாவே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது
உங்கள் நினைவுகளுடன் வாழும்....

மீனாட்சி அம்மன் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
மனைவி, பிள்ளைகள்.

(25920/2.6)

# 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 26.10.1976
உதிர்வு 30.11.2010

## டானியல் தேவகுமார்

கர்த்தரை தேடுகிறவர்கள் ஒருபோதும்
வெட்கப்பட்டுப் போவதில்லை கர்த்தரில்
விசுவாசம் கொண்டு மரித்தோர் இறப்பிலும்
அவரது விண்ணக வீட்டில் வாழ்வர்.
என் நெஞ்சே! நீ மீண்டும் அமைதி கொள்;
ஏனெனில், ஆண்டவர் உனக்கு நன்மை செய்தார்;
என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்; என் கண்
கலங்காதபடியும் கால்கள் இடறாத படியும்
செய்தார். உயிர் வாழ்வோர்
நாட்டில், நான் கண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்
[திருப்பாடல் 116:7-9]

கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
(18063)(2.6)
பிரிவுத்துயரால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

# நீங்கா நினைவில் 31 நாள்கள்....



மலர்வு 15 ★ 08 ★ 1945
உதிர்வு 31 ★ 10 ★ 2012

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

## அமரர் ஐயாத்துரை தங்கேஸ்வரன்

(இளைப்பாறிய சிரேஷ்ட முகாமையாளர் - இலங்கை வங்கி தலைமை அலுவலகம், முகாமையாளர் - சம்பத் வங்கி, வவுனியா)

நீங்கள் மீளாத்துயில் கொண்டு மாதமொன்று ஆனதோ
முப்பத்தொரு நாள்கள் பறந்தோடிப் போனாலும்
இன்னும் பக்குவமாய்த்தான் நிற்கின்றது நீங்கள் தந்த பாசம்
இன்றும் உங்களை நெஞ்சினிக்க நினைக்கின்றோம்
முப்பத்தொரு நாள்கள் அகல விரிந்தது பார்த்திருக்கப் போனது மாதம் ஒன்று
நேற்றுப் போல் இருக்கின்றது உங்கள் மறைவு
இத்துயரை ஆற்றுவாரும் இல்லை தேற்றுவாரும் இல்லை
நீங்கள் மீண்டு வந்தால் மட்டுமே சத்தியமாய் இது சாத்தியமாகும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/3113)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறையின் வெளிப்பாடே மாணவர் மீதான தாக்குதல்கள்

## வன்மையாகக் கண்டிக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்

மன்னார், நவ. 30

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையின் ஓர் அங்கமாகவே யாழ். பல்கலைக்கழக மாணவர் மீதான தாக்குதல் சம்பவம் அமைந்துள்ளது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த 27ஆம் திகதி மாவீரர் தினத்தன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியினுள் அத்துமீறி நுழைந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் மாணவர் விடுதியினை சேதப்படுத்தியதோடு மாணவர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் அந்த மாணவர்களுக்காக ஆதரவு தெரிவித்து அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனை கற்களினால் எறிந்து தாக்க முயற்சித்ததோடு உதயன் பத்திரிகை ஆசிரியர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த ஊடகவியலாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் குறித்த சம்பவத்தைக் கண்டித்து நூற்றுக் கணக்கான பல்கலை மாணவர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்த மாணவர்கள் மீது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கண்மூடித்தமான முறையில் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதன்போது பல மாணவர்கள் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை அறிந்து மீண்டும் யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் அங்கு இராணுவத்தினரின் கண் முன்னால் அடித்து, உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்களுக்கு இராணுவம் ஆதரவாக இருந்துள்ளமை தெரியவருகின்றது. பல்கலைக்கழக மாணவர்களை அடக்கி ஆள நினைக்கும் படையினர் இவ்வாறான கலவரங்களை ஆரம்பித்து பழி தீர்க்க முனைகின்றனர்.

குறித்த சம்பவங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. இந்தச் சம்பவத்துக்கு எதிராக சர்வதேசத்தின் ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருப்பதோடு சில தினங்களில் பெரியளவிலான ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

# யாழ்ப்பாணத்தின் ஜனநாயகம் இதுவா?

## இப்படிக் கேட்கிறார் பாஸ்க்கரா

பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகை ஆசிரியர் ஆகியோர் தாக்கப்பட்டதையும் நேற்றுமுன்தினம் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிகிறோம்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினருமானசி. பாஸ்க்கரா விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசு ஜனநாயகம் நிலவுவதாக கூறிக்கொண்டிருக்கையில்- இராணுவத்தினர் பல்கலைக்கழகத்தின் சுற்றுவட்டாரத்தில் சூழவுள்ள நிலையில், அந்த இடத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் உதயன் ஆசிரியர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது எவ்வாறு?

அப்படியானால் இராணுவத்தினர் ஏன் அவர்களைக் கைது செய்யவில்லை? அரசு தாக்கியவர்களை கைது செய்யாத விடத்து அரசின் ஜனநாயகத்தின் போலித்தன்மை உலகுக்கு வெளிச்சமாகும். இவ்வேளையில் அரசு உடனடியாக செயலில் இறங்கி தாக்கப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லையேல் அரசின் மேல் குற்றச்சாட்டு விழுவது தடுக்கமுடியாது போய்விடும்.

ஜனநாயக வழியில் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் மீது பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டது ஜனநாயகப் பண்புள்ள நாட்டில் ஏற்புடையதல்ல, நியாயம் கற்பிக்கக் கூடிய ஒன்றுமல்ல.

கடந்த காலங்களில் நெல்லியடியில் நடந்த அகிம்சைப் போராட்டத்தில் கூட நூற்றுக் கணக்கான பொலிஸார் புடை சூழ நின்றபோது மோட்டார் சைக்கிளில் புலிக்கொடியுடன் வந்தவர் இன்று வரை கைது செய்யப்படவில்லை. அதேபோல் இந்தத் தாக்குதல் சூத்திரதாரியும் கைது செய்யப்படாமல் இருப்பது கண்டனத்துக்குரியது.

கொழும்பு மாநகரசபையில், ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் மீண்டும் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப் பட்ட ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது ஏற்றுக்கொள்ளக் கூடியதும், ஜீரணிக்க முடியாத தொன்றுமாகும். என்றுள்ளது. (ம)

# படையினரின் அராஜக வெளிப்பாடு

## வலி. வடக்கு பிரதேச சபை

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 28 ஆம் திகதி இராணுவப் புலனாய்வாளர்களாலும் பொலிஸாராலும் கண்மூடித்தனமாக- கோரத்தனமாக- மிலேச்சத்தனமாக- தாக்கப்பட்டுள்ளனர். இது இராணுவ அராஜகத்தின்- அடக்குமுறையின்- காட்டுமிராண்டித்தனத்தின்- வெளிப்பாடே.

வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன் வெளியிட்டுள்ள கண்டனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவப் புலனாய்வாளர்களாலும், பொலிஸாராலும் தாக்கப்பட்டமை, யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தாக்கப்பட்டமை, காரைநகர் பிரதேச சபைத் தலைவரின் வீடு எரியூட்டப்பட்டமை. உதயன் ஆசிரியர் தாக்கப்பட்டமை, மற்றும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை என்பன இராணுவத்தால் அரங்கேற்றப்பட்ட சம்பவங்கள்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் உயிர்நீத்த தமது உறவுகளுக்குத் தீபமேற்றி அக வணக்கம் செய்தனர். ஜனநாயக நாட்டில் உயிர்நீத்தவர்களுக்கு அக வணக்கம் செய்வது தப்பா?. யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் இராணுவம் உள்நுழைவதற்கு எந்த அருகதையும் இல்லை. அவர்களை உள்நுழைய அனுமதித்தது யார்? பெண்கள் விடுதிக்குள் இராணுவத்தினர் அநாகரிகமான முறையில் சென்றுள்ளார்கள். இதுதான் நாட்டின் ஜனநாயகமா? இவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் மாணவர் மனங்களில் நாட்டில் ஒரு தேசியப் பிரச்சினையை முன்னெடுப்பதற்கு உந்துதலாக அமையும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இளைஞரை கடந்த காலத்துக்கு அழைக்கிறதா இலங்கை அரசு

## மனோகணேசன் கேள்வி

யாழ். பல்கலைக்கழக விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து மாணவர்கள் மீதான தாக்குதல், மாணவர்களின் கண்டன ஊர்வலம் மீதான தாக்குதல், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் வாகனம் மீதான தாக்குதல், உதயன் ஆசிரியர் மீதான தாக்குதல், பிரதேச சபை தலைவரின் வீடு எரிக்கப்பட்டமை ஆகிய தொடர்ச்சியான வன் முறைகள், வட மாகாணத்தில் 1980 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சம்பவங்களை நினைவூட்டி, இன்று வடக்கில் இலங்கை இராணுவத்தின் ஆட்சி நடப்பதை படம் பிடித்துக் காட்டுகின்றன.

வரலாற்றில் இருந்து பாடம் படிக்காத இலங்கை அரசு மீண்டும், கடந்த காலத்துக்கு செல்வதற்கு தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றதா? அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய ரோகண விஜேவீர 1989 ஆம் ஆண்டு இராணுவத்தால் கொல்லப்பட்ட நவம்பர் 13ஐ ஒவ்வொரு வருடமும் தமது போராளிகளின் நினைவு தினமாக அனுசரிப்பதற்கு ஜேவிபியினருக்கு தென்னிலங்கையில் இருக்கும் உரிமை ஏன் தமிழ் இளைஞர்களுக்கு வடக்கில் இல்லை? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசனின் கண்டன அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலத்தை நோக்கி தமிழ் இளைஞர்களை இலங்கை அரசு திட்டமிட்டு அழைத்து செல்கிறதா என்ற கேள்வி தமிழ் மக்கள் மனங்களில் இன்று எழுந்துள்ளது. இலங்கை அரசுக்குச் சர்வதேச மன்றத்தில் பிணை வழங்கிக் காப்பாற்றிவரும் இந்தியா, அமெரிக்கா அரசுகளும், ஐக்கிய நாடுகள் சபையும், இவற்றுக்கு உரிய பதில்களை பெற்றுத்தர வேண்டும்.

வட மாகாணத்தில் தமிழ் இளைஞர்களை மீண்டும் தனித்து போராட்டக் களத்துக்கு அனுப்பி அழிக்க நினைக்கும் முயற்சிகளை தமிழ் மக்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும். கடந்த காலங்களை விட இன்று உலகம் இலங்கை தமிழர் இன்னல்களை அறிந்துள்ளது. இன்று உலகின் எரியும் பிரச்சினைகளில் ஒன்றாக ஐ.நா. சபை வரை நமது பிரச்சினை நீண்டுள்ளது. எனவே, இனியும் நமது இளைஞர்களும், மாணவர்களும் மாத்திரம் தனித்து நின்று போராட வேண்டியதில்லை.

இளைஞர்களை போராடத் தூண்டிவிட்டு அழிக்கும் அரசின் இந்த நோக்கத்தை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இளைஞர்களை மாத்திரம் போராட அனுப்பிவிட்டு, காத்திருக்காமல் தலைவர்களுடன் கரம் கோர்த்து அனைத்து தரப்பு தமிழ் மக்களும் சாத்வீகரீதியாக அணிதிரள்வதன் மூலமாகவே ஓர் இனமாக இந்த நாட்டில் நாம் வாழ முடியும். அதற்கானவேளை இன்று வந்துவிட்டது.- என்றுள்ளது. (ம)

# சர்வதேச நாடுகள் பதில்தர வேண்டும்

## இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணி

ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி யாழ்.பல்கலை மாணவர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இவர்கள் மீது சீருடைதாரிகள் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த விடயத்தை அறிந்து அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனின் வாகனமும் உடைக்கப்பட்டது.

இதற்கு முதல் நாள் உதயன் பத்திரிகை ஆசிரியர் தாக்கப்பட்டார். பிரதேச சபைத் தலைவரது வீடும் எரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலை இதுதானா. இலங்கையின் ஜனநாயகம் இதுதானா?

இதற்கு இலங்கை அரசு மட்டுமல்ல தமிழரது போராட்டத்தை மௌனிக்க உதவிய நாடுகளும் ஏனைய சர்வதேச நாடுகளும் பதில் தரக் கடமைப்பட்டவர்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன விடுதலைக்காக உழைத்திட்ட உடன்பிறப்புக்களுக்காக தீபமேற்றி அஞ்சலி செலுத்த முயன்றதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீது குற்றம் சாட்டியவாறு பல்கலைக்கழக விடுதிகளை போர் வலயங்களை போன்று மிகப்பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது மாதிரி சுற்றிவளைத்து நின்ற இலங்கை இராணுவத்தினரும் அவர்களது புலனாய்வாளர்களும் ஒட்டுக் குழுவினரும் மிகப்பெரும் அட்டூழியங்களை அரங்கேற்றுவதற்காகத் தயார் நிலையில் நின்றனர். விடுதிகளில் தீப ஒளிகளை கண்டதும் பொறுக்க மாட்டாதவர்களாய் தமது வழமையான செயற்பாடுகளை ஆரம்பித்தார்கள்.

அந்த நேரத்தில் தான் சம்பவத்தை அறிந்து நியாயத்தை மக்களுக்கு உரைத்திடும் நோக்கோடு பத்திரிகையாளர்கள் அந்த இடத்துக்கு சென்றார்கள். அவ்வேளையில் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரியர் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது.

இது ஒரு பத்திரிகையாளர் மீதான தாக்குதல் மட்டுமல்ல, மாறாக மக்களின் கருத்தறியும் உரிமை அவர்களின் ஜனநாயக உரிமைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் அடி என்பதே உண்மையாகும்.

அதுவும் தான் ஒரு பத்திரிகையாளர் என்பதைத் தெரிந்ததன் பின்னரும் அவர் மீதும் அடி விழுந்திருக்கிறது. அதே சமயம் எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் உடனடியாகவே அந்த இடத்துக்கு சென்றபோது அவர் மீதும் தாக்குதல் மேற் கொள்ள முயற்சிக்கப்பட்டபோதும் அவரது மெய்பாது காவலர்களால் அவர் காப்பாற்றப்பட்டார்.

இதற்கான பதில்களைச் சர்வதேச நாடுகள் தரக் கடமைப்பட்டுள்ளன- என்றுள்ளது. (ம)

# கேள்விக்குறியாக்கப்படும் ஊடக சுதந்திரம்

## தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம்

அம்பாறை,நவ.30

தமிழ் பேசும் மக்ளின் குரலாக வடக்கிலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழின் ஆசிரியர் 'உதயன்', 'சுடரொளி' நாளிதழ்களின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோர் மீது யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் மிலேச்சத்தனமானதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

இவ்வாறு தென் கிழக்கிலங்கைசெய்தியாளர்சங்கம்விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எத்தகையோராகினும் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கில் 'உதயன்' போன்ற மக்கள் குரலாக வெளிவரும் பத்திரிகைகளை அடக்கி, ஒடுக்கி மண்டியிடவைக்க எடுக்கப்படும் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஒன்றே நடைபெற்றுள்ள தாக்குதல் சம்பவமாகும்.

வடக்கு மக்களின் வாழ்வோடு, அவர்களது, உணர்வுகளோடு, தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தோடு பின்னிப்பிணைந்து ஜனநாயகக் குரலாக 'உதயன்' வெளிவந்து கொண்டிருக்கின்றது.


இதன் குரல் வளையை நசுக்கும் வண்ணம் பல்வேறு தாக்குதல் சம்பவங்களைச் சந்தித்தபோதும் நிலைகுலையாது நெஞ்சு நிமிர்த்தி தன் மக்கள் சேவையை 'உதயன்' முன்னெடுத்து வருகின்றது.

[illegible] திகழும் ஆசிரியர், நிர்வாக இயக்குநரை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல் பெரிதும் விசனிக்கத்தக்கதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

இந்த அட்டூழியம், அநியாயம், அராஜகத்தின் தொடர்ச்சியாகவே ஊடக சுதந்திரத்தைக் கேள்விக்குறியாக்கும் வகையில் இந்தத் தாக்குதல்கள் அமைந்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்படும் காலம் இந்த நாட்டில் என்றுதான் [illegible] வேண்டிய நிலையே உள்ளது- என்றுள்ளது. (ம-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளைஞர் விவகார அமைச்சு, மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன இணைந்து 24 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவை நடத்தின. இதன் ஓர் அங்கமாக நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாமிடம் பெற்றுக் கொண்டது யாழ். மாவட்ட தேசிய இளைஞர் மன்ற அணி. வெற்றியீட்டிய அணியின் வீரர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண உதவிக் கணக்காளர் சி.இரட்ணகுமார், கோப்பாய் பிரதேச இளைஞர் உத்தியோகத்தர் சண்முகவடிவேல், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் தம்பிராஜா ஈஸ்வரராஜா மற்றும் பயிற்றுநர் ரமணனுடன். (ந-23)

# அமிலனின் அபாரமான 6 கோல்கள் அடங்கியது அரியாலை ஐக்கியம்

## சென்.நீக்கிலஸுக்கு இலகு வெற்றி

**எதிரணியின் எல்லா வியூகங்களையும் உடைத்தெறிந்துகொண்டு, கோல் கம்பம் வரை பந்தை இலாவகமாக நகர்த்திச் சென்ற அமிலன் அடுத்தடுத்து கோல் மழை பொழிந்தார். அவரின் கோல் பெறும் வேகத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் திணறியது அரியாலை ஐக்கியம் அணி.**

யாழ்ப்பாணம்,நவ.30

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அமிலனின் 6 கோல்களினால் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி.

யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர் ஒன்றை நடத்திவருகின்றது. இதில் நேற்று வியாழக்கிழமை குருநகர் பாடு மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதல் பாதி ஆட்டத்திலேயே இரு அணியினரும் ஆக்ரோஷமாக விளையாடத் தொடங்கினர். எனவே போட்டியின் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை பரபரப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. பார்வையாளர்களின் உற்சாகப்படுத்தல்களுக்கு இடையே வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிடங்களுக்குள் அரியாலை ஐக்கியத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது சென்.நீக்கிலஸ் அணி. அந்த அணியின் வீரன் அமிலன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார்.

ஆனால் அரியாலை ஐக்கியம் சோர்ந்துவிடவில்லை. எப்படியும் பதிலடி கொடுத்தே தீருவது என்ற வெறியோடு அந்த அணியின் வீரர்கள் பந்தை நகர்த்திச் சென்றனர். இந்த முயற்சிக்கு வெற்றியும் கிடைத்தது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வீரர்களான சஞ்செயன், தீபன் தலா ஒவ்வொரு கோல்களை அடுத்தடுத்து அடிக்க அந்த அணி ஒரு கட்டத்தில் 2:1 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது. எனவே இந்தப் போட்டியின் இறுதியிலும் அரியாலை ஐக்கியமே வெல்லப்போகிறதோ என்ற எண்ணம் பார்வையாளர்களிடத்தே எழுந்தது.

ஆயினும் அந்த ஊகங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தனர் சென்.நீக்கிலஸ் அணி வீரர்களான அஜந்தனும் றெக்ஸ்மனும். இவர்கள் இருவரும் தமது பங்குக்கு ஒவ்வொரு கோல்களை அடிக்க மீண்டும் நீக்கிலஸ் அணி ஐக்கியத்தை பின் தள்ளிவிட்டு முன்னிலை பெற்றது.

அதன் பின்னரும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்.நீக்கிலஸ் அணி வீரன் அமிலன் முதல்பாதி ஆட்டத்தின் கடைசிக் கணங்களில் இரண்டு கோல்களை அடித்தார். அமிலன் முதல் பாதி ஆட்டத்தில் அடித்த இந்த ஹட்ரிக் கோல்கள் மூலம் முதல்பாதி ஆட்டத்தில் சென்.நீக்கிலஸ் அணி 5:2 என்ற ரீதியில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியினருக்கு ஓர் தண்டனை உதை கிடைத்தது. அதனை சஞ்செயன் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணியின் 3 ஆவது கோலினை அடித்தார். அத்துடன் இந்தப் போட்டியில் சஞ்செயன் அடித்த 2 ஆவது கோல் இதுவாகும்.

எனினும் சஞ்செயனுக்கு பதிலடி கொடுத்தார் அமிலன்.

எதிரணியின் எல்லா வியூகங்களையும் உடைத்தெறிந்துகொண்டு, கோல் கம்பம் வரை பந்தை இலாவகமாக நகர்த்திச் சென்ற அமிலன் அடுத்தடுத்து கோல் மழை பொழிந்தார். அவரின் கோல் பெறும் வேகத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் திணறியது அரியாலை ஐக்கியம் அணி.

ஏற்கனவே முதல்பாதி ஆட்டத்தில் ஹட்ரிக் கோல்களை அடித்திருந்த அமிலன், தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் மேலும் மூன்று கோல்களை பெற்றார். இதன் மூலம் இந்தப் போட்டியில் 6 கோல்களை அடித்து அசத்தினார் அமிலன். அதன் பின்னர் சரிவில் இருந்து மீண்டுவர அரியாலை ஐக்கியம் அணியால் முடியவில்லை.

எனவே ஆட்ட நேர முடிவில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 8:3 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி, அபார வெற்றியீட்டியது. (ந-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பி.ப. 3.45 மணி

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் எதிர் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம். (ந-23)

# நியூஸ்ரார் வெற்றிக் கிண்ண 20/20 அரையிறுதி நாளை

யாழ்ப்பாணம்,நவ.30

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் '20/20'கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று நாளை சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ந-23)

**சிவகோசரியார் கிண்ண உதைபந்து**

# ஆண், பெண் பிரிவுகளில் சாவகச்சேரி இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.30

அமரர் கே. சிவகோசாரியார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக, தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளிலும் சாவகச் சேரி இந்துக் கல்லூரி வெற்றிக் கொடி நாட்டி, சம்பியனானது.

கடந்த வாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்தச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவுவரை எதுவித கோல்களையும் பெறவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற கோல்கணக்கில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அணியை வீழ்த்தி சம்பியனானது.

தொடர்ந்து இடம் பெற்ற ஆண்கள் பிரிவின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் நாவற்குழி மகாவித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் நாவற்குழி மகா வித்தியாலய அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதன் போதும் இரு அணியினராலும் ஆட்ட நேர முடிவு வரை எதுவித கோல்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல்கணக்கில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அணியை வெற்றி கொண்டு சம்பியனானது.

தொடர்ந்து இடம் பெற்ற பெண்களுக்கான மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் நாவற்குழி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் நாவற்குழி மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ந-23)

# ஜெகநாதன் கிண்ண கரப்பந்து சனிக்கிழமை போட்டி விவரம்

யாழ்ப்பாணம்,நவ.30

கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெகநாதனின் 23 ஆவது ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் நாளை சனிக்கிழமை மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பன்னாலை கணேசா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணி அன்றைய தினம் 3 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியுடன் மோதவுள்ளது.


மேற்படி போட்டியில் வெற்றிபெறும் அணி அன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும் அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி 'ஏ' அணியுடன் மோதும். (ந-23)



... பெண்கள் பிரிவில் 4 ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்ட சாவகச்சேரி ... ஆசிரியர்கள், பயிற்றுநர் மற்றும் திணைக்கள அதிகாரிகளுடன் (ந-86-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் மண்டியிட்டது இலங்கை





அஞ்சலோ மத்தியூஸ்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நியூஸிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 167 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி ரோஸ் ரெய்லர், வில்லியம்ஸன் ஆகியோரின் சதங்கள், டானியன் பிளைனின் அரைச்சதம் ஆகியவற்றின் துணையோடு 412 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 6 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.


தனத முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 244 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணி சார்பாக திலான் சமரவீர 76 ஓட்டங்களையும், அன்ஜலோ மத்தியூஸ் 47 ஓட்டங்களையும், தரங்க பரணவிதான 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக சவுத்தீ 5 இலக்குகளையும், போல்ட் 4 இலக்குகளையும் கைப்பற்றினர். இதன் பின்னர் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது. நியூஸிலாந்து அணி சார்பாக ரெய்லர் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 3 இலக்குகளையும், சுராஜ் ரந்தீவ், நுவான் குலசேகர ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். 363 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 195 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 167 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது, இலங்கை அணி சார்பாக அன்ஜலோ மத்தியூஸ் போராடிய போதிலும் ஏனைய வீரர்கள் ஓட்டங்களைப் பெறத் தவற இலங்கை அணி தோல்வியைச் சந்தித்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக அன்ஜலோ மத்தியூஸ் 84 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எந்த வீரரும் 30 ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை. பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சவுத்தீ, போல்ட் தலா 3 இலக்குகளையும், டக் பிரேஸ்வெல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக நியுசிலாந்து அணியின் தலைவர் ரெய்லரும், போட்டித் தொடரின் நாயகனாக ரங்கன ஹேரத்தும் தெரிவாகினர். 2 போட்டி கொண்ட இந்தத் தொடரை இரு அணிகளும் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# ஆடுகளப் பராமரிப்பாளர் இடமாற்றம்




இந்திய அணித்தலைவர் டோனியின் வேண்டுகோளுக்கு ஒத்துழைக்காத ஈடன் கார்டன் ஆடுகளப் பராமரிப்பாளர் மாற்றப்பட்டதால் புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

இங்கிலாந்து தொடரில் ஆடுகளம் குறித்து தொடர்ந்து பிரச்சினை ஏற்படுகிறது. அஹமதாபாத் டெஸ்டில் சுழலுக்கு ஆடுகளம் ஒத்துழைக்க, இந்திய அணி வெற்றி பெற்றது. ஆனாலும், ஆடுகளம் எதிர்பார்த்த அளவுக்கு அமையவில்லை என்று டோனி குற்றஞ்சாட்டியிருந்தார்.

மும்பை ஆட்டத்துக்கு, பந்து முதல் நாளில் இருந்தே சுழலுமாறு ஆடுகளம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தினார். ஆனால் இந்த ஆட்டத்தில் இந்திய அணி படுதோல்வியை சந்தித்தது.

இருப்பினும், தனது நிலையை மாற்றிக் கொள்ளாத டோனி, கொல்கத்தாவில் நடைபெற உள்ள மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கும், முதல் நாளில் இருந்தே சுழலுக்கு ஏற்ற ஆடுகளத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கு ஈடன் கார்டன் ஆடுகளத் தயாரிப்பாளர் பிரபிர் முகர்ஜி, எழுத்து பூர்வமாக கடிதம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இந்த விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) டோனிக்கு ஆதரவாக களமிறங்கியது. பிரபிர் முகர்ஜிக்குப் பதில், கிழக்கு மண்டல தயாரிப்பாளர் ஆஷிஸ் பவுமிக்கை ஆடுகளப் பராமாரிப்பாளராக நியமிக்குமாறு, மேற்குவங்க கிரிக்கெட் சங்கத்தை (சி.ஏ.பி.,), கேட்டுக்கொண்டது.

இதுகுறித்து சி.ஏ.பி., இணைச்செயலர் சுஜான் முகர்ஜி கூறுகையில், ஒவ்வொரு போட்டி நடக்கும் முன்பும், ஆடுகளம் எப்படி உள்ளது என்பதை பார்க்க, மற்றவர்கள் வருவது வழக்கமானது தான். பிரபிர் முகர்ஜி ஆடுகளத் தயாரிப்பாளராக தொடர்கிறார். உள்ளூர் அணிக்கு சாதகமாகத் தான் ஆடுகளம் அமைக்கப்படும், என்றார்.

பி.சி.சி.ஐ துணைத் தலைவர் ராஜிவ் சுக்லா கூறுகையில், அனைத்து ஆடுகளத் தயாரிப்பாளர்களும் சுதந்திரமாக பணி செய்கின்றனர். இதில் டோனி தலையிடுகிறார் என்பது தவறானது.

யாருடைய அறிவுரைப்படியும் எந்த முடிவும் எடுக்கத் தேவையில்லை. பி.சி.சி.ஐ., மைதான மற்றும் ஆடுகள குழு இதுகுறித்து முடிவு செய்யும் என்றார். (5)

# இந்தியாவில் திறமையான வீரர்கள் இல்லை

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி தோற்றதால் கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

மும்பை டெஸ்டில் ஏற்பட்ட மோசமான தோல்வி காரணமாக கொல்கத்தாவில் நடைபெறும் மூன்றாவது டெஸ்டுக்கான இந்திய அணியில் மாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தெரிவு குழுவினர் அணியில் எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் மோசமான நிலையில் இருப்பதாகவும், சரியான மாற்று வீரர்கள் இல்லை என்றும் முன்னாள் அணித்தலைவரும், முன்னாள் தெரிவு குழு தலைவருமான துலீப் வெங்சர்க்கார் ஆதங்கப்பட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இந்திய கிரிக்கெட் தற்போது மோசமான நிலையில் இருக்கிறது. மோசமாக விளையாடும் வீரர்களை நீக்கிவிட்டு அவர்களுக்கு பதிலாக மாற்று வீரர்களை தெரிவு செய்ய முடியவில்லை.

ஏனென்றால் சரியான மாற்று வீரர்கள் இல்லை. சிறப்பாக ஆடக்கூடிய வீரர்கள் இல்லாமல் வெறிச்சோடி கிடக்கிறது. இதனால் தான் மோசமாக விளையாடும் வீரர்கள் தொடர்ந்து நீடிக்கிறார்கள்.

கிரிக்கெட் நிர்வாகிகள் சிறந்த வீரர்களை உருவாக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்த டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியை சரியான முறையில் தயார்படுத்திக் கொள்ளவில்லை.

இந்திய அணியின் பயிற்சியாளரான பிளட்சர் அணியில் எதற்காக இருக்கிறார் என்றே தெரியவில்லை.

கொல்கத்தா டெஸ்டில் எந்த வீரராவது மோசமாக ஆடும் பட்சத்தில் ரஹானேவுக்கு 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்பு கொடுக்கலாம் என்றும் இவர் டெஸ்டில் விளையாட தயாராக உள்ளார் எனவும் கூறியுள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவடைந்தது பொன்டிங் சகாப்தம்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் பேர்த் டெஸ்ட் ஆட்டத்தோடு சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொன்டிங் அறிவித்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக தன்னால் அணிக்குத் தேவையான திறமை வெளிப்பாடுகளை வழங்க முடிந்திருக்கவில்லை எனவும், ஆஸ்திரேலிய அணியின் வெற்றிகளுக்குப் பங்களிப்பு வழங்க முடியாத நிலையில் ஓய்வுபெறும் முடிவை எடுத்துள்ளதாகவும் றிக்கி பொன்டிங் அறிவித்துள்ளார்.

நீண்ட, ஆழமான சிந்தனைகளுக்குப் பின்பு இந்த முடிவை எடுத்ததாகத் தெரிவித்த றிக்கி பொன்டிங், ஏராளமான விடயங்களைக் கருத்திற் கொண்டதாகவும், இறுதியில் இந்தத் தொடரில் தனது திறமை வெளிப்பாடுகள் இந்த முடிவுக்குத் தன்னைச் சம்மதிக்க வைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவிற்கெதிராக ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் டெஸ்ட் தொடரின் 3 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய றிக்கி பொன்டிங் 0, 4, 16 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தார். இந்த ஓட்டங்களும், இவற்றில் தான் ஆட்டமிழந்த முறைகளும் தனக்கு அதிக வருத்தத்தை ஏற்படுத்தியதாக றிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.

167 டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய றிக்கி பொன்டிங் 41 சதங்கள், 62 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 52.21 என்ற சராசரியில் 13,366 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

தவிர, 375 ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 30 சதங்கள், 82 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 42.03 என்ற சராசரியில் 13,704 ஓட்டங்களையும் குவித்துள்ளார். (5)

# டோனிக்கு தலை வணங்கும் ஹர்பஜன்

இங்கிலாந்துக்கு எதிராக மும்பையில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்தது.

இதனால் இந்திய அணித்தலைவர் டோனி கடும் விமர்சனத்துக்கு ஆளானார்.

இவருக்கு ஆதரவு அளித்து சகவீரர் ஹர்பஜன் சிங் கூறுகையில், வெற்றி, தோல்வி என்பது சகஜம். ஒரு போட்டியில் கண்ட தோல்வியை வைத்து அந்த அணியின் அணித்தலைவரை விமர்சனம் செய்வது தவறானது.

இவரது தலைமையில் தான் கடந்த ஆண்டு இந்திய அணி, உலகக் கிண்ணத்தை வென்று சாதித்தது. உலகின் தலைசிறந்த அணித்தலைவர்களில் இவரும் ஒருவர். ஒரு போட்டியில் பெற்ற தோல்வியின் அடிப்படையில் இவரது திறமை குறித்து கேள்வி எழுப்புவது சரியல்ல.

முன்னதாக இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் அதிக போட்டிகளில் வீழ்த்தி உள்ளோம். அப்போது அந்த அணியின் அணித்தலைவர் இவ்வாறு விமர்சிக்கப்பட்டது கிடையாது.

மும்பை டெஸ்டில் செய்த தவறுகளை திருத்திக் கொண்டு, கொல்கத்தா டெஸ்டில் முழுத்திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற போராடுவோம் என்று கூறியுள்ளார். (5)



# வேகப்பந்து வெற்றியைக் கொடுக்கும்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி அங்கு வைத்து வேகப்பந்து வீச்சாளர்களின் துணையோடு இந்திய அணியை வெற்றிகொள்ள எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர்கள் இந்தியாவில் வைத்து இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கெதிராகச் சிறப்பாகப் பந்துவீசியுள்ளதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், இந்த முறையும் அதேபோல் வேகப்பந்து வீச்சாளர்களின் துணையோடு இந்தியாவுக்கெதிரான தொடரில் களமிறங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணியில் மிகச்சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் காணப்படுகின்ற போதிலும், ஆசிய அணிகளுக்கெதிராக அவர்கள் மிகச்சிறந்த பெறுபேறுகளைக் கொண்டிருக்கவில்லை என்று ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

சயிட் அஜ்மல், சயிட் அப்ரிடி ஆகியோர் உலகத்தரம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர்கள் என்பதில் சந்தேகமில்லை எனத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், ஆனால் ஏனைய அணிகளுக்கெதிராக அவர்களது பெறுபேறுகளவிற்கு ஆசிய அணிகளுக்கெதிராக பெறுபேறுகள் அமைந்திருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (5)

# பயிற்சியாளர் மாற்றம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஒருநாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஆஷ்லி ஜைல்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' அணிகளை பயிற்றுவித்து வந்த அன்டி பிளவருக்கு ஓய்வினை வழங்கும் பொருட்டே ஆஷ்லி ஜைல்ஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஷ்லி ஜைல்ஸ் ஒருநாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டிக்கான பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அவர் அன்டி பிளவரின் கீழேயே செயற்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் 3 வகையான அணிகளுக்கான பயிற்றுவிப்பாளராக, இங்கிலாந்தின் முகாமைத்துவ பணிகளில், இங்கிலாந்து அணியின் தயார்படுத்தல்களில் என அன்டி பிளவர் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்த நிலையில் அவருக்கான ஓய்வினை வழங்குவதற்காகவும், நீண்ட காலத்துக்கு அவர் தொடர்ந்து செயற்பட வசதியை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணி சார்பாக 54 டெஸ்ட் போட்டியிலும், 62 ஒருநாள் சர்வதேச போட்டியிலும் பங்குபற்றிய இடதுகை சுழற்பந்து வீச்சாளரான ஆஷ்லி ஜைல்ஸ், தற்போது இங்கிலாந்தின் தேர்வாளர்களில் ஒருவராவார். (5)


எடிசன் கல்லூரி
கிளிநொச்சி
(வலயக்கல்விப் பணிமனை முன்பாக)
கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றது
BY.யாழ்.பிரபல ஆசிரியர் திரு.தவசேகர்
காலம்-ஞாயிறு பிற்பகல்1.30 மணிக்கு
0775483470
(26106)

KASPERSKY 2013 AntiVirus Internet Security
★நான்கு மாதகால அதிகரிப்பு
★விசேட விலைக்கழிவு
★கணினிகளுக்கு அதிகூடிய பாதுகாப்பு உத்தரவாதம்
# 269E, Palay Road,
Kantharmadam Jaffna.
northern PC PARK T.P : 077 7570124, 021 222 0388

B.A. Part - I யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
✱ கடந்த வாரம் பரீட்சைக்குத் தோற்றிய G.A.Q. மாணவர்களுக்கான வகுப்பு
✱ விரிவுரைகள் ஆரம்பம் 01.12.2012 காலை 8 மணி
விபரங்களுக்கு:
S. அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(25968)(3.14)

மாபெரும் கருத்தரங்கு
G.A.Q. பேரரதனை
வரலாறு S.S. தாஸ் B.A (Hons)
சனி, ஞாயிறு : 9 .00 12.00 A.m.
ஆரம்பம் 01.12.2012 சனி 9. A.m.
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
58/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை வங்கி முன்பாக.

THE SCIENCE CORNER
Clock Tower Lane - Jaffna
BIOLOGY
2013 Unite - 5 சுவாசம்
ஆரம்பம் 01.12.2012 (சனி)
சனி, ஞாயிறு 9.30 - 10.45
2013 Day Batch
ஆரம்பம் 03.12.2012 திங்கள்
திங்கள் தொடக்கம் வெள்ளி
7.00 am - 8.00 am
(சி/3119)(3.14)
By: சு.பொன் திவாகரன்

கிராம சேவகர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
✱ யாழ். நகரில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் ஒவ்வொரு சனியும் 12.30 - 4.30 மணிவரை
✱ கிளிநொச்சியில் எடிசன் கல்லூரியில் ஒவ்வொரு ஞாயிறும் 1.30 - 4.30 மணிவரை
✱ நெல்லியடியில் வழிகாட்டி நிலையத்தில் ஒவ்வொரு திங்கள் 3.00 - 5.30 மணிவரை
தொடர்பு: 0754164561

புதிய கல்வியாண்டு - 2013
யாழ் நகரில் சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ்
கல்வியிலும் ஒழுக்கத்திலும் முன்னணி வகிக்கும்
எமது நிறுவனத்தில் உங்கள் பிள்ளைகளையும் இணையுங்கள்
எமது வழமையான ஆசிரியர் குழாமின் சிறப்பான வழிகாட்டலில்
தரம் 4 முதல் O/L வரை
தமிழ்மொழிமூல வகுப்புக்கள்
GRADE 6 - O/L
ENGLISH MEDIUM CLASSES
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 05.12.2012 புதன்கிழமை
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. முற்கூட்டியே பதிவு செய்க.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"
சயன்ஸ் அக்கடமி
அரியாலை, நாவலர் வீதியில்

The Science Corner
Clock tower Lane,Jaffna.
Physics-K.Selvan B.Sc(Hons)
அலைகளும், அலைவுகளும்
Batch-I சனி,ஞாயிறு 11.00-12.00
Batch-II செவ்வாய்,வியாழன் 6.30a.m-7.30a.m
ஆரம்பம்-01/12/2012 (சனி)
(c/3124)(5.6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.